www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JuDG

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

செப்.28–ஒக்.04,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 224

## அதிரடிச் சமர்

## கணக்கிடப்படும் காலடிகள்



## குஷ்பாஞ்சலி



## அரண்மனை இரகசியம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வெறுங்கையால் முழம் போடல்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"அரசியல் தீர்வு யோசனைகளை
நாட்டு மக்களில்
பெரும்பான்மையானோரும்
சர்வதேச சமூகத்தினரும்
ஏற்றுக்கொண்டுள்ளனர்"
என்று கூறியுள்ளார் ஜனாதிபதி.
மலேசிய விஜயத்தின்போதுதான்
ஜனாதிபதி அவ்வாறு அறிவித்திருந்தார்.
மலேசிய அரசுக்கு
நம்நாட்டு ஜனாதிபதி
அச் செய்தியை தெரிவித்திருந்தார்.
ஆனால் நமக்கேகூட
அது ஒரு புதிய செய்திதான்!
அரசியல் தீர்வு என்பது
நம்நாட்டுக்கு தேவையான ஒன்று.
அரசியல் தீர்வில் காட்டப்படும்
இழுத்தடிப்பும், தாமதங்களும்
உருப்படியான தீர்வு பற்றிய
நம்பிக்கைகளை உருக்குலைத்துவிட்டன!
இந்நிலையில்
தீர்வு யோசனைகள்
இந்த நாட்டில் உள்ள
பெருந்தொகையான மக்களால்
ஏற்கப்பட்டுவிட்டதாக
ஜனாதிபதி கூறியிருப்பது
நமக்கெல்லாம் புதிய செய்தியா?
புதிரான செய்தியா?
ஏற்கப்பட்ட யோசனைகள்
எவை என்பதையும்
ஜனாதிபதி கூறுவாரேயானால்
நாமும் அதை அறிந்திருக்கலாம்!
போகட்டும்,
நாம் அறியாவிட்டாலும் பரவாயில்லை,
ஏற்கப்பட்டுவிட்டதாக கூறப்படும்
யோசனைகளை திட்டமாக்கி
இதுதான் தீர்வென்று முன்வைக்க
அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது?
உள்நாட்டு மக்களும்
ஏற்றுக்கொண்டுவிட்டனர்.
உலக நாடுகளும்
ஏற்றுக்கொண்டுவிட்டனர்.
அப்படியானால் யார்தான்
தடையாக இருக்கின்றனர்?
இரண்டு பெரிய தேர்தல்களில்
சமாதானத்தை விரும்பி
மக்கள் தீர்ப்பளித்துவிட்டனர்.
ஜனாதிபதியின் கூற்றின்படி பார்த்தால்
தீர்வு யோசனைகளையும்
மக்கள் அங்கீகரித்துள்ளனர்.
பின்னர் ஏன் மக்களை நோக்கி
சமாதான ஊர்திப் பவனிகள்?
தெருக்கூத்துக்கள்?
ஏன் இந்த இழுத்தடிப்பு?
ஏன் இந்த தாமதிப்பு?
நாம் அறிந்தவரை
நம் சிற்றறிவுக்கு எட்டியதுவரை
தீர்வு யோசனைகள் என்றால்
என்ன என்பதுகூட
பெரும்பாலான மக்களுக்கு
தெரியவே இல்லை!
ஆளும் தரப்பினருக்குக்கூட
நியாயமான தீர்வுத் திட்டம்
எப்படி அமைய வேண்டும் என்பதில்
தெளிவான நோக்கம் கிடையாது!
தீர்வுத்திட்டத்துக்கு
ஆதரவு தருமாறு
சில அமைச்சர்கள் கோருவதாக
கூட்டங்களில் உரையாற்றுவதாக
பத்திரிகைகளில் செய்தி வருகிறது?
அவர்கள் அறிந்தே
நம்மை ஏமாற்றுகிறார்களா?
அல்லது அறியாமல்
தங்களையும் ஏமாற்றிக் கொள்கிறார்களா?
தீர்வுத் திட்டம் என்பதே
இதுவரை பூர்த்தியாகவில்லை.
அரசேகூட இறுதியான திட்டம்
எப்படியிருக்க வேண்டும் என்பதில்
ஒரு முடிவுக்கு வரவேயில்லை.
பின்னர் எந்தத் திட்டத்தை
ஆதரிக்குமாறு கோருகிறார்கள்?!,
அரசு முன்வைத்த தீர்வுயோசனைகள்
சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு
அனுப்பப்பட்ட நோயாளியின்
நிலையில்தான் இருக்கிறது!
உயிர் தப்பி மீண்டுவருமா
அல்லது அங்கங்கள் பங்கமாகுமா
உருக்குலைந்துதான் மீளுமா
என்பதெல்லாம் யாரறிவார்?
ஆனால் அரசோ
வெளியுலகம் முன்பாக
பிரசார முரசு கொட்டி
வெறுங்கையால் முழம்போடுகிறது!
அரசின் பிரசாரங்களை
கேள்விக்குள்ளாக்கி
நம் தரப்பு நியாயத்தை
எடுத்துச் சொல்ல எவருமில்லர்!'
தமிழ்க் கட்சிகள்
அரசு பிரசார முரசு கொட்ட
தாமும் ஒத்து ஊதுகின்றன!
அதுதான் வெறுங்கையால்
முழம்போட ஏதுவாகியுள்ளது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பாவ இருள்!

"உம்முடைய வசனம்... என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது." (சங்119:105)

இன்றைக்கு நாம் வாழும் உலகமானது ஆத்மீக பிரகாரமாக பாவ இருளினால் மூடப்பட்டுள்ளது. இருள் பாவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. பூமியில் இருள் சூழ்ந்து கொள்ளும்போது, இருளை அகற்றமுற்படும் மனிதனோ தன் ஆத்மீக வாழ்க்கையில் சூழ்ந்திருக்கும் பாவ இருளைக் குறித்து அக்கறையற்றவனாகவே ஜீவிக்கிறான். "இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது." (1 யோ 5:19). இப் பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் மனிதர்களின் மனக் கண்களை குருடாக்கியிருப்பதால் மனிதர்கள் அந்தகார இருளை உணர முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

மனுஷனுடைய ஆத்மீக வாழ்க்கையில் ஆக்கிரமித்திருக்கும் பாவ இருளை எதைக் கொண்டுமே அகற்றிவிட முடியாது. இந்த உலகத்தின் ஞானத்தினாலோ, கடும் தவமிருந்தோ, தன் சரீரத்தை பலவித துன்பங்களுக்குட்படுத்துவதாலோ, தான தருமங்களைச் செய்வதாலோ, பாவ இருளை நீக்கிவிட முடியாது. "உலகத்திலே வந்து பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோ 1:9). "நான் உலகிற்கு ஒளியாக வந்தேன்." (யோ 12:46) எனக் கூறிய கிறிஸ்து ஒருவராலேயே நம்பாவ இருளை அகற்றி வெளிச்சந்தைக் கொடுக்கமுடியும். உங்களை ஆராய்ந்து பாருங்கள்! பாவத்தினாலே உங்கள் ஆத்மீக வாழ்க்கை இருளடைந்திருக்கிறதா? உலகிற்கு வெளிச்சத்தைக் கொடுக்க வந்த கிறிஸ்துவை வாழ்க்கைக்குள் வரவிடுங்கள்!

தி.பெஞ்சமின் தேவபாலன், மட்டக்களப்பு.



## ஜமா அத் தொழுகையின் மகிமை!

ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது: "மூன்று காரியங்கள் இருக்கின்றன. அவற்றின் நன்மைகளை மக்கள் விளங்கினால் சண்டை செய்தாவது அதை அடைய முற்படுவார்கள். 1) பாங்கு சொல்வது, 2) ஜமா அத்துத் தொழுகைக்காக நடுப்பகலில் (வெயிலில்) செல்வது, 3) ஜமா அத் தொழுகையை முதல் வரிசையில் தொழுவது."

இரண்டு, மூன்று நபர்கள் சேர்ந்து வீட்டிலோ, கடையிலோ ஜமா அத்தாக தொழுது கொண்டாலே போதுமென்று நினைப்பவர்கள் இரண்டு வித நன்மைகளை இழந்துவிடுகிறார்கள். முதலாவதாகப் பள்ளிவாசலுக்குச் சென்று தொழும் நன்மை கிடைப்பதில்லை.

இரண்டாவது-பெரிய ஜமா அத்தின் நன்மைகளையும் இழக்க நேரிடுகிறது. ஜமா அத்தில் எவ்வளவு அதிகமானவர்கள் தொழுகிறார்களோ அந்த அளவு அல்லாஹ்விற்கு அது பிரியமானதாக இருக்கிறது.

அல்லாஹ் 3 வகையினரைப் பார்த்து மகிழ்வு அடைகிறான்.
1) ஜமா அத் தொழுகையின் அணி, 2) நடு இரவில் எழுந்து 'தஹஜ்ஜுத்' தொழுபவர், 3) அல்லாஹ்வின் பாதையில் 'போர் செய்பவர்' என்று ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல.221

பரிசுக்குரிய கவிதை

### எங்கே சுதந்திரம்?

மீட்டுக் கொண்ட இலங்கைக்கு
ஆண்டுகளும் ஐம்பதாச்சு!-நமக்குள்
பூட்டிக் கொண்ட விலங்குகளின்
திறப்புக்களைத் தொலைச்சாச்சு!

திருமதி கிருஷ்ணன் ராஜேஸ்வரி-
பூவரசங்குளம், வவுனியா.



### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**உடைத்தெறிவோம்!**

உரிமைக் குரலடக்க
உருக்குச் சங்கிலியால்
பிணைத்தோர் பெயரெதையும்
பிற்காலம் சொல்வதில்லை!
பிற்காலம் சொல்வதெல்லாம்
உருக்குச் சங்கிலியை
உடைத்தெறிந்து உரிமைதனை
படைத்தோர் பெயர் மட்டுந்தான்!

அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்,
கண்டி.

**தகவல்**

பூமியில்
பூட்டுக்களின
உற்பத்தி அதிகரித்துள்ளது!

சில்வெஸ்டர் மேரி கிறிஸ்டி-
கல்லடி, மட்டக்களப்பு.

**விலங்கென்ன செய்யும்?**

ஞாலத்தில் மற்றோர்க் காக
நாளெலாம் உழைத்து வாழும்
காலத்தை வென்றோர்க்(கு) இந்தக்
கைவிலங்(கு) எதுதான் செய்யும்?

ச. வித்தியாசாகரன்-
ஹைலண்ட் மத்திய கல்லூரி, ஹட்டன்.

**கைதும் காரணமும்!**

கைதியாய் ஆனேன் நானும்
காரணமும் சொன்னார்கள்
'குண்டு குண்டாய்' கையெழுத்தாம்!

ஆர். சேதுராமன்-
தெஹிவளை.

**இலவச வளையல்**

தலை நகரில் தஞ்சம் கொள்ளும்
தமிழ்பேசும் இளைஞர்க் கெல்லாம்
இலவசமாய் வழங்கப்படும்
இரும்பு வளையல் இது!

ச. மகாலிங்கம்-
வெலிமடை குரூப்,
வெலிமடை.

**கை விலங்கு!**

பேரினவாத வாழ்க்கையிலே
இனவாதம் பூட்டிய கைவிலங்கு!
மிதவாதமில்லாத மனிதரிடையே
யார்வாதம் செய்வது இதற்காக?

நெ. லோஜனா-கொழும்பு-15.

**வேண்டும் இனி...**

வெள்ளையனை வெளியேற்றி
அரை நூறு ஆகுது- ஆயினும்
அன்று போன சுதந்திரம்
இன்றும் மீளவில்லையே?

செல்வி வி.விஜயரூபி- கரவெட்டி.

**எப்போது?**

அடிமை விலங்கு
ஒடிவதெப்போ...?-எம்
அவல நிலை
முடிவதெப்போ...?

செ. ஞானராசா-
மடுக்கோவில், மடு.

**தகர்ப்பு!**

உடலுக்கு விலங்கிடலாம்
உணர்வுக்கு பயமிடலாம்
இருந்தாலும்
எழத்தான் செய்யும்!

சுபா வரன்-கண்டி.

## கவிதைப் போட்டி இல.224



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 04.10.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.224
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்னை தெரேசாவுக்கு முரசு தந்த அஞ்சலியும், படங்களும் கண்கள் கலங்கவைத்துவிட்டன. "உடையும் வெள்ளை, உள்ளமும் வெள்ளை, சென்றுவா அம்மா. உன் நினைவுகள் வாழும்!" முரசின் அஞ்சலி நெகிழ்வை ஏற்படுத்திவிட்டது. என்று எங்கள் தேவாலயத்திலும் பலர் பேசிக் கொண்டபோது, முரசின் நீண்டகால வாசகி என்பதால் எனக்கும் பெருமையாக இருந்தது.

செல்வி இ. ஸ்டெல்லா, நீர்கொழும்பு.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* சி. கிரவுஞ்சன், வவுனியா.
* என். மனோகரன், கனடா.
* எ. செபஸ்தியன், உக்குவளை.
* ம. கேதீஸ்வரன், வாழைச்சேனை.
* கி. கலா, கல்முனை-02.
* எம். முஸம்மில், குளியாப்பிட்டிய.
* ஆர். ரஞ்சன், மன்னார்.
* எஸ். ரூபன், மாகியப்பிட்டி.
* சி. அருள் தவராஜ், புத்தளம்.
* ஆர். கோபாலகிருஷ்ணன், அவுஸ்திரேலியா.
* கே. பிரியதர்ஷினி, எல்ல.
* முஸ்தாக் அஹமட், நிந்தவூர்.
* அப்தூன் சுபைர், தம்பலகாமம்.
* திருமதி ராதா சிவபெருமாள், டவுன்சைட் எஸ்டேட்.
* ஷர்மிலா சலாம், அநுராதபுரம்.
* சி. இராஜகுமாரி, தலவாக்கலை.
* செல்வி சிவகுரு சஷிகலா, தெமோதரை.
* க. சுதர்சன், செங்கலடி.
* ஜி. போல், கொழும்பு-13.
* கே. ரவிராஜ், நற்பிட்டிமுனை.
* தர்சினி சிவபாதம், மட்டக்களப்பு.
* எம். மதனி ஸ்மாயில், நீர்கொழும்பு.
* வி. பாலன், யாழ்ப்பாணம்.
* செல்லையா சுதாஸ், பூண்டுலோயா.
* க. நவரத்னம், ஜெர்மன்.
* பி. உதயகுமார், சவுதி அரேபியா.
* ஆ. ராஜேந்திரன், வவுனியா.
* ஏ. சேவியர், மன்னார்.
* உ. குணபாலன், கனடா.

பூலான் தேவி ஒருவிதம். கனவு மெய்ப்படவேண்டும் நாயகி சுமதி இன்னொருவிதமான பாத்திரம். இரண்டுமே அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் மறுதாக்கங்களை பிரதிபலிக்கும் பாத்திரங்களேயாகும்.

என்.எம்.றிஸ்வி, அம்பாறை.



டயானாவின் பலவிதமான தலையலங்காரம் முதற்கொண்டு, அபூர்வமான படங்களையெல்லாம் திரட்டி வெளியிட்டு அசத்திவிட்டீரே! 'முரசை' எதிர்பார்த்தோம். எதிர்பார்ப்புக்கு ஏற்ப முரசின் பாணியில் டயானா பற்றிய தகவல்களை வித்தியாசமாகத் தந்து கலக்கிவிட்டீர்!

ஜெ. ஷர்மிளா, மட்டக்களப்பு.

'ஜெயிலுக்குள் பிரேம்ஸ்' காதிலை பூ கந்தசாமியார் அந்தச் சாமியாரை புரட்டி எடுத்துவிட்டாரே! இன்னும் எத்தனை போலிச்சாமிகள் வெளியில் இருக்கிறார்கள் தெரியுமா? எந்தச் சாமியார்களையும் முரசு தூக்கிப் புகழ்வதில்லை என்பது நன்றிலும் நன்று.

கே. மாதவன், பிரான்ஸ்.

மட்டக்களப்பு மதுபானச் சாவுகள் பற்றிய முரசின் சந்தேகம் உறுதியாகிவருகிறது. விசாரணைகளைத் திசை திருப்ப முயற்சிகள் நடப்பதாக அறிகிறோம். நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய அதிகாரிகள் பலர் கைவீசிக்கொண்டு திரிகிறார்கள்.

ப. ஆதவன், மட்டக்களப்பு.

வெள்ளிவிழா கண்ட எழுத்தாளர் என் அபிமான ராஜேஸ்குமாரின் 'உடைந்த இரவு' சூப்பராகப் போகிறது. கிரைம் சக்கரவர்த்தி என்பதற்கு மற்றொரு முத்திரை.

எஸ். உதுமான், பாணந்துறை.

என் அபிமான முரசே, 'கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் தரும் 'உடைந்த இரவு' தொடர் பந்திக்குப் பந்தி சுவாரஸ்யமாக இருக்கிறது. இருந்தபோதும் தவறு செய்யும் இருவரை திருத்த முற்பட்ட பட்டாபியை கொலை செய்தது கவலையாகவுள்ளது.

ரசிகன் தரும் பூலான் தேவி மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது. மல்லாவின் மரணம்தான் வேதனையாகிவிட்டது.

பி.எம்.எம்.ஏ.காதர், எல்லை வீதி, மருதமுனை-01.

இனிய முரசே: உன்னைக் காணாது என் விழிகள் தூங்காது. நீ வாரம் தோறும் ரசிகன் மூலம் தரும் பூலானின் தொடர் என்னைச் சோகத்தில் ஆழ்த்துகின்றது. பூலானுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

செல்வி வெ.பாரதி, பள்ளிக்குடியிருப்பு.

## கயிறிழுப்பும் கழுத்தறுப்பும்

'ஒரே தேசம், ஒரே மக்கள்' கோஷம் தொடர்பாக இராஜதந்திரியின் அலசல் உண்மை உரைத்தது. அதுபோல ஆளும் தரப்பு எதிர்க்கட்சி இடையேயான கயிறிழுப்பு இனப்பிரச்சனை தீர்வுக்கான கழுத்தறுப்பாக மாறியிருப்பதையும் அரசியல் அலசல் தெளிவாக வெளிப்படுத்தியது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பில் ஐக்கிய தேசியக்கட்சியை தமிழ்பேசும் மக்கள் பெரும்பாலோர் ஆதரித்திருந்தனர். அவ்வாறிருந்தும் இனப்பிரச்சனை தீர்வில் திறந்த மனப்போக்கை அக்கட்சி கொண்டிராதிருப்பது துரதிஷ்டமானதே!

செ. விநாயகமூர்த்தி, வெள்ளவத்தை.

## ஓநாய் அழுகிறது

அமெரிக்காவின் முகமூடியை கிழித்துப்போட்ட நாரதருக்கு சபாஷ்! பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிக்கும் நாடுதான் அமெரிக்கா. தனக்குப் போட்டியாக இருந்த சோவியத் யூனியன் பல துண்டுகளாகி உடைந்தபோது சபாஷ் போட்ட அமெரிக்க அரசு அதனை ஜனநாயகப்புரட்சி என்று வர்ணித்தது. அதே அமெரிக்க அரசு ஒற்றுமைக்காகவும், நாடுகள் பிளவுபடாமைக்காகவும் உபதேசம் செய்வது, ஆடு நனையும்போது ஓநாய் அழுத கதை போன்றதே. அமெரிக்காவின் இந்த நாடகத்தை துணிந்து எதிர்க்க தமிழ் கட்சிகளோ, சில விமர்சகர்களோ தயங்கும்போது, 'முரசு' செய்த விமர்சனம் காலத்தின் அவசியமாக அமைந்தது. பாராட்டுக்கள்!

சி. சிற்றம்பலம், திருக்கோணமலை.

## அது அவர் உரிமை

டயானா பற்றிய தெளிவான சித்திரத்தை முரசு வழங்கியிருந்தது. ஒரு பெண் என்ற வகையில் அவரது ஆதங்கங்கள், அரச குடும்பத்தில் அவர் பட்ட வேதனைகளையும் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். அதே சமயம் டயானா பற்றிய மிகையான புகழ்ச்சிகளையும் தவிர்த்திருந்தீர்கள். டயானா சார்ல்ஸைப் பிரிந்தது தவறேயல்ல. டயானாவின் சொந்த வாழ்க்கையில் அவர் செய்தவை நியாயமா இல்லையா? என்பது பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் தன் வாழ்க்கையை எப்படி அமைப்பது என்பது ஒவ்வோர் ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள உரிமை.

ஆனால் டயானாவின் சமூகப் பணிகள் என்று எடுத்துக் கொண்டால் அவர் செய்த சமூகப் பணிகளை விட அதற்காக செய்யப்பட்ட புகழாரங்கள் அதிகம் என்பது சரியானதே.

எம். அகஸ்தியர், கல்கிசை.



படிப்பகம்

www.padippakam.com

# திலீபன் நினைவு நாளன்று தாக்கத் திட்டம்?

## கைப்பற்றப்பட்ட ஆவணத்தில் பிரமுகர்கள் பட்டியல்

இரத்மலானை விமானத்தளம்மீது திலீபனின் நினைவு தினம் முடிவடைவதற்கு இடையில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டதாக பிந்திக் கிடைத்த சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

செப்டம்பர் 14ம் திகதி முதல் செப்டம்பர் 26ம் திகதிவரை திலீபனின் 10வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. 26ம் திகதிக்கு முன்பாக இரத்மலானை விமானத் தளம்மீது தாக்குதல் நடத்தி முடிக்கவே திட்டமிடப்பட்டிருந்ததாம்.

இதேவேளை இரத்மலானை வீட்டில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்களுடன்,இரகசிய ஆவணம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

கொழும்பில் உள்ள முக்கிய அமைச்சர்கள் மூவர், மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலரின் இல்லங்கள் பற்றிய விபரங்களும், அந்த இல்லங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு செல்லும் பாதைகளைக் கொண்ட வரைபடங்களும் அந்த ஆவணத்தில் காணப்பட்டனவாம்.

குறிப்பிட்ட இல்லங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு சோதனை அரண்களை சந்திக்காமல் செல்வது எப்படி என்ற விபரங்களும் குறிக்கப்பட்டு இருந்தனவாம்.

பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர் அஷ்ரப் ஆகியோரின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

இல்லத்தில் இருந்து புறப்படும்போதோ அல்லது, புறப்பட்டுச் செல்லும்போதோ தாக்குதல் நடத்தக்கூடிய வழிவகைகள் பற்றி புலிகளின் உளவுப்பிரிவினர் தகவல் திரட்டி வந்துள்ளனர்.

இந்த விபரங்கள் தெரிய வந்ததை அடுத்தே கொழும்பில் உள்ள அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புக்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

பல திசைகளில் சென்று தகவல்கள் திரட்டப்பட்டுள்ளமையால் புலிகள் இயக்க உளவுப்பிரிவினர் பலர் தலைநகரில் நடமாடுவதாக சந்தேகிக்கப்படுகிறது. எனினும் இரத்மலானையில் வைத்து கைதுசெய்யப்பட்ட இருவர் தவிர உளவுப் பிரிவைச் சேர்ந்த முக்கியமானவர்கள் எவரும் சிக்கவில்லை என்றே தெரிகிறது.

இரத்மலானை வீட்டில் ஆயுதங்கள் சிக்கியதை அடுத்து நடைபெற்ற விசாரணைகளில் பலர் கைதுசெய்யப்பட்டபோதும், முக்கியமான நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரியவில்லை. அதனால் மீதி ஆயுதங்கள் எங்கே உள்ள? புலிகள் இயக்கத்தினர் எத்தனைபேர் தலைநகரில் தங்கியுள்ளனர் என்ற விபரங்களை பாதுகாப்புத் தரப்பினரால் பெற முடியாதுள்ளதாம். திலீபன் நினைவு தினம் முடிவடையும் செப்டம்பர் 26ம் திகதிவரை தலைநகரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ■

## அரசின் நிவாரணம் தேவையில்லை!

### கைதானோரின் குடும்பத்தினர் உறுதி!

யாழ் குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோரின் உறவினர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள் இவர்களது போராட்டங்களுக்கு ஆதரவளித்தாலும்கூட இதுவரை நேரடியாக பங்குகொள்ளவில்லை. தலைமை தாங்கும் அரசியல் சக்திகள் இல்லாத நிலையிலும் காணாமல் போனோரின் உறவினர்கள் துணிந்து போராட்டங்களை நடத்த முன்வந்துள்ளனர்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறியது.

அவ்வாறு வழங்கப்படும் நிவாரணத்தை ஏற்பதில்லை என்று கைதானோரின் குடும்பத்தினர் பலர் முடிவு செய்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களை புனரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் அதனை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இவற்றைச் செய்ய தயாராக இல்லையானால் நாடளாவிய ரீதியில் ஆத்மீக எதிர்ப்பியக்கங்கள் நடத்தப்படும் என்று இந்து சமயப் பேரவையின் யாழ் கிளை அறிவித்துள்ளது. ■

## போதையில் பெண்கள் கோஷ்டி – யாழ் குடாநாட்டில் மோதல்

மதுபோதையில் பெண்கள் கோஷ்டி ஒன்று மோதிக்கொண்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபேற்றுள்ளது. இச் சம்பவம் வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்லியடியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

மதுபோதையில் பெண்கள் சிலர் ஒரு வீட்டை கல்லெறிந்து தாக்கியுள்ளனர். இதனை அடுத்து தாக்கப்பட்ட வீட்டிலுள்ள பெண்களும், அவ் வீட்டின் அருகிலுள்ள பெண்களும் கோஷ்டியாக திரண்டுவிட்டனர். கல்லெறிந்தவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் மூண்டது.

சம்பவம் பற்றி அறிந்த கிராம சேவையாளர் ஓடிவந்து சமரசம் செய்ய முற்பட்டார். பயனில்லாமல் போகவே பொலிசாரின் உதவி நாடப்பட்டது. பொலிசார் ஏழு பெண்களை கைது செய்தனர். அவர்கள் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் மினி சினிமாக்களில் ஆபாசப் படங்கள் காண்பிக்கப்படுவதாகவும் பரவலான புகார்கள் எழுந்துள்ளன. அங்குள்ள திரையரங்குகளை மறுபடி திறக்கவும் திரையரங்கு உரிமையாளர்கள் முயன்று வருகின்றனர். ■

## தொடரும் புளியங்குளச் சமர்

### கணக்கிடப்படும் காலடிகள்

புளியங்குளப் பகுதியில் மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. புலிகள் இயக்கத்தினர் நிலைகொண்டுள்ள படையினர் மீது தொடர் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

20.09.97 அன்று புளியங்குளம் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர்மீது புலிகளின் மகளிர் படையணியினர் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். படையினரும் பதில் தாக்குதல் தொடுத்தனர்.

புலிகள் தரப்பில் கப்டன் அலெக்ஸி (செல்லையா ரோகிணி-யாழ்ப்பாணம்) உட்பட ஐந்து பெண் புலிகள் பலியாகினர்.

"படையினர் தமது ஒவ்வொரு காலடியையும் நிதானமாகவே எடுத்து வைக்க வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் நகரும் பாதைகளுக்கு அருகே உள்ள காடுகளில் இருந்து புலிகள் அந்தக் காலடிகளை கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றனர்" என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை நெடுங்கேணிப் பகுதியில் தமது நிலைகளில் இருந்து முன்னே சென்று பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர். 22.09.97ல் அவ்வாறான ஒரு தாக்குதலில் புலிகளின் வாகனம் ஒன்று தாக்கப்பட்டது. நான்கு புலிகள் பலியாகினர். நெடுங்கேணியை அண்டிய பகுதியிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றது. எனினும் ஒட்டிசுட்டானில் தாக்குதல் நடைபெற்றதாக படைத்தரப்பு செய்திகள் தெரிவித்தன.

ஒட்டிசுட்டானில் படைமுகாமோ படையினரோ இல்லை. முல்லைத்தீவில் உள்ள பகுதிதான் ஒட்டிசுட்டான். படையினர் நெடுங்கேணியில் தற்போது நிலை கொண்டுள்ள பகுதியில் இருந்து பதினொரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.

வன்னியில் பருவமழை நன்கு ஆரம்பமாகும்வரை காத்திருந்துவிட்டு புலிகள் பாரிய தாக்குதல்களைத் தொடுக்கலாம் என்று கருதப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கைக்கு பொறுப்பான மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா நடவடிக்கையில் ஈடுபடும் உயர் அதிகாரிகளை அழைத்து கலந்தாலோசனை நடத்தி இருக்கிறார்.

பருவ மழை பொழிந்தாலும்,புலிகள் குண்டு மழை பொழிந்தாலும் 'ஜயசிக்குறுய்' தொடர்ந்தே ஆகவேண்டும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த பணித்துள்ளாராம்.

## முன்னாள் இயக்கத்தினர் இந்நாள் படையினர்!

### கொழும்பில் தேடுதலுக்கு உதவுகின்றனர்

கொழும்பில் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டங்களை கண்டறியவும், விசாரணைகளை மேற்கொள்ளவும் தமிழ் இயக்கம் ஒன்றிலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழுவினர் படையினருக்கு உதவிவருகின்றனர்.

முன்னர் இயக்கங்களில் இருந்து விலகிய சிலர் தற்போது படையினருடன் இணைந்துவிட்டனராம். புளொட் இயக்கத்தில் இருந்து விலகிய மட்டக்களப்பைச் சேர்ந்த மோகன் என்பவர் தற்போது படையினருக்குள் முக்கிய தரம் ஒன்றில் இருப்பதாக கூறப்படுகிறது. அவருடன் இயக்கத்தில் இருந்த சிலரும் படையினருடன் இணைந்துள்ளனராம்.

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற சில தேடுதல் நடவடிக்கைகளின்போது படையினருடன் வந்தவர்கள் நன்றாகத் தமிழ் பேசினராம். தமிழ் இயக்கங்கள்தான் இணைந்து தேடுதல் நடத்துகின்றன என்று சோதனைக்கு உள்ளானோர் சந்தேகித்தனராம்.

தமக்கு இயக்கங்களில் உள்ளோரைத் தெரியும் என்றும், ஆனால் தாம் இயக்கம் அல்ல இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தேடுதல் நடத்தப்பட்ட இடமொன்றில் தெரிவித்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அதேசமயம் 22.09.97 அன்று கொழும்பு நகரில் தேடுதல் நடத்தச் சென்ற நால்வர் அங்குள்ளவர்களுடன் கெடுபிடியாக நடந்துள்ளனர். நால்வரில் இரண்டுபேர் நன்கு தமிழ் பேசினர். தமிழ்க் கட்சி ஒன்றின் பெயரையும் பயன்படுத்தி உள்ளனர். ■

## "ஆலயம் தொழ அனுமதி வேண்டும்!"

"முக்கிய வணக்க ஸ்தலங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில், மன்னார் திருக்கேதீஸ்வரம் கோயில் ஆகியவற்றுக்கு விசேட தினங்களிலாவது பக்தர்கள் சென்று வர அனுமதிக்க வேண்டும்."

இவ்வாறு வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

படையினரின் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் இந்த ஆலயங்கள் அமைந்துள்ளபடியால் பக்தர்கள் சென்று வழிபட முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால நடவடிக்கைகளால் 700 இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன என்றும், அவற்றில் முக்கியமான ஆலயங்களைத் திருத்தி அமைப்பதன் மூலம் இந்துக்களின் வரவேற்பைப் பெறலாம் என்றும் மீள்குடியமர்வு அதிகாரசபையால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## 8500 ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை!

நாடளாவிய ரீதியில் இருந்துவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்விச் சேவைகள் குழு தெரிவித்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் 2000 தமிழ் மொழிமூல ஆசிரியர்களும் 6500 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் நியமிக்கப்படவிருக்கின்றனர். இந்த நியமனங்களுக்கான ஆசிரியர்கள் 1996ம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலேயே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படவிருக்கின்றனர் என்று கல்விச் சேவைகள் குழு கூறுகிறது.

பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரங்கள் கடந்த 20.09.97 அன்று சகலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் கூறுகிறது.

மாகாண மட்டத்தில் செப்டம்பர் 26ம் திகதியிலிருந்து ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பமாகும்.

செப்டம்பர் 26ம் திகதி ஊவா மாகாணத்திற்கும், மேல் மாகாணத்திற்கும் ஒக்டோபர் 02ம் 03ம் திகதிகளிலும், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒக்டோபர் 03ம் திகதியும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒக்டோபர் 10,11,12 ஆகிய திகதிகளிலும் நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும்.

வட மத்திய மாகாணத்திற்கான ஆசிரியர் தெரிவு பற்றி இன்னமும் தீர்க்கமான முடிவெதுவும் அறிவிக்கப்படவில்லை. இம் மாகாணத்தில் 1200 ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாகவும் இதை நிவர்த்தி செய்ய கல்விச் சேவைகள் குழு உரிய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ■

## பாய்ந்துவந்த ரவை!

(காத்தான்குடி நிருபர்)

வாழைச்சேனை கொண்டையன் கேணி பிரதேசத்தில் வீடொன்றில் விளையாடிக் கொண்டிருந்த மாணவன் மீது தொலைவில் இருந்து வந்த ரவை விழுந்ததனால் அம்மாணவன் கொல்லப்பட்டார்.

கடந்த 22ம் திகதி நடைபெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

புஸ்பநாதன் (வயது-8) என்ற மாணவன் நான்கைந்து பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த ரவை அவர் மீது பாய்ந்தது. காயமடைந்த அவரை வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அவசர சிகிச்சைகள் மேற்கொண்டபோது, பயனளிக்காததால் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற வழியில் அவர் மரணமானார்.

இதற்கு முதல் நாளும் இதே போன்று வேறொருவருக்கு தொலைவில் இருந்து வந்த ரவை பட்டு வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, 2 மணிநேரம் கடுமையான சிகிச்சையளிக்கப்பட்டது. பின் மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாக வாழைச்சேனை அதிகாரி டாக்டர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களால் சிறுவர் சிறுமியர் வெளியே விளையாடுவதற்குக்கூட அச்சம் கொண்டுள்ளனர் என அப்பகுதி வாசி ஒருவர் தெரிவித்தார். ■

## டயானா நினைவு முத்திரை – வெளியீட்டுக்குத் தடை!

இளவரசி டயானாவை நினைவு கூருமுகமாக இங்கிலாந்தின் தபால் திணைக்களத்தினால் 26 பென்ஸ் பெறுமதியான முத்திரையை வெளியிட ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டன. இதற்கான விளம்பரப் பிரசுரங்களும் நாடெங்கணும் அனுப்பப்பட்டும்விட்டன. ஆனால் டயானாவின் ஸ்பென்சர் குடும்பத்தினர்,இப்போது டயானாவின் படம் பொறித்த முத்திரையை வெளியிட வேண்டாம் என்று தடைவிதித்துள்ளனர்.

"டயானாவுக்கு நினைவு முத்திரை வெளியிட இது தக்க தருணமல்ல," என்று டயானா குடும்பத்தினர் தெரிவித்துவிட்டனர். இதனால் இந்நினைவு முத்திரையைச் சேகரிக்கக் காத்துக் கொண்டிருந்த இலட்சக்கணக்கான முத்திரை சேகரிப்பாளர்களும் டயானா விசிறிகளும் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

டயானா நினைவு முத்திரை வெளியிடுவதற்கான அனுமதியினை 'ரோயல் மெயில்' அரச குடும்பத்தாரிடம் முறையாகப் பெற்றிருந்தனர். டயானாவின் அண்மைக்காலப் புகைப்படங்களிலிருந்து முத்திரைக்காக 5 படங்கள் தெரிவு செய்யப்பட்டன.

முத்திரை வெளியீட்டுக்கு அனுமதிக்குமாறு ஸ்பென்சர் குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்ளும் கோரிக்கைகள் பொது மக்களிடமிருந்து அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் டயானாவின் மறைவு குறித்து தபால், தந்தி, இண்டர்நெற் போன்ற சாதனங்களுக்கூடாக அரச குடும்பத்தினருக்கு அனுதாபம் அனுப்பிய தனிநபர் மற்றும் நிறுவனங்களிற்கு நன்றி தெரிவித்து பங்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டுவருவதாகத் தெரிகிறது. இதற்காகவே தனியானதொரு அலுவலகம் 24 மணி நேரமும் இயங்கி வருகிறதாம். ■

## சிங்களக் கமிஷன் கண்ணீர் விடுகிறது

இந்த நாட்டின் அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட்டு அதில் அதிகாரப் பரவலாக்கலும் இணைக்கப்படுமானால் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்த மக்கள் பல கூறுகளாகப் பிரிக்கப்படுவர். அதே வேளை சிறுபான்மையினரான தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக வாழ்வார்கள், அத்துடன் பெரும்பான்மையின மக்களின் பௌத்த மதத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகி விடும்.

இவ்வாறு சிங்கள கமிஷனின் இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

வேறு எங்குமே நடைமுறையிலில்லாத விசேட சமஷ்டி ஆட்சி முறையினை வழங்கும் அரசியல் மாற்றமே இங்கு நடைமுறைப் படுத்தப்படப்போகிறது. புதிதாகக் கொண்டு வரப்படவிருக்கும் மாற்றங்களின் தன்மையைப் பார்த்தால், முக்கியமான அம்சங்களில் மத்திய அரசாங்கத்துக்கு தலையிடும் உரிமைகள் எதுவுமே இருக்காது என்றும் சிங்கள கமிஷன் தனது அறிக்கையில் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. ■

## கிராமசேவகர்கள் தொடர்ச்சியாகக் கைது!

### மர்மமான சம்பவங்களால் மக்கள் அச்சம்!

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 7 கிராம சேவகர்கள் இதுவரை பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே களுத்துறைச் சிறையில் இருவரும், கொழும்பு 4ம் மாடியில் இருவரும், மட்டக்களப்புச் சிறையில் ஒருவருமாக மொத்தம் ஐந்து கிராம சேவகர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.கைதாகிய மேலும் இருவர் சில தினம் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். சமீபத்தில் கைதாகிய ஒருவர் எங்கிருக்கிறார் என்ன ஆனார் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

இவர்கள் கடமைபுரிந்த இடங்கள் புலிகள் இயக்கத்தினரின் ஆளுகையின் கீழுள்ள பிரதேசங்களாகும்.

கடைசியாக நடந்த கிராம சேவகரின் கைது பற்றித் தெரியவருவதாவது: கடந்த 16.09.97 அன்று வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திகிலி வெட்டைக் கிராம சேவகரான எஸ். தருமலிங்கம் (33) என்புவர் முறக்கொட்டான்சேனைப் படைமுகாமுக்கு விசாரணைக்காகச் சென்றுள்ளார். சென்றவர் இன்னமும் வீடு திரும்பவே இல்லை.

அவர் தனது நாட்குறிப்பில் "முறக்கொட்டான் சேனையிலுள்ள படையினரும், சபா என்பவரும் தன்னை விசாரணைக்கு அழைப்பதாகவும் தான் செல்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். சபா என்பவர் 1985ம் ஆண்டிலிருந்து படையினர் நடவடிக்கைக்கு உதவியாக இயங்கி வருபவர். இவர் படையினருக்கு உதவுகிறார் என்ற காரணத்திற்காக 1985ல் 'புளொட்' இயக்கத்தினரால் சுடப்பட்டு காயங்களிலிருந்து தப்பினார். பின்பு தொடர்ச்சியாக புலிகளின் இயக்கத்தினரால் நான்கு முறை சுடப்பட்டு தப்பிப் பிழைத்தார்.

1985ல் மட்டக்களப்பு பதுளைவீதியில் ஈரோஸ் இயக்கம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் படையினர் பலியானபோது அவர்களுடன் சென்ற சபா மட்டும் உயிர்தப்பினார்.

தற்சமயமும் சபா படை நடவடிக்கைக்கு உதவி வருகிறார். கிழக்கிலுள்ள சகல படை முகாம்களும், படை நடவடிக்கைகளும் இவருக்கு அத்துப்படி.

தருமலிங்கம் முகாமுக்குச் சென்றதும் படையினரும் சபாவும் அவரை விசாரித்து விட்டு அனுப்பியிருக்கின்றனர். கிராம சேவுகரை விசாரிக்கும்பொழுது "நீர் இங்கு விசாரணைக்கு வருவது பற்றி, எங்காவது அறிவித்து விட்டா வந்திருக்கிறீர்? அது எழுத்துமூலமா?" என்று கேட்க கிராம சேவகர் "ஆம் நான் பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலமாக அறிவித்திருக்கிறேன்." என்றாராம். "சரி விசாரணை முடிந்துவிட்டது" என்று அவரை அனுப்பியிருக்கின்றனர்!

### பாதையில் கைது

திரும்பும் வழியில் அவர் பஸ்ஸுக்காகக் காத்திருந்த வேளை அவரது நண்பரான வாழைச்சேனை கூட்டுறவுச் சங்க ஊழியர் பி. பிரபாகரன் (30) என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்திருக்கின்றார். அவருடன் கிராம சேவகரும் மோட்டார் சைக்கிளில் சென்றிருக்கிறார். செல்லும் பொழுது வழக்கத்திற்கு மாறான ஓரிடத்தில் சீருடை அணிந்தோர் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களைச் சோதனை செய்து கொண்டு நின்றிருக்கின்றனர். அவ்வேளையிலேயே கிராம சேவகரையும்,கூட்டுறவுச் சங்க ஊழியரையும் கண்ட சீருடையினர் அவர்களை வழிமறித்து மோட்டார் சைக்கிளில் இலக்கத் தகட்டைத் துணியால் கட்டி மறைத்துவிட்டு சந்தி வெளியில் உள்ள விஷ்ணு கோயில் ஆற்றோரப் பக்கமாக அவர்களை அழைத்துச் சென்றனராம்.

இதுவரை அவர்கள் வீடு திரும்பவில்லை இருவர் தொடர்பாகவும் எதுவித தகவலுமில்லை.

தாம் விசாரித்து விட்டு கிராம சேவகரை அனுப்பிவிட்டதாகவும் தாம் அவர்களைப் பின்னர் கைது செய்யவில்லையென்றும் படையினர் கூறுகின்றனர்.

அவர்களிருவரும் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் வாழைச்சேனை போதகரான எஸ். ஐசாயா என்பவருடையதாகும்

### புது மாப்பிள்ளை

காணாமல்போன அன்று கிராம சேவகர் திருமணம் முடித்து 16 நாட்கள் என்றும் அவருடன் கூடச் சென்ற பிரபாகரன் திருமணம் செய்து 8 நாட்கள் என்றும், கூறப்படுகிறது.

காணாமற்போன கிராம சேவகர் கடமையாற்றும் அயற் கிராமங்களைச் சேர்ந்த இரு கிராம சேவகர்களும் படையினரால் முன்னர் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு சில நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கிழக்கில் யுத்தச் சூழ்நிலையில் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் தற்சமயம் கிராம சேவகர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அந்த வகையில் கிராம சேவகர்களே காணாமல் போகும் நிலை தோன்றியிருக்கிறது. இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று தாம் அரச அதிபரையும், கொழும்பிலுள்ள கிராம சேவையாளர்கள் தலைமைச் சங்கத்தையும் கலந்தாலோசிக்கவிருப்பதாக அரச சேவை கிராம சேவையாளர் சங்கத் தலைவர் திரு.கே.வாமதேவன் முரசுக்குத் தெரிவித்தார்.

## நினைவு தினப் போட்டிகள்

புலிகள் இயக்கத்தின் முன்னாள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளரான திலீபனின் நினைவு நாள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பெரியளவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பொது இடங்களில் திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு இடையில் நினைவுதினப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

பூநகரியில் திலீபன் நினைவுதின படகோட்டப் போட்டி நடைபெற்றது. திலீபன் நினைவு தினத்தை அடுத்து புலிகள் இயக்க முன்னாள் மன்னார் தளபதி விக்ரரின் நினைவுநாள் செப்டம்பர் 27ம் திகதி ஆரம்பமாகிறது. ■



படிப்பகம்

# கடல் வழியாக கடத்தப்பட்ட வாகனம்

கடந்த 03.09.97 புதன்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் நகரில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்ட பிக்அப் வாகனம் தற்போது மடுப்பகுதியில் ஓடித்திரிகின்றது.

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சொந்தமான இவ் வாகனம் பாதுகாப்பு மிகுந்த மன்னாரில் வைத்து- அதுவும் பட்டப் பகலில் கடத்திச் செல்லப்பட்டது.

இதற்கு முன்னர் 20.08.97 அன்றும் ஒரு பிக்அப் வாகனம் கடத்திச் செல்லப் பட்டது. இந்த இரு சம்பவங்களும் புதன் கிழமைகளிலேயே நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிக்அப் வாகனத்தைத் தேடி இராணுவத்தினர் கவச வாகனங்கள் சகிதம் தீவுப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதிலும் இவர்களின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு வாகனம் மாயமாய் மறைந்துவிட்டது.

இதனைக் கடத்தியவர்கள் நூறுவீட்டுத் திட்ட வீதி வழியாக வந்து தாராபுரம், ஓலைத்தொடுவாய் ஊடாக நடுக்குடாவுக்கு அப்பால் கொண்டு சென்றதாகக் கூறப் படுகிறது.

மறுநாள் 04.09.97 அன்று காலை 07.15 மணியளவில் பேசாலைப் பகுதியிலுள்ள குருசுப்பாடு என்னுமிடத்தில் வைத்து இதனை பாதை ஒன்றில் ஏற்றிய புலிகள் கறுப்பு உறையால் மூடினர்: இந்தப் பாதையை இழுத்துச் செல்ல இரண்டு ட்ரோலர்களும், கண்காணிப்பதில் மூன்று கடற்புலிகளின் படகுகளும் ஈடுபட்டன. இவற்றில் துப்பாக்கிகள் பொருத்தப் பட்டிருந்தன.

இதனை கடற்புலிகள் கொண்டு செல்லும்போது பேசாலைக்கு நேராக வெடிச்சத்தங்களை எழுப்பிய வண்ணம் சென்றதாகக் கூறப்படுகிறது. இக் காட்சியை இங்குள்ள பலரும் ஆச்சரியததுடன் பார்த்துக் கொண்டு நின்றனர்.

மன்னார்ப் பகுதியில் கடத்தப்படும் வாகனம் ஒருபோதும் பகலில் கொண்டு செல்லப்படுவதில்லை. தலைமன்னார் கடற் படையினர் அடிக்கடி வந்து செல்லும் இக் கடற்பரப்பில் ஏதேனும் மோதல்கள் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சநிலையும் இப்பகுதி மக்களிடையே காணப்பட்டது. பேசாலையில் பொலிஸ் நிலையமும் இருக்கிறது.

# எரிவாயுவில் ஓடும் வேன்கள் தடுப்பு!

மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சில சிறிய வேன்காரர்கள் பெற்றோலுக்குப் பதிலாக சாதாரண சமையலுக்குப் பாவிக்கப் படும் அடுப்பு எரிவாயுவைப் (L.P.GAS) பயன்படுத்தி வாகனத்தை இயங்கச் செய்து வந்தனர்.

இந்த வகையில் சட்ட விரோதமாக வேன்களை இயங்கச் செய்து அதில் பயணிகளை ஏற்றிச் செல்வது மிக மிக ஆபத்து நிறைந்ததாகும். அத்துடன் இந்த எரிவாயுவில் வாகனம் இயங்கும்போது துர்நாற்றம் வீசுகிறது. வேன்காரர்களின் இந்தவித நடவடிக்கை பயணிகளுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியதால் அரசாங்க அதிபரிடம் இது பற்றிப் பலமுறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து எரிவாயுவைப் பாவித்து வந்த 6 வேன்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

எரிவாயுவைப் பயன்படுத்துவது பெற்றோல் பாவிப்பதைவிட மிகக் குறைந்த சிக்கனத்துக்காகவே என்று கூறப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களை எதுவித சட்ட நடவடிக்கையுமில்லாமல் விடுவித்துக்கொள்ள அதற்குப்பொறுப்பான பொலிஸ் உயர்மட்ட அதிகாரி இணங்கி விட்டதாகவும் சொல்லப்படுகிறது. விடுவிக்கும் சன்மானமாக வேன் ஒன்றுக்கு ரூபா. மூவாயிரம்வரை பேரம் பேசப்பட்டதாம்.

# கண்ணைத் திறக்குமா பிரதேச சபை?

(மன்னார் நிருபர்)

மன்னார் புதிய பஸ் நிலைய சுற்றாடல் தற்போது மிகவும் அசுத்தமான நிலையில் காட்சி தருகிறது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள பயணிகள் தங்குமிடம் மிகவும் ஒடுங்கியது. இருக்கவோ, நிற்கவோ முடியாத நிலையில் இது உள்ளது.

இதனால் இங்கு வந்து போகும் ஆயிரக்கணக்கான பயணிகள் கடும் வெயில், மழைகளுக்கு மத்தியில், பஸ் நிறுத்தப்படும் இடங்களை தடை செய்து கொண்டு நிற்கின்றனர்.

இதனால் பஸ்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நிறுத்தப்பட்டுள்ளன. பயணிகளும் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பஸ் நிலையத்திற்கருகிலுள்ள நீர்த் தாங்கியில் இடைக்கிடை தண்ணீர் முடிந்து விடுகிறது. இதனை தண்ணீர் கொண்டு நிரப்ப சில நாட்களாகின்றன. குடிநீர் முடிந்துவிடும் நேரத்தில் பயணிகள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக கூறுகின்றனர்.

இந்த பஸ் நிலையத்திற்கருகில் அமைக்கப்பட்டுள்ள இரு மலசல கூடங்கள் நீண்ட காலமாக கவனிப்பாரற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.

ஆண்களுக்கான மலசல கூடத்தில் பெண்களும் பெண்களுக்கான மலசல கூடத்தில் ஆண்களும், சில வேளைகளில் ஆண்களும், பெண்களும் ஒரே மலசல கூடத்திற்குள் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த மலசலகூடங்கள் கடந்த 7 வருடங்களாக துப்பரவு செய்யப்படவே இல்லை. மிகவும் அசுத்தமாக காட்சி தரும் இவற்றை நிர்வகிப்பது மன்னார் பிரதேசசபை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதிய பஸ்நிலைய சுற்றாடலும் கூட்டி துப்பரவு செய்யப் படுவதில்லை. இரவு வேளைகளில் ஆடு, மாடு, கழுதைகளின் சாணக் கழிவுகள் மட்டுமே ஊழியர்களால் துப்பரவு செய்யப் படுவதாகக் கூறப்படுகிறது.

பஸ் நிலையத்தை சீராக வைத்திருப் பதற்காக மாதாந்தம் குறிப்பிட்ட தொகைப் பணம் மன்னார் இ.போ.ச. சாலையால் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் மன்னார் பிரதேச சபை கண்ணை இறுக மூடிக்கொண்டிருப்பது எதற்காக எனப் பலரும் கேட்கின்றனர்.

# இருந்த தமிழையும் காணவில்லை

## ஐ.தே.கட்சி நிர்வாகத்தில் புறக்கணிப்பு

(கண்டி நிருபர்)

கண்டி மாநகர சபை எல்லைக்குள் முன்னர் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட வீதிகளின் பெயர்கள் படிப்படியாக இரண்டு மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு வருவது குறித்து வரியிறுப்பாளர்களும் தமிழ் பேசும் மக்களும் வேதனையும் அதிருப்தியும் அடைந்துள்ளார்கள்.

கண்டி மாநகர சபையின் நிர்வாகம் இப்பொழுது ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. புதிய தேர்தலின் பின்னர் இரண்டு தமிழர்களும் மூன்று முஸ்லிம்களும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐவருமே ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்கள். பிரதி மேயராக இருப்பவரும் தமிழ்ப் பற்றுக் கொண்ட முஸ்லிம் பிரமுகர் ஆவார்.

இப்படி இருக்கையில் முன்னர் மும்மொழிகளிலும் வீதிகளின் பெயர்கள் எழுதப்பட்டு வந்த நடைமுறை மாறி சிங்களத்திற்கும், ஆங்கிலத்திற்கும் பரிமாற்றம் இடம்பெற்று வருவது குறித்து தமிழ்பேசும் மக்கள் முரசு நிருபரிடம் அதிருப்தியைத் தெரிவிக்கின்றனர்.

வீதி என்ற தமிழ்ச்சொல் "வீதிய" எனவும் தமிழ் எழுத்துக்களின் உருமாற்றமும் இவர்களை மேலும் கவலை கொள்ள வைத்துள்ளது.

கண்டி மீரா மக்கம் பள்ளிவாசலுக்கு முன்புறமாக உள்ள வீதிகளின் பெயர் இரண்டு மொழிக்கு மாத்திரம் குறைந்து விட்டது.

இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியர் எனக் கருதப்படும் பேரறிஞரும் முன்னாள் கண்டி மாநகர சபையின் உறுப்பினருமாகவிருந்த அறிஞர் சித்தி லெப்பையின் பெயர் சூட்டப்பட்டுள்ள பழைய மாத்தளை வீதி நுழைவாயில் முன்பாகப் பொருத்தப்பட்டுள்ள காங்கிறீட் பெயர்ப் பலகையில் வெள்ளை நிற வர்ணம் பூசப்பட்டு மாதங்கள் பல கடந்தும் அதில் ஏற்கனவே இருந்து வந்த தமிழ் எழுத்துக்கள் அகற்றப்பட்டு சிங்கள- ஆங்கில மொழிகளுக்கு மாத்திரம் பரிவர்த்தனை செய்யப்பட்டிருப்பதை இலக்கிய கர்த்தாக்கள் கவலையோடு முரசுக்குச் சுட்டிக் காட்டினர்.

இதனைப் போன்று பல பெயர்களும் இப்பொழுது தனிச்சிங்களத்துக்கும் ஆங்கிலத்துக்கும் கட்டுப்படுத்தப்பட்டு வருவது குறித்து கவலை தெரிவிக்கின்றனர். ஐந்து தமிழ்பேசும் உறுப்பினர்களின் கண்களுக்கு இந்த மாற்றம் புலப்படவில்லையா? எனவும் இவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

தமது கட்சியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றில் தமிழ் மொழிக்குரிய செல்வாக்கை அதிகரிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்க தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கும் பொழுது கண்டி மாநகர சபை மாத்திரம் இதில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுவது சரிதானா எனவும் இவர்கள் கேட்கிறார்கள்.

விளம்பரப் பகுதி





**மலையாள மாந்திரிகம்**

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி

**பி.கே. சாமி J.D.G.A.N&JP**

**ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்**

இல. 162, கொட்டாஞ்சேனை வீதி.
மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

**இலவச தபால்மூல வேதபாடங்கள்**

உங்கள் வாழ்வில் வெற்றியளிக்கக்கூடிய வேதபாடங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

மூன்று பாஷைகளிலும் பாடங்கள் உண்டு.

தேவையான மொழியைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு எழுதவும்.

**LIFE BIBLE INSTITUTE**

P.O.BOX-68, NUGEGODA.

**எங்கு இருந்தாலும் வரவும்**



சுப்பிரமணியம் துஷ்யந்தினியை அவரது குடும்பத்தினர் தேடுகிறார்கள். அவர் எங்கு இருந்தாலும் உடன் வரவும்.

தொடர்பு:-933832, வத்தளை.

இ.டு- அம்மா, அண்ணா க.சர்வேஸ்வரன், 120/16 காந்தி மாவத்தை, ஹுணுப்பிட்டிய, வத்தளை.

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து. கனவில் சக்தியிழந்து. ஞாபக மறதி. பயம். நடுக்கம். வெட்கம். சந்தேகம். ஏமாற்றம். பீதி. நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும். 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 30 நிமிடத்தில். தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள். மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா. தலையிடி. வாதம் பயோரியா. வெள்ளைபோதல். நீரிழிவு. கிரந்தி நோய்க்கும் குழந்தைபேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கொழும்பில் செப்டம்பர் 20 முதல் 30 வரை**

Dr. P. Arumugam. Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road. (Entrance Bankshall St.. Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.

கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி ஒக்டோபர் 4,5ம் திகதிகளில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் ஒக்டோபர் 11,12,13,14 திகதிகளில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

+

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H. Ind. S.M.P.**

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா. க்ஷயம். இளைப்பு. பீனிசம். தலைவலி. மலேரியா. கண்டமாலை. சொறி. சிரங்கு. பாண்டு. ரோகை. காக்கை வலிப்பு. வாதம். நீரிழிவு. மூலரோகங்கள். இருதய நோய்கள். இடுப்புவலி. நெஞ்சு எரிவு. குடல்வாய்வு. நரம்புத் தளர்ச்சி. வீரியக் குறைவு. இரத்தமின்மை. சொப்பன ஸ்கலிதம். பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு. மாசம் முன். பின் காணுதல். சூதகவலி. பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**

**No. G/02,** கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மின்கடை மேல், கொழும்பு - 11.

**UNION**

யூனியன் மோட்டிஸ்

கதவு பூட்டுகள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு. கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

மட்டக்குளி, முகத்துவாரம் மற்றும் கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் வாழ்வோருக்கு சேவைபுரிய

**SALON PRETTY LOOKS**
(Estd-1987)

**சலூன் பிரிட்டி லுக்ஸ்**
(ஸ்தாபிதம்-1987)

மணமகள் அலங்காரம், முக அலங்காரம், சிகை அலங்காரம் மற்றும் இவை போன்ற அழகூட்டும் பணி! ஆண்களுக்கும் பெண்களுக்கும் சேவை புரிவதற்கு டிப்ளோமாச் சான்று பெற்ற நிபுணர்.

**அயேஷா பெரேரா**
141/B, விஸ்ற்வைக் வீதி, மட்டக்குளி, கொழும்பு-15.
(முன்னறிவித்தலுடன் மட்டும்)
தொலைபேசி:
526794, 072-282390

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிறு நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# குறிவைக்கப்பட்ட இரண்டு இலக்குகள்

## கிடைத்ததும், கிடைக்காததும்

**கொ**ழும்பு நகருக்கு வெளியே புலிகள் இயக்க மறைவிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சந்திக்கு சந்தி சோதனை அரண்கள், சுற்றிவளைப்பு தேடுதல்கள், தொடர் கைதுகள் மத்தியில் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகிக் கொண்டிருந்தனர்.

**புலிகளின் மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டு தாக்குதல் திட்டம் அம்பலமானதும், கொழும்பில் கைதுகளும், கெடுபிடியான சோதனைகளும் நியாயம்தான் என்பதுபோன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த பார்க்கிறார்கள்.**

ஆனால் புலிகளின் மறைவிடம் கண்டுபிடிக்கப்பட்டதோ, சம்பந்தப்பட்டவர்கள் கைதானதோ வகை தொகையற்ற கைதுகளின்போது நடந்ததல்ல. தங்கு விடுதிகளில் இருப்போரை அள்ளிச் சென்று ஆடு மாடுகள் போல அடைத்து வைப்பதன் மூலமாக இதுவரை உருப்படியான எந்த பலனையும் பாதுகாப்புத் தரப்பினர் பெற்றதில்லை.

அதுமட்டுமல்லாமல், வவுனியாவில் தடுப்பு முகாம் போட்டு அங்கேயே மக்களை அடைத்து வைத்திருப்பதற்கும், புலிகள் கொழும்புக்குள் புகுந்து விடுவதை தடுக்கும் நடவடிக்கை என்றே காரணம் கூறப்பட்டு வந்தது.

தடுப்பு முகாம் கதவுகள் இன்னமும் இறுகமூடித்தான் கிடக்கின்றன. ஆனால் கொழும்புக்குள் ஆயுதங்கள் வந்து சேர்ந்துள்ளன.

**மக்களோடு மக்களாகத்தான் கொழும்புக்குள் புலிகள் வந்து சேரவேண்டும். வவுனியாவில் வைத்து கட்டுப்படுத்தினால் புலிகள் வரவே வாய்ப்பில்லை என்று அரசு நினைக்குமானால் அது எத்தனை பெரிய தப்புக் கணக்கு என்பதை இப்போதாவது புரிந்து கொள்ளவேண்டும்.**

கொழும்பில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும், வடபகுதி மக்களின் போக்குவரத்து விடயத்தில் அரசு காட்டிய கரிசனையை பயன்படுத்தி தலை நகருக்குள் வந்தவர்களல்ல.

கொண்டுவரப்பட்ட ஆயுதங்களும் அரசு மக்களுக்காக செய்து கொடுத்த போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தி கொண்டுவரப்பட்டவையுமல்ல.

**சாதாரண தமிழ் மக்கள் தலை நகருக்குள் வருவதற்கும், நடமாடுவதற்கும் உள்ள நெருக்கடிகள், கெடுபிடிகள் மத்தியில் அவற்றில் உள்ள ஓட்டைகளைப் புத்திசாலித்தனமாக கண்டுபிடித்துத்தான் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.**

தலை நகரப் பாதுகாப்புக்கு அரசு முக்கியத்துவம் கொடுப்பதோ, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதோ தவறில்லை. அது அரசின் கடமைதான். ஆனால் கண்மூடித்தனமான கைதுகளும், கெடுபிடிகளும் பாதுகாப்புக்கு உத்தரவாதமாகப் போவதில்லை என்பதையே சமீபத்திய சம்பவமும், அதற்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களும் வெளிப்படுத்தி இருக்கின்றன.

இரத்மலானையில் புலிகளின் மறைவிடம் கண்டு பிடிக்கப்பட்டது எப்படி? என்பது தொடர்பாக கிடைத்துள்ள தகவல்களைப் பார்ப்போம்.

கொழும்பில் புலிகள் நடத்திய தொடர் தாக்குதல்களின் பின்னர் கேந்திர முக்கியத்துவம் உள்ள பகுதிகளில் பாதுகாப்புகள் உஷார்படுத்தப்பட்டிருந்தன.

கடந்த வருடம் கொழும்பில் வைத்து புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த நெல்சன் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். கடல் மார்க்கமாக வன்னி சென்றுவிட்டு திரும்பிவந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார். அதனையடுத்தே அவர் தங்கியிருந்த வெள்ளவத்தை ராசவள்ளி வீதியில் உள்ள வீடு இடித்து தரைமட்டமாக்கப்பட்டது.

அதன்பின்னர் கொழும்பு கொம்பனித் தெரு கங்காராம வீதியில் உள்ள சோதனை அரணில் பெண்புலி ஒருவர் மாட்டிக் கொண்டபோது, தற்கொலை செய்து கொண்டார். கொழும்பு பம்பலப்பிட்டி தங்கு விடுதி ஒன்றில்தான் அவர் தங்கியிருந்தார். அவரும் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்தான்.

நெல்சனிடம் இருந்தும், பலியான பெண் புலி உறுப்பினர் தங்கியிருந்த அறையில் இருந்த சில குறிப்புக்களில் இருந்தும் பொலிசார் என்ன விபரங்களை பெற்றிருக்கிறார்கள் என்பது புலிகளுக்கு தெரியாது.

அதனால் அச் சம்பவங்களின் பின்னால் கொழும்பில் தமது நடவடிக்கைகளையும், தங்குமிடங்கள், நடமாட்டங்கள் என்பவற்றையும் மாற்றிக்கொள்ள புலிகளுக்கு ஒரு அவகாசம் தேவைப்பட்டிருக்கும்.


எனினும் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டால்கூட, அதனைத் தொடர்ந்து பல தகவல்களை பெற்றுக் கொள்ளகூடிய வாய்ப்பு இருப்பதில்லை. ஏனெனில் புலிகளின் இரகசிய வேலைமுறையானது ஒரு சிலர் கைதுசெய்யப்பட்டால்கூட ஏனையோர் தப்பிக் கொள்ளக் கூடிய முறையிலேயே அமைந்திருக்கும். அதனால்தான் கொழும்பில் புலிகளின் உளவுப்பிரிவின் முக்கிய நபரான நெல்சன் கைதான பின்னர்கூட புலிகளின் இரகசிய வலைப் பின்னல்களின் முடிச்சுக்கள் எங் கெல்லாம் இருக்கின்றன என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

கொழும்பில் அடுத்ததாக தாக்குதல் நடத்த புலிகள் வைத்த குறியில் பிரதான இலக்குகள் இரண்டு.

ஒன்று: இரத்மலானை விமான தளம்.

இரண்டு: பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை.

முதலாவது இலக்கு சற்றுக் கடினமானது. இரண்டாவது இலக்கு சற்றுச் சுலபமானது. அதாவது விமானத் தளத் தாக்குதலுடன் ஒப்பிடும்போது சுலபமானது.



கைப்பற்றப்பட்ட 40எம்.எம்.கிரனேட் லோஞ்சரும் அதற்கான கிரனேட்டுக்களும்

இரண்டு தாக்குதலுமே இரத்மலானை பகுதியில்தான் நடத்தத் திட்டமிடப்பட்டன.

கொழும்பு நகரில் இருந்து இரத்மலானை விமானத் தளம் நோக்கிச் செல்லும்போது அத்திடிய சந்தியைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.

அந்த சந்தியில் சோதனை அரண்களோ, பாதுகாப்பு ஏற்பாடுகளோ கிடையாது. மிக விசாலமான இடமும் இருக்கிறது. அந்தச் சந்தியைத்தாண்டி அப்பால் போனால்தான் விமானப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்பு அரண்கள்,கண்காணிப்புக்கள் உள்ளன.

அதனால் அத்திடிய சந்தியைத்தான் தங்கள் தாக்குதலுக்கு உரிய இடமாக தெரிவு செய்தனர் புலிகள்.

கொழும்பு நகரில் இருந்து இரத்மலானை விமானத் தளம் நோக்கி செல்லும் பிரதிபாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடர் அத்திடிய சந்தியை கடக்கும்போது, கரும்புலித் தாக்குதல் நடத்துவதுதான் திட்டம்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றில்வந்து வாகனத் தொடருக்குள் ஊடுருவி வெடிக்கவைப்பது என்று திட்டம் போட்டிருந்தனராம்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் எப்போது விமானத் தளம் செல்லுவார் என்பதை அறிய முடியாது. எனவே விமானத்தளப் பகுதியை தொடர்ந்து கண்காணிப்பது மூலம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அங்கு செல்கிறாரா என்று அறிந்து கொள்ளவேண்டும்.

அவர் சென்றுவிட்டார் என்று உறுதியானதும் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் புறப்பட்டு வந்து அத்தியடிய சந்தியில் காத்திருக்கும். பயணத்தை முடித்துக்கொண்டு விமானத் தளத்திலிருந்து கொழும்பு நகர் நோக்கி வரும்போது தாக்குதல் நடக்கும்.

விமானத் தளம், விமானத் தளத்துக்கு செல்லும் பிரதி பாதுகாப்பு அமைச்சர். இந்த இரண்டு இலக்குகளில் முதலில் சாத்தியமாகக் கூடியதை தீர்மானிக்கவே உளவறியும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

தாக்குதலுக்காக தெரிவு செய்யப்பட்ட பகுதியில் வீடொன்று வாடகைக்கு பிடித்துக் கொண்டதுதான் முதல் கட்டம். அந்த வீட்டுக்கு நியாயமாகக் கொடுக்கக் கூடிய வாடகைக்கு அதிகமாக கொடுத்தே பிடித்திருக்கிறார்கள்.

இரத்மலானை விமானத் தளத்தில் இருந்து உட்தகவல்கள் பெறுவது சாத்தியமில்லை. தகவல் சொல்லும் ஆட்கள் உள்ளே இல்லை. அதனால் சிர்மம் எடுத்தே உளவறியும் வேலைகளை செய்யவேண்டி இருந்தது.

யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் செல்லும் பயணிகள் இரத்மலானை விமான தளம் ஊடாகவே செல்லுகின்றனர். எனவே விமானத் தளப் பாதுகாப்பு ஏற்பாடுகள், காவலரண்கள் போன்றவை எங்கிருக்கின்றன என்ற விபரங்களை யார் வேண்டுமானாலும் கண்டுகொள்ள முடியும்.

**ஆனால் இரவு நேரப் பாதுகாப்பு ஏற்பாடுகள், அதிலுள்ள ஓட்டைகள் என்பவற்றை கண்டறியவும், உட்புகும் வழியை தெரிவு செய்வது என்பவற்றில் புலிகளின் உளவுப் பிரிவினர் இருவர் ஈடுபட்டிருந்தனர்.**

அதேநேரம் இரத்மலானையில் இருந்த புலிகளின் மறைவிடத்துக்கு ஒரு பகுதி ஆயுதங்களும் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

வர்த்தகரான கோபாலபிள்ளையின் லொறியில்தான் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டன. லொறிச் சாரதி இருந்தும்கூட புலிகளின் மறைவிடம் அவருக்கு தெரியக் கூடாது என்பதற்காக கோபாலபிள்ளையே லொறியை ஓட்டிச் சென்று ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு வந்தாராம்.

கிட்டத்தட்ட இரத்மலானை விமானத் தளம் தொடர்பான போதிய விபரங்கள் யாவும் திரட்டப்பட்ட நிலையில் தாக்குதலுக்கான நாள் குறிப்பதுதான் பாக்கி இருந்தது.

இன்னொரு பகுதி ஆயுதமும், பிரதான தாக்குதல் குழுவும் வந்து சேர்ந்ததும் நாள் குறிக்கப்பட இருந்ததாம்.

இந்நிலையில்தான் வழக்கம்போல உளவறியச் சென்ற சிவநேசனும், அகிலனும் விமானப் படையினரின் சந்தேகப்பார்வைக்கு உள்ளாகி மாட்டிக்கொண்டனர்.

**விசாரணையின்போது சிவநேசன்தான் வர்த்தகரான கோபாலபிள்ளையின் பெயரை சொல்லியிருக்கிறார். பின்னர் கோபாலபிள்ளையை கைது செய்து துருவியபோதுதான் இரத்மலானையில் ஆயுதம் இறக்கப்பட்ட தகவல் பெறப்பட்டதாம்.**

இரத்மலானை வீட்டில் மூன்றுபேர் இருந்துள்ளனர். அவர்கள் மூவருமே கரும் புலிகள் என்று செய்திகளில் கூறப்பட்டது. எமக்கு கிடைத்த தகவல்களின்படி மூவரில் ஒருவர் புலிகள் இயக்க உறுப்பினர் அல்ல. வெளிநாடு செல்ல வந்து தங்கியிருந்தவர். அவருக்கு அங்கு ஆயுதம் இருப்பதோ, தன்னுடன் இருப்பவர்களின் தாக்குதல் திட்டம் குறித்தோ தெரிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஏனைய இருவரும்தான் புலிகளுடன் தொடர்புள்ளவர்கள். ஆனாலும் தாக்குதல் குழுவில் முக்கியமானவர்கள் அல்ல. தாக்குதலுக்கு தேவைப்படும் உதவிகளை செய்யவும், குறிப்பிட்ட வீட்டை சந்தேகப்படும் படியாக அமையாமல் தங்கியிருக்கவும் அமர்த்தப்பட்டவர்கள் என்று ஒரு தகவல் கூறுகிறது.

அந்த இருவரும் தாக்குதல் பற்றித் தெரிந்திருந்தனரே தவிர, அதற்கான திட்டங்கள், கொழும்பில் தங்கியிருந்து திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பாளர் யார் போன்ற விபரங்களை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

இரத்மலானை வீட்டில் தேடுதல் நடத்தியபோது, துருவித் துருவித் தேடியும் ஆயுதங்களைக் கண்டு பிடிக்க முடியவில்லையாம். பின்னர் தண்ணீர் தாங்கியை துருவியபோதுதான் ஆயுதங்கள் மாட்டியிருக்கின்றன.

ஆனால் அங்கு கிடைக்கப்பெற்ற ஆயுதங்கள் விமானத் தளத்தை தாக்குவதற்கு போதுமானவையல்ல.

ஹெக்லர் குக் ரக துப்பாக்கி ஒன்று, 40எம்.எம். கிரனேட் லோஞ்சர்கள் இரண்டு, மற்றும் கரும்புலிகள் அணியும் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் மூன்று ஆகியனதான் கைப்பற்றப்பட்டவற்றில் பிரதானமானவை. ஆர்.பி.ஜி. கைப்பற்றப்பட்டதாக வெளியான செய்திகள் தவறானவை. கிரனேட் லோஞ்சரைத்தான் ஆர்.பி.ஜி.என்று தவறாக செய்திகளில் கூறப்பட்டன.

ஆர்.பி.ஜி ரொக்கட் லோஞ்சரை நகர்ப்புறத்தில் நடைபெறும் துரித அசைவு கொண்ட அதிரடித் தாக்குதல்களுக்கு காவிச் செல்வது சிரமம். அது தவிர மறைந்திருந்து தாக்கும்போது ஆர்.பி.ஜி.யில் இருந்து வெளிப்படும் ஒளிப்பிழம்பை குறிவைத்து மறுதரப்பில் இருந்து தாக்கவும் முடியும். கிரனேட் லோஞ்சர் கையில் சுலபமாக கொண்டு செல்லக் கூடியது. அதற்கான கிரனேட்டுக்களும் பாரமானவையோ, பெரிதானவையோ அல்ல என்பதால், பெருமளவாகக் கொண்டு செல்லலாம்.

ஹெக்லர் குக் என்ப்படும் துப்பாக்கி ஏ.கே.47, ரி.56 ரக துப்பாக்கிகளைவிட சிறியது. நெருங்கிச் சென்று தாக்க வசதியானது. கைகளில் எடுத்துச் செல்வதும் சுலபம்.

கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களில் தகர்த்தெறியும் வேலையைச் செய்ய கிரனேட் லோஞ்சர்களையும், டொம்பா என்றழைக்கப்படும் சிறிய ரக மோட்டார்களையுமே புலிகள் பயன்படுத்தி உள்ளனர்.

**கிரனேட் லோஞ்சர் மூலம் விமானத் தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள விமானங்களை தாக்கி அழிக்கலாம். பிரதான காவல் அரணை கரும்புலிகள் நெருங்கிச் சென்று தற்கொலைத் தாக்குதல் மூலம் தகர்த்தெறிய நினைத்திருக்கலாம்.**

ஆனாலும் குறைந்தது பன்னிரண்டு பேராவது தாக்குதலில் பங்கு கொள்வதுதான் திட்டமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. அவ்வாறான ஒரு தாக்குதல் குழுவுக்கு போதுமான ஆயுதங்கள் இரத்மலானை வீட்டில் இருக்கவில்லை. விமானத்தளத்தின் உள்ளே புகுந்து ஒரே ஒரு கிரனேட் லோஞ்சரால் மட்டும் குறிப்பிட்ட நேரத்துக்குள் இலக்குகளை கண்டறிந்து தாக்குதல் நடத்த இயலாது.

கரும்புலிகளுக்கான அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதே தவிர, கரும்புலிகள் கைது செய்யப்படவில்லை. கரும்புலித் தாக்குதலுக்காக **கொழும்புக்குள் இரண்டு பெண் கரும்புலிகள் வந்து சேர்ந்துவிட்டனர் என்ற தகவலும் பெறப்பட்டிருக்கிறதாம். ஆனால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்ற விபரங்களை பெறமுடியவில்லை.**

மிக முக்கியமான விடயம் என்னவென்றால் குறிப்பிட்ட தாக்குதல் திட்டத்தின் பொறுப்பாளர் கைதுசெய்யப்படவில்லை.

உளவறியும் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட சிவநேசனுக்கும், அகிலனுக்கும் தாக்குதல் குழுவின் பொறுப்பாளர் மற்றும் தாக்குதல் குழுவினர் தங்கியிருக்கும் இடங்கள் பற்றிய விபரங்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

உளவறியும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மாட்டிக் கொள்ளக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால்,உளவறியும் பணியில் ஈடுபடுவோருக்கு அவர்களது பணிக்கு தேவையான விபரங்கள் மட்டுமே தெரிந்திருக்கும்.

விசாரணையின்போது எதையாவது சொல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் தங்கள் ஊகங்களையும், கற்பனைகளையும் கூட அவர்கள் சொல்லிவிடலாம். அவை செய்திகளாக வரும்போது முன்னுக்குப் பின் முரணாக குழப்புகின்றன.

சிவநேசன்தான் முன்னர் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம் மீதான தாக்குதலின்போது வாகனம் ஓட்டிச் சென்றிருக்கிறார். அந்த வாகனத்தை வர்த்தகர் கோபாலபிள்ளைதான் பின்னர் விற்றிருக்கிறார்.

கொழும்பில் மீன் முதலாளிபோலவே சிவநேசன் தங்கியிருந்தாராம். சிவநேசன் கொடுத்த தகவலின்பேரில் புலிகளுடன் தொடர்புள்ள சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். வர்த்தகர் கோபாலபிள்ளையின் தகவல்படி மேலும் சிலர் தேடப்படுகின்றனர். ஆனால் கோபாலபிள்ளைக்கும் தாக்குதல் குழு பற்றிய விபரங்கள் பெரிதாக தெரிந்திருக்காது.

புலிகளின் முன்னெச்சரிக்கையான இரகசிய வேலை முறைகள் காரணமாக,ஒரு முடிச்சு மாட்டினால் ஏனைய முடிச்சுக்களை கண்டு பிடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இல்லாதிருக்கின்றன. அந்த முன்னெச்சரிக்கை இல்லையானால் கொழும்பில் உள்ள புலிகளின் நடவடிக்கைகள், மறைவிடங்கள் என்பவை சங்கிலித் தொடராக மாட்டுப்பட்டிருக்கும்.

இரத்மலானை விமானத் தளத் தாக்குதல் திட்டத்தை கண்டுபிடித்துள்ளமை பாதிக் கிணறு கடந்த மாதிரித்தான். இதன் மூலம் புலிகளின் இரகசிய மையம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகவோ, புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுவிட்டதாகவோ கருத இடமில்லை. வேண்டுமானால் இலக்குகள் மாறலாம், ஆனால் தாக்குதல் அபாயம் தீரவில்லை என்பதை பாதுகாப்புத்தரப்பே ஒப்புக்கொள்கிறது.

**குறித்த தாக்குதலுக்கான பிரதான தாக்குதல் குழுவினர் தலைநகருக்குள் வந்து சேர்ந்து பிறிதொரு இடத்தில் தயாராக இருந்திருக்கலாம் என்றே பாதுகாப்புத் தரப்பு உறுதியாக நம்புவதாகத் தெரிகிறது.**

தங்கள் தீவிர நடவடிக்கைகள் மூலம் கொழும்பில் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக நம்பியிருந்த பாதுகாப்புத் தரப்புக்கு சந்தடியே இல்லாமல் புலிகள் தாக்குதல் ஒன்றுக்கு பிரமாண்டமாக தயாராகிய செய்தி அதிர்ச்சியானவைதான்.

வர்த்தகர் கோபாலபிள்ளைமீதும் அதுதான் பலத்த கோபம் ஏற்பட்டதாம். வீட்டையே தரைமட்டமாக்க புல்டோசருடன் போய்விட்டார்கள். பொலிஸ் மா அதிபருக்கோ, வெள்ளவத்தைப் பொலிசாருக்கோ தெரியாமல் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் சென்றனராம்.

இத்தனைக்கும் வர்த்தகர் கோபாலபிள்ளைக்கு பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த சிலருடன் நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன. வடபகுதிக்கு பொருட்களை அனுப்பும் வேலையில் கவனிக்க வேண்டியவர்களை கவனித்து கைக்குள் போட்டு வைத்திருந்தாராம். அவரிடம் மூன்று லொறிகள் இருந்தன என்று கூறப்படுகிறது.

பாதுகாப்புத் தரப்பின் ஒரு பக்கம் உள்ள இத்தகைய பலவீனங்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால் இவைதான் ஓட்டைகள். இவற்றை மறைத்துக்கொண்டு சோதனைகள், தேடுதல்கள் போதாமைதான் காரணம் என்று நினைத்து, கெடுபிடிகளை மேலும் அதிகமாக்குவதுதான் பரிகாரம் என்று கருதப்படுமானால் அதுவும் தப்புக் கணக்குத்தான்.

**கோபாலபிள்ளை புலிகளுடன் தொடர்புள்ளவர் என்பதற்காக அவர் வீட்டையே தரைமட்டமாக்க எடுத்த முயற்சி சரியான ஒன்றல்ல. இப்படிச் செய்தால்தான் படிப்பினையாக இருக்கும் என்று கருதியிருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அந்த நடவடிக்கை தொடர்பாக பலத்த அதிருப்தியே தோன்றியிருந்தது.**


ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட வீடுகள் பெரும்பான்மை இனத்தவருடைய வீடுகள் என்றால் உடைபடுவதில்லை. அதே வீடு தமிழர் ஒருவருக்கு சொந்தமாக இருந்தால் மட்டும் புல்டோசருடன் கிளம்பிவிடுகிறார்கள் என்று கருதப்பட்டது. முன்னர் வெள்ளவத்தையில் வீடு இடிக்கப்பட்டதை நீதிபதியே கண்டித்திருந்தார்.

புலிகளுக்கு உதவும் ஒருவர் பின்விளைவுகளையும் ஓரளவு அறிந்தேதான் உதவுகிறார். அதனால் வீடு இடிக்கப்படுவதால் அவருக்கு படிப்பினை கொடுக்கலாம் என்ற காரணம் நேர்த்தியானவை அல்ல. அவ்வாறு வீடு இடிக்கப்படும் செய்திகள் தமிழ்மக்களிடம் ஏற்படுத்தும் தாக்கங்கள் அரசுக்கே பாதகமானதாக மாறுகின்றன என்பதே உண்மையாகும். ■

நாரதர்

---

# அதிரடி அப்பாத்துரை



**ஆயுதம் இருந்த வீட்டைக்கூட** இடிக்கவில்லைப் பாருங்கோ. ஆதரவாளர் எனக் கருத்தப்பட்டவையின் வீட்டையல்லோ இடிச்சுத் தள்ளத் தொடங்கினவையாம்! தெகிவளையில் ஒரு வீட்டிலும் முந்தி ஆயுதம் எடுத்தவை. வீட்டை 'டச்' பண்ணவேயில்லை. தமிழர் வீடு எண்டால் மட்டும் புள்டோசருடன் போருக்குக் கிளம்பிப் போடுகினமாக்கும். தலைநகரிலையே இந்த இடி இடிக்கிறவை, சண்டை நடக்கிற பகுதிக்ளிலை என்ன இடி இடிப்பினம்?

**வீடுடைப்பு** விவகாரத்திலை உடனடியாகத் தலையிட்டுத் தடுத்தவர் குமாரர்தான். இல்லாட்டி வீடு காலியாகி இருந்திருக்கும். அதுக்குப்பிறகு சில தமிழ்க் கட்சிகள் தாங்களும் கண்டிக்கிறமாதிரி அறிக்கை விட்டுக் கலக்கிப்போட்டினம். என்னதான் சொன்னாலும் குமாரரின் துரித முயற்சியைப் பாராட்டத்தான் வேணும்!

**நீண்டகாலத்தின் பின்னர்** வவுனியா போயிருக்கிறார் நண்பர். கொழும்பில் நல்ல மழைதானே! வவுனியாவுக்கு உறவினர் வீட்டில் தங்கியிருந்தவர் அங்கு இடி முழக்கச் சத்தம் கேட்டதும் அங்கும் மழையாக்கும் எண்டு நினைச்சுப்போட்டார். "இங்கேயும் மழை கொட்டப்போகுதுபோல கிடக்கு. இந்த இடி இடிக்குது?" என்டாராம். உறவினர் வீட்டில் இருந்த சிறுமி விழுந்து விழுந்து சிரித்தாளாம். "ஏனம்மா சிரிக்கிறாய்?" எண்டு நண்பர் கேட்க, "அது இடியில்லை மாமா; புளியங்குளத்திலை சண்டை நடக்குது. ஷெல் குத்துகினம்;" என்டாளாம் சிறுமி. இப்பெல்லாம் வான சாஸ்திரம் மட்டும் தெரிந்திருந்தா போதாது. போர் சாஸ்திரமும் அறிஞ்சு வைத்திருக்கவேணும்.

**தேனகத்தில் மறுபடி** மதுக்கடைகள் திறக்கப்பட்டுவிட்டதல்லோ! 'குடிமக்கள்' அதை ஒரு விழாமாதிரியே கொண்டாடிப்போட்டினமாம். காய்ஞ்ச மாடு கம்பிலே விழுந்தமாதிரி, திறக்கப்பட்ட கடைகளை 'குடிமக்கள்' மொய்த்து நின்ற காட்சி இருக்குதே, ச்சா.. சொல்லி விளங்காது! 'ஆடுவோமே கள்ளுப் போடுவோமே' எண்டு பாடாததுதான் பாக்கி.

**கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை** ஒன்றில் வன்னிச் சண்டைக்கு தினச் செலவு 24 இலட்சம் எண்டு கணக்குக் காட்டியிருந்தவை. ஒன்றில் அது தவறான தகவலாக இருக்க வேணும், உண்மை எண்டால் எங்கேயோ ஏதோ சுருட்டல் நடக்கவேணும். வாய்ப்புள்ளவை பசியாறிக் கொண்டிருப்பது தெரிந்த சங்கதிதானே பாருங்கோ. தினமும் இரண்டெழுத்தார் மூவாயிரத்தி ஐநூறு ஷெல் அடிக்கினமாம். அதுவும் அப்பத்திரிகைக்கு பச்சை உடைத் தரப்பு சொன்ன செய்திதான். தினமும் மூவாயிரம் எண்டால் பத்துநாளைக்கு முப்பதாயிரம் ஷெல். அப்ப ஐந்து மாதத்தில்...?ஹிஹிஹி இரண்டெழுத்தார் என்ன ஷெல் காய்க்கிற மரமோ வைச்சிருக்கினம்- பிடுங்கிப் பிடுங்கி அடிக்கிறதுக்கு? எதிலுமே சரியான கணக்கு சொல்லுறதில்லை எண்டு முடிவெடுத்துப் போட்டினமாக்கும்!

**யாழ் குடாநாட்டில்** காணாமல் போனோரின் உறவினர்கள் உண்ணாவிரதம் இருந்தவை. அதனை எப்படியாவது நிறுத்திவைக்க பச்சை உடைத் தரப்பார் முயன்றவையாம். ஜனநாயகக் கட்சியினரிடமும் கோரப்பட்டதாம். "திலீபன் உண்ணாவிரதம் இருந்த தினங்களில் இவை ஏன் இருக்கினம்" எண்டு கேட்டு பொல்லாத முடிச்சுப் போடவும் சிருடைத்தரப்பார் சின்னச் சின்ன முயற்சி செய்தவையாம். ஒண்டும் பலிக்கேல்லை. மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு எண்டு ஒரு இயக்கம் அறிக்கை விட்டது. மக்களுக்கு முன்னால் நிண்டு வழிகாட்ட வேண்டியவை, பின்னால் நிண்டு அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கினம். பரிதாபமான நிலைமைதான்!

**சிங்கள ஆணைக்குழுவின்** அறிக்கையை இரண்டு பெரிய கட்சிகளும் இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிவைச்சிருக்கினம். அதுபோதாது எண்டு பச்சை அணித் தலைவர் ஆளும் தரப்பைப் பார்த்து "அது பற்றி உங்கள் அபிப்பிராயத்தை பட்டென்று சொல்லுங்கோ!" எண்டு சவால் விட்டிருக்கிறார். இனப் பிரச்சனை விஷயத்தில் மட்டு மல்ல, இனவாத விஷ விவகாரத்திலும் அதிகாரத்தரப்பு வாய் திறந்த பின்புதான் இவை வாய்திறப்பினம் போல கிடக்கு. பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவது எண்டு கேள்விப்பட்டதெல்லாம், அரசியலில் காணக்கூடிய காட்சிகளாகிப் போச்சு. தமிழ்க் கட்சிகள் கொடுத்த யோசனையை ஆராயாமல் சாக்குப்போக்குச் சொன்ன பச்சை அணி, ஆணைக்குழு அறிக்கையை மட்டும் ஆராய்ந்து நிலைப் பாட்டைச் சொல்லப்போகுதாம். நாட்டில் யாருக்கு மரியாதை பார்த்தியளோ? ஆணைக்குழு அறிக்கையை பிரபலமாக்கி பெரிதுபடுத்தும் காரியத்தை பச்சை அணி செய்யும் நோக்கம் என்னவோ? குட்டையைக் குழப்புவதற்கு யானைக் கட்சி அந்த ஆணைக்குழுவை நம்புகிறதாக்கும்.

இவ்வாரக் கவிதை எழுதியவர் கன்னியப்பன்.

**மனு**

"கடலில்
கல்லையும்
மந்திரியிடம்
மனுவும் போட்டேன்:
இரண்டும்
மூழ்கிப் போனது!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# தடபுடலான உபசரிப்பும் கெடுபிடியான கொலைகளும்

## பாணுக்குள் இருந்த ஆயுதம்

**1989** பெப்ரவரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்களில் ஒருவர் முன்னாள் கற்குடா பா.உ.வும், முன்னாள் அமைச்சருமான கே.டபிள்யூ தேவநாயகம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகிகள் பட்டியலில் இடம்பெற்று, மேடைகளில் தரக்குறைவாக வசைபாடப் பட்டவர்களில் அவரும் ஒருவர்.

முன்னாள் மட்டக்களப்பு தொகுதி எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான செ.இராசதுரை கொழும்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

"வடக்கு-கிழக்கில் துரோகிகளுக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது. அவர்களை மக்கள் நிராகரித்துவிட்டனர். இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்" என்று புலிகள் இயக்கத்தினர் கருத்து வெளியிட்டனர்.

"அமிர் தலைமையில் போட்டியிட்ட துரோகக் குழுக்களுக்கும், கூட்டணியினருக்கும் சாவுமணியடிக்கப்பட்டு விட்டது" என்றும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் கூட்டணியினரை புலிகள் மட்டுமல்ல, கூட்டணிப்பட்டியலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் குறி வைத்துத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். இருபுறமும் இடி வாங்கிக் கொண்டிருந்தது கூட்டணி.

### பெருமாள் அறிக்கை

கூட்டுச்சேர்ந்தது மட்டுமல்லாமல், பொதுப்பட்டியலிலும் இணைந்து போட்டியிட்ட நிலையில் வெற்றி, தோல்விகளுக்கு கூட்டுச்சேர்ந்திருந்த அனைவருமே பொறுப்பேற்பதுதான் நியாயம்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும், வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரான வரதராஜப்பெருமாளும் தோல்விகளுக்கான பொறுப்பை கூட்டணியினர்மீது சுமத்தினர். பொதுப் பட்டியலில் போட்டியிட்டதால் கிடைத்த வெற்றிகளுக்கு தாமே காரணம் என்று உரிமை கொண்டாடினார்கள்.



கஜன்- மட்டக்களப்பு ஈரோஸ் இராணுவப் பொறுப்பாளர்



முருகன்



சாம்



நாகரத்தினம்



சந்திரன்



ஜோன்சன்



ஜோசப்

ஈ.பி.ஆர்.எல்.எ.'ப். இயக்கத்தினரால் கொல்லப்பட்ட ஈரோஸ் இயக்க உறுப்பினர்களில் சிலர்.

தேர்தல் முடிவுகளை அடுத்து மட்டக்களப்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் வரதராஜப் பெருமாள். அங்கு வரதராஜப் பெருமாள் கூறியது இதுதான்:

"மாகாண சபையைக் கலைத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை தொலைத்து விடவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டமையால்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி படுதோல்வி அடைந்தது. கூட்டணி மட்டுமல்ல, வேறு பல கட்சிகளும், குழுக்களும்கூட இந்த நோக்கத்துடன்தான் செயற்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டுள்ளதால், தேசிய பட்டியல் ஊடாக பதவிக்கு வர முனைவது அரசியல் ஒழுங்கீனமாகும். தேர்தல் மூலமே பதவிக்கு வர முனைய வேண்டும்.

கூட்டணியில் ஒருவராவது வெற்றி வெற்றிருந்தால் 'போனஸ்' உறுப்பினர் பதவியை அவர்களுக்கு விட்டுக்கொடுப்பது நியாயம். ஆனால் இந்த நிலையில் மக்களின் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுப்பது தான் அரசியல் நாகரிகமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் அனைவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களாவர் என்று கூட்டணியின் செயலாளர் நாயகம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்." என்று கூறினார் பெருமாள்.

### ஆறுமாத வரையறை

இலங்கையில் இருந்து இந்தியப்படை வெளியேறுவதற்கு ஆறுமாதகால வரையறை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தார் ரஞ்சன் விஜயரத்ன. இலங்கையின் வெளிநாட்டமைச்சராகவும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவும் ஜனாதிபதி பிரேமதாசாவால் நியமிக்கப்பட்டிருந்தார் ரஞ்சன் விஜயரத்ன.

"இந்திய அமைதிப்படை வெளியேறுவதற்கு காலவரையறை எதனையும் விதிக்க முடியாது. இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைதி நிலை ஏற்படுவதையும், இந்திய-இலங்கை உடன்படிக்கை படிப்படியாக நடைமுறைக்கு உள்ளாவதையும் பொறுத்தே இந்தியப் படை வாபஸ் பெறப்படும்" என்று இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கே.திவாரி தெரிவித்திருந்தார்.

ரஞ்சன் விஜயரத்ன கூறியதற்கு பதிலடி கொடுப்பதுபோலவே திவாரியின் கருத்து வெளியானது.

இலங்கை மத்திய அரசுக்கும், வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கும் இடையே ஆரம்பத்தில் உறவுகள் சுமுகமாக இருப்பதுபோலத் தோன்றினாலும், பனிப்போர் இருக்கவே செய்தது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தம்மை மாகாண அரசாங்கம் என்றே குறிப்பிட்டு வந்தது அரசாங்கம் என்ற பதம் தவறானது, மாகாணசபை என்று மட்டுமே குறிப்பிட வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியது.

மாகாண அரசாங்கம் என்று குறிப்பிடப்பட்டால் கிட்டத்தட்ட ஒரு கூட்டாச்சித் தன்மை கொண்டதாக கருதப்பட்டுவிடும். அதிகாரங்களும் கூடியதாக இருக்கும். அதனால் அவ்வாறு அழைக்கப்படுவதை பிரேமதாசா அரசு விரும்பவில்லை.

இந்த விடயத்தில் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் உறுதியாக நின்றார் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும். மாகாண அரசாங்கம் என்றுதான் குறிப்பிடுவோம் என்று விடாப்பிடியாக கூறிக்கொண்டிருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தப்படியும், அரசியலமைப்புப் படியும் மாகாண சபைகள் என்றே கூறப்பட்டுள்ளது. மாகாண அரசாங்கம் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று பிரேமதாசா அரசு கூறியது:-

(தற்போது சந்திரிகா அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளிலும் பிராந்திய சபைகள் என்ற பதமே உள்ளது. பிராந்திய அரசாங்கங்கள் என்றே குறிப்பிடப்படவேண்டும் என்று ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக முன்வைத்த யோசனையில் தெரிவித்துள்ளன)

### உளவு வேலைகள்

இந்திய படை முகாம்கள், இந்தியப் படையினரின் நடமாட்டங்கள் என்பவற்றை கண்காணிக்க புலிகள் பல்வேறு வேடங்களில் திரிந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உணவு விடுதியில் இருந்து குருநகரில் இருந்த இந்தியப் படை அதிகாரிகளுக்கு உணவு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

ஒருமுறை அவ்வாறு உணவு கொண்டு சென்ற வேளை முகாமுக்கு அருகில் ஒரு சீவல் தொழிலாளி வழிமறித்தார்.

"நீர் இந்தியப் படை முகாமுக்கு அடிக்கடி சென்று வருகிறீர். என்ன விடயமாய்ப் போகிறீர்?" என்று கேட்டார் சீவல் தொழிலாளி. வேனில் இருந்தவர்களுக்கு, அவர் சீவல் தொழிலாளி போல வந்திருக்கும் புலிகள் இயக்க உறுப்பினர் என்பது விளங்கிவிட்டது.

"அவர்கள் உணவுக்கு பணம் கட்டிவிட்டுப் போகிறார்கள். நாங்கள் கொண்டு சென்று கொடுக்கிறோம்" என்றார் வேனில் இருந்தவர்.

"உணவு கொடுப்பதோடு நிறுத்திக் கொள்ளும், வேறு ஏதாவது தகவல் கொடுத்தால் என்ன நடக்கும் தெரியும்தானே" என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டார் புலிகள் இயக்க உறுப்பினர்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஒரு சம்பவம் நடந்தது. ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி புலிகள் அறிவித்திருந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் ஒவ்வொரு கடையாகச் சென்று "கடைகளை மூடக்கூடாது. மூடினால் நிரந்தரமாக மூடவேண்டியதுதான்" என்று எச்சரித்துக் கொண்டு சென்றனர்.

அவ்வாறு கடை கடையாக அவர்கள் சென்று கொண்டிருந்தபோது மக்களோடு மக்களாக நின்று கவனித்துக் கொண்டிருந்தார் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர்.

அவரது கையில் ஒரு சொப்பிங் பை இருந்தது. அதற்குள் ஒரு இறாத்தல் பாண் இருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் தன் அருகில் வந்ததும் பாணுக்குள் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, அவர்களில் ஒருவரை சுட்டுவிட்டு தப்பியோடிவிட்டார் அந்தப் புலிகள் இயக்க உறுப்பினர்.

### தேடுதல் வேட்டை

நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் வடக்கில் அமோக வெற்றிபெற்றதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் ஜீரணிக்க முடியவில்லை.

யாழ் குடாநாட்டில் ஈரோஸ் முக்கியஸ்தர்கள் மற்றும் உறுப்பினர்களின் வீடுகளுக்கு இரவிரவாகச் சென்று தேடுதல் நடத்தினார்கள்.

ஈரோஸ் முக்கியஸ்தரான கரன் என்பவரது வீட்டுக்கும் அவ்வாறு சென்றனர். அப்போது வீட்டில் கரன் இருக்கவில்லை. கரனது மைத்துனரும், ஈரோஸ் முக்கியஸ்தருமான சுதா மாஸ்டர் வீட்டில் இருந்தார்.

தேடிவந்தவர்களுக்கு சுதா மாஸ்டரைத் தெரியாது. கரனின் வீட்டாரிடம், "கரன் எங்கே, சுதா மாஸ்டர் எங்கே?" என்று விசாரித்தார்கள்.

"இருவரும் இங்கே இல்லை. எப்போதாவதுதான் வருவார்கள்" என்றனர். சுதா மாஸ்டரைக் காட்டி "இவர் யார்?" என்று கேட்டார்கள்.

"எங்கள் மருமகன்."

"உண்மையைத்தான் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டனர். வீட்டில் இருந்த திருமணப் போட்டோவைக் காண்பித்தார்கள்.

தேடி வந்தவர்களுக்கு அதனால் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. வீட்டுக்குள் ஒளிந்திருக்கிறார்களா என்று தேடிப் பார்த்துவிட்டு, "எங்கள் கண்ணில்பட்டால் அவர்கள் தொலைந்தார்கள். அவர்களது நல்ல நேரம் இங்கே இல்லாமல் போய்விட்டார்கள்" என்று கூறிவிட்டு சென்றுவிட்டனர்.

தாங்கள் தேடிச் செல்பவர்கள் பற்றிய போதிய தகவல்கள் இல்லாமல் அவர்கள் வந்து போனதால் சுதா மாஸ்டர் உயிர்தப்பினார். அவர் வேறுயாருமல்ல தற்போது ஈரோஸ் இயக்க பொதுச் செயலாளராக இருக்கும் சுதாகரன்தான் அவர்.

யாரையோ தேடிச்சென்று வேறு ஒருவரை சுட்டுவிட்டுப் போவது, தங்கள் உறுப்பினர்களைக்கூட யார் என்று தெரியாமல் தவறுதலாகச் சுட்டுத்தள்ளியது என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் நடத்திய கூத்துக்கள் பல இருக்கின்றன.

### பேச்சும்-கொலையும்

வன்னிப் பிராந்தியத்தில் நெடுங்கேணியில் ஈரோஸ் உறுப்பினர் ஒருவர் இந்திய அமைதிப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஈரோஸ் தலைவர் பாலகுமார் கடிதம் ஒன்றைக் கொடுத்து தமது உறுப்பினர்கள் சிலரை நெடுங்கேணியில் இருந்த இந்தியப் படை முகாமுக்கு அனுப்பிவைத்தார்.

இந்தியப் படை அதிகாரியுடன் தமது உறுப்பினரின் விடுதலை பற்றிப் பேசிவிட்டு ஈரோஸ்-உறுப்பினர்கள் ஆறுபேரும் திரும்பினார்கள். அவர்களுடன் பேசிய இந்தியப் படை அதிகாரி வவுனியாவில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமுக்கு சென்று கதைக்குமாறும், குறிப்பிட்ட உறுப்பினர் தொடர்பாக தகவல் தந்தது அவர்கள்தான் என்றும் கூறியிருந்தார்.

அதனால் வவுனியாவில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க முகாமுக்கு அவர்கள் ஆறுபேரும் சென்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமில் தடபுடலான வரவேற்புக் கிடைத்தது. "வாருங்கள் தோழர்கள்" என்று குளிர் பானங்கள் எல்லாம் கொடுத்து உபசரித்தனர்.

கைதுசெய்யப்பட்ட உறுப்பினரை விடுவிப்பது முதல், இயக்கப் பிரச்சனைகள்வரை பேசிமுடித்துவிட்டு பிற்பகல் 2 மணிக்கு ஈரோஸ் உறுப்பினர்கள் ஆறுபேரும் புறப்பட்டனர்.

"அடிக்கடி இந்தப் பக்கம் வாருங்கள்" என்று அன்பாக வழியனுப்பி வைத்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

வவுனியாவில் தமது இயக்க உறுப்பினர்களைச் சந்தித்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உபசரிப்புப் பற்றிக் கதை கதையாக கூறிவிட்டு ஆறுபேரும் நெடுங்கேணிக்கு புறப்பட்டனர்.

வவுனியாவின் ஒதுக்குப் புறமான இடமொன்றில் வைத்து அவர்களை வழிமறித்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

"உங்களோடு பேசவேண்டும். பொறுப்பாளர் வரச் சொன்னார். பேசியபின்னர் உங்களை உரிய இடத்திற்கு கொண்டுபோய் சேர்க்கிறோம்" என்றார்கள்.

இப்போது அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டது வேறு ஒரு இடத்தில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமுக்கு.

அந்த முகாமுக்குள் சென்றதுமே ஈரோஸ் உறுப்பினர்கள் ஆறுபேரும் செமர்த்தியாகத் தாக்கப்பட்டனர். பின்னர் ஆறுபேரையும் கட்டிப்போட்டு சித்திரவதை செய்தனர்.

இறுதியாக ஆறுபேரையும் சுட்டுக் கொன்றார்கள். உடல்களை உமிக் குவியலுக்குள் போட்டு தீயிட்டனர்.

பாதி எரிக்கப்பட்ட நிலையில் இருந்த ஆறு உடல்களும் இந்தியப் படையினரால் கண்டெடுக்கப்பட்டது. தமது ஆறு உறுப் பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் கடத்தப்பட்டதாக இந்தியப் படையிடம் ஈரோஸ் புகார் செய்திருந்தது.

அதனால் ஈரோஸ் தலைவர் பாலகுமாருக்கு இந்தியப் படையினர் தகவல் அனுப்பினார்கள். பாலகுமார் சென்று தனது உறுப்பினர்கள்தான் அவர்கள் என்று சடலங்களை இனம் காட்டினார்.

முதலில் அந்த ஈரோஸ் உறுப்பினர்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். உபசரித்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை. இந்தியப் படை அதிகாரி ஒருவரே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புடன் பேசுமாறு குறிப்பிட்ட முகாமுக்கு அனுப்பிவைத்திருந்தார். அதனால் அந்த முகாமுக்கு வந்தவர்கள் அங்கேயே வைத்து காணாமல் போனால் குறிப்பிட்ட அதிகாரிக்கு விஷயம் தெரிந்துவிடுமே. அதனால்தான் விட்டுப் பிடித்தார்கள்.

நாகரத்தினம் (மாமா), குணபால், அருச்சுனன் (ஐயா) ராமச்சந்திரன் (சாம்) சிவபாலன் (செல்வம்) வன்னி ஆகிய ஆறுபேரே கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றி வெளியே தெரிந்ததும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் முந்திக் கொண்டு ஒரு அனுதாப அறிக்கை வெளியிட்டனர். கொலைக்கு காரணமானவர்களை கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பாக வன்னியில் ஈரோஸ் உறுப்பினர்களான ஹரன், மஹிந்தர், விஜி, வரன், அஜித், சில்வா ஆகியோர் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினரால் கொல்லப்பட்டனர்.

### ஐக்கியத்துக்கு அழைப்பு

"புலிகள் உட்பட சகல சக்திகளும் ஐக்கியப்படுவதையே ஈ.பி.ஆர்.எல்.எஃப். விரும்புகிறது. பேச்சுக்கள் மூலமாக பிரச்சனைகளை தீர்க்க விரும்பும் ஜனநாயகவாதிகள் நாங்கள். ஈரோஸ் இயக்கத்தினரையும் பேச வருமாறு அழைக்கிறோம்" என்று வரதராஜப் பெருமாள் அழைப்பு விடுத்தார்.

அவர் அழைப்பு விடுத்த சில நாட்களுக்குள் ஈரோஸ் உறுப்பினர்கள் மூன்றுபேர் இரவோடு இரவாகக் கடத்திச் செல்லப்பட்டனர்.

ஜோசப், சந்திரன், ஜோன்சன் ஆகியோரே அவ்வாறு கடத்திச் செல்லப் பட்டனர். மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, அவர்களது உடல்களும் கிடைக்காமல் செய்துவிட்டனர்.

இது தொடர்பாக ஈரோஸ் விடுத்த அறிக்கையில்; "பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மக்கள் கொடுத்த தீர்ப்புக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் எம்மை அழித்தொழிக்க திரைமறைவில் தீட்டிய சதியின் விளைவுகளே இவையாகும்.

தேனொழுகப் பேசியபடி நெஞ்சிலே வஞ்சனையை சுமந்து திரிகிறார்கள். எமது அமைப்புடன் இருக்கக்கூடிய முரண்பாடுகளை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என பகிரங்கமாக அழைப்பு விடுத்தபடி எமது தோழர்களை இல்லாதொழிக்கும் ஈனத்தனத்தை செயற்படுத்தி வருகின்றனர்.

தமது திட்டமிட்ட படுகொலைகளுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் என்ன நியாயம் கூறப்போகின்றனர்?" என்று ஈரோஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

### மற்றொரு பேச்சுவார்த்தை

வந்தாறு மூலையில் இருந்து மட்டக்களப்பை நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஈரோஸ் உறுப்பினர்கள் இருவர் சென்று கொண்டிருந்தனர்.

ஏறாவூர் சந்தியில்வைத்து அவர்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் வழி மறித்தனர்.

"உங்களுடன் சில விஷயங்களைப் பேசவேண்டும், வாருங்கள்" என்று கூறி அவர்களை தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அழைத்துச் செல்லப்பட்ட இரவே இருவரும் கொல்லப்பட்டனர். ஈரோஸ் உறுப்பினர்களான முருகன், கஜன் ஆகியோரே அவ்வாறு கொல்லப்பட்டனர்.

கஜனின் சொந்தப் பெயர் மார்க்கண்டு நிஷாகரன். (அன்புவழிபுரம்-திருமலை) ஈரோஸ் இயக்க மட்டக்களப்பு பிரதேச இராணுவப் பொறுப்பாளராக செயற்பட்டவர். 1983 முதல் ஈரோஸ் இயக்க உறுப்பினராக இருந்தவர். மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களுக்கு தலைமை தாங்கியவர்.

பலியான மற்றொருவரான முருகனின் சொந்தப் பெயர், கைலாசபதி அன்பழகன். யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டை பிறப்பிடமாகக் கொண்டவர். 1983 முதல் ஈரோஸ் இயக்க உறுப்பினர்.

### வைக்கப்பட்ட குறி

யாழ் நகரில் இந்தியப் படையினர்மீது தாக்குதல் ஒன்று நடத்தத் திட்டமிட்டனர் புலிகள். அதற்காக லான்ட் மாஸ்டர் (மூன்று சில்லு ட்ராக்டர்) ஒன்றில் வெடி மருந்தை நிரப்பி எடுத்துச் சென்றனர்.

வண்டியின்மேல் யாழ்ப்பாணம் சந்தைக்கு கொண்டு செல்வதுபோல மரக்கறிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பலாலி வீதி வழியாக யாழ் நகர் நோக்கி லான்ட் மாஸ்டர் சென்றுகொண்டிருந்தது. கந்தர் மடம் பகுதியை கடந்து கொண்டிருந்தபோது ஏதோ ஒரு கோளாறு காரணமாக லான்ட்மாஸ்டர் வெடித்துச் சிதறியது.

மேஜர் சுபாஸ் (நவாலி) உட்பட புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூன்றுபேரும், அப் பகுதியால் சென்றுகொண்டிருந்த பொது மக்கள் சிலரும் பலியாகினர்.

### காட்டிலிருந்து

வன்னிக் காட்டில் இருந்து வெளிநாட்டில் உள்ள தனது நண்பன் ஒருவருக்கு புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் எழுதிய கடிதம் புலிகளின் வெளிநாட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அக்கடிதத்தில் இருந்து ஒருபகுதி:

"தமிழீழம் என்பது அமிர்தலிங்கம் சொன்னதுபோல ஐந்தாயிரம் இளைஞர்கள் இருந்தால் ஆறுமாதத்தில் கிடைக்கும் என்பது போல் அல்ல. எங்களுக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கை முடிய பல வருடங்கள் செல்லலாம்.

அதன்பின்னர் சிறீலங்காவுக்கு எதிராக போராடவேண்டி வரும். எங்கள் இலட்சியம் தமிழீழம்தான். அதற்கு குறைந்த தீர்வை ஏற்க மாட்டோம்.

இடையிடையே மாகாணசபை போன்ற இடைக்காலத் தீர்வுகள் வரலாம். ஆனால் தமிழீழம் கிடைக்கும் வரை கழுத்தில் உள்ள சயனைட்டை கழற்ற மாட்டோம்" என்று எழுதியிருந்தார்.

(தொடர்ந்து வரும்)

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# இனவாதத்தை மீண்டும் வெளியிடும் சிங்கள ஆணைக்குழு!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த வாரம் மலேசியாவுக்குப் பயணஞ் செய்து திரும்பியிருந்தார்.

ஆசியாவில் இன்று பல்வேறு நாடுகள் துரிதகதியில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிகண்டு வருகின்றன. அத்தகைய நாடுகளில் ஒன்றே மலேசியாவாகும்.

சிங்கப்பூர், தாய்வான், மலேசியா, தென்கொரியா, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளே வளர்ச்சிப் பாதையில் ஒன்றுடன் ஒன்று போட்டியிட ஆரம்பித்துள்ளன.

போரினால் பல வருடங்கள் சின்னாபின்னப்பட்டுப் போயிருந்த வியட்நாம்கூட இன்று பல்வேறு கைத்தொழில் முயற்சிகளில் அடி எடுத்துவைத்துள்ளது.

அயல் நாடான இந்தியாகூட அதன் அரசியல், சமூகப்பிரச்சனைகளுக்கு மத்தியில் கைத்தொழில், மற்றும் கம்பியூட்டர் தொழில்நுட்பத்துறைகளில் அபரிமித வளர்ச்சி கண்டு வருகின்றது.

மலேசியாவும் இலங்கையைப் போன்று பிரிட்டிஷாரின் காலனித்துவத்தின் கீழிருந்த ஒரு நாடாகும்.

**இலங்கையும், மலேசியாவும் ஒரேகாலப்பகுதியிலேயே பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றிருந்தன. அச்சமயம் இலங்கையரதும், மலேசியர்களதும் வாழ்க்கைத் தரம் சமாந்தரமான நிலையிலேயே இருந்தது.**

இரு நாட்டவர்களது தலா வருமானமும் சமாந்தரமானதாகவே இருந்தது.

இருந்தபோதிலும் மலேசியா தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் தீவிர அக்கறை காட்டியிருந்தது. தனது நாட்டில் எழக்கூடிய குறுகிய அரசியல், இனத்தகராறுகளுக்கும் முடிவுகட்டியிருந்தது. இதன் காரணமாக இன்று இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் மலேசியா ஆசியாவில் ஒரு சிறந்த வளர்ச்சி கண்ட நடாகவே மிளிர்கின்றது.

மலேசியா பிரிட்டிஷாரின் ஆட்சியில் இருந்தபோது இலங்கையர்கள், இந்தியர்கள் ஆகியோர் அங்கு சிவில் சேவையில் பணியாற்றியிருந்தனர். அவ்வாறு பணியாற்றியவர்களில் பலர் இன்றுங்கூட மலேசிய ஓய்வூதியத்தைப் பெறுவோராக இலங்கையில் இருக்கின்றனர்.

ஆனால் 50 வருடங்களுக்கு முன்னர் மலேசிய நாட்டுடன் சமாந்தர நிலையில் இருந்த இலங்கையின் நிலை இன்று பரிதாபத்துக்குரியதாகவே உள்ளது.

இனப்பிரச்சனை காரணமாக உள்நாட்டு யுத்தத்தினால் இலங்கை துவண்டு போயுள்ளது. அதன் மூலவளங்கள் புறக்கணிக்கப்பட்டு ஆண்டு தோறும் வரவு-செலவுத்திட்டத்தில் இராணுவச் செலவே பூதாகரமாக உயர்ந்து வருகின்றது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அரசியல் பிரச்சனைகளுக்கு ஊடாக வந்தவையேயாகும். ஆயினும் அந்நாடுகள் அப்பிரச்சனைகளை விரைந்து முடிவுக்குக் கொண்டுவந்து தமது முழு அளவிலான ஈடேற்றத்தில் அக்கறை காட்டியிருந்தன.

மலேசியா என்னும்போது மற்றொரு விடயமும் நினைவுக்கு வருகின்றது. இலங்கையின் சுதந்திரத்தின் பின் தோன்றிய தமிழ் அரசியல் தலைவர்களில் முக்கியமானவர்களான அமரர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், மு.திருச்செல்வம் ஆகியோரும் மலேசியாவிலேயே பிறந்தவர்கள் என்பதும், அங்கேயே தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மலேசியாவும், இலங்கையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் ஏககாலத்தில் இருந்தவை என்ற வகையில் எதிர்வரும் சுதந்திர பொன்விழா ஆண்டு இரு நாடுகளினதும் வளர்ச்சிப்போக்கை அவதானிக்கக்கூடிய காலக்கண்ணாடியாகவே இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மலேசிய விஜயத்தை மேற்கொண்டிருந்த சமயமே சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

சந்திரிகா அரசின் உத்தேச அரசியல் தீர்வு யோசனைகளை எதிர்ப்பதாகவும், பேரின வாதத்தை தொடர்ந்து எடுத்துரைப்பதாகவுமே அந்த இடைக்கால அறிக்கை விளங்கியிருந்தது.

**சிங்கள ஆணைக்குழு என்பது புதியதொன்றல்ல. 1950ம் ஆண்டிலேயே முதலாவது சிங்கள ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தது.**

சுதந்திர இலங்கையில் பேரினவாதம், பௌத்தமதவாதம் போன்ற கொடும் விஷத்தை ஆரம்பத்தில் இந்த ஆணைக்குழுவே கக்கத் தொடங்கியது.

1950ம் ஆண்டு- ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே இந்த சிங்கள ஆணைக்குழு தோற்றம் பெற ஆரம்பித்து, 1956ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இந்த ஆணைக் குழுவின் நிலைப்பாடே பெரும் பிரசாரமாகவும் வியாபித்திருந்தது.

**அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா 'சிங்களம் மட்டுமே' சட்டத்தைக் கொண்டு வருவதற்கு உந்து சக்தியாக இருந்ததும் சிங்கள ஆணைக்குழுவின் அழுத்தங்களே என்பது குறிப்பிடத்தக்கது.**

பிரிட்டிஷ் ஆட்சியில் பௌத்தமதம் புறக்கணிக்கப்பட்டு, சிங்கள மொழியும் பின் தள்ளப்பட்டமையால் இலங்கையின் பெரும்பான்மை மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதே சிங்கள ஆணைக்குழுவின் பிரசாரமாக இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கையர்கள் என்ற ரீதியில் சிங்களவர்கள் மட்டுமல்ல அனைத்து இனைத்தவர்களும் பாதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் சகல மொழிகளும், மதங்களும்கூட செல்வாக்கை இழந்திருந்தன. ஆங்கிலமே முதன்மை மொழியாகவும், கிறிஸ்தவமே முதன்மை மதமாகவும் விளங்கியிருந்தன.

இந்நிலையில் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் ஒருதலைப்பட்சமாக சிங்கள மொழியும் பௌத்தமுமே பாதிக்கப்பட்டிருந்தன என்ற வகையில் அன்றைய சிங்கள மகா சபை ஆரம்பித்த பிரசாரம், இலங்கையில் தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் புறந்தள்ளிவிட்டிருந்தது.

இதன் காரணமாகவே சிங்கள, தமிழ் இனவாதங்கள் தலைகாட்ட ஆரம்பித்ததுடன், இரு இனங்களுமே இன்று முட்டிமோதும் நிலை தோன்றியுள்ளது.

**இலங்கை சுதந்திரமடைந்தது முதல் வியாபித்து வந்துள்ள இனவாதம் தொடர்ந்து நீண்டு விரிந்து செல்வதையே சிங்கள ஆணைக்குழு வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.**

இது போன்ற அறிக்கைகள் இலங்கையை இருபத்தியோராம் நூற்றாண்டினுள்ளும் ஒரு சர்ச்சைக்குரிய நாடாகவே அடி எடுத்து வைக்கச்செய்யும்.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்கொட்லாந்து மக்களும் 500 ஆண்டுகளுக்குப் பின்னர் வேல்ஸ் மக்களும் தமது சுயநிர்ணயம், சுயாட்சி என்பவற்றை பிரிட்டனில் மீளப் பெற்றுள்ளார்கள்.

இதற்கு ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் மக்கள் தமது தனித்துவங்களில் கொண்டிருந்த அசைக்கமுடியாத உறுதிப்பாடும், பிரிட்டிஷ் ஆட்சியாளரது ஜனநாயகப் பாரம்பரியங்களை மதிக்கும் தன்மைகளுமே பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

**விவாதங்கள், ஆய்வுகள், எதிர்க்கட்சியின் கோட்டுக்குள் பந்தை அடித்துவிடுதல் போன்ற இழுத்தடிப்புக்கள் இல்லாமல், பிரிட்டனின் புதிய அரசாங்கம் மேற்கொண்ட நேரடி அணுகுமுறைகளே தீர்வை எட்டக் காரணமாக அமைந்துள்ளன.**

இவர்களால் நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க முடியாது. சாதனைகளைப்



படைக்க முடியாது என்று பதவியில் உள்ள கட்சியைப் பற்றி மக்களிடம் பிரசாரம் செய்துதான், புதிய ஆளும் க்ட்சி பதவிக்கு வருகிறது.

அப்படி பதவிக்கு வந்த ஆளும் கட்சி தம்மால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட முன்னாள் ஆளும் கட்சி ஒத்துழைத்தால்தான் சாதனை படைக்கலாம் என்று கூறுவது எத்தனை வேடிக்கையானது.

**அந்த வேடிக்கை பிரிட்டனில் நடக்கவில்லை. முன்னாள் ஆளும் கட்சியால் படைக்க முடியாத மாற்றங்களை தங்கள் அணுகுமுறைகளால் படைத்துக் காட்டத் தொடங்கியுள்ளனர். இந்த மாற்றங்களை பிரிட்டிஷ் எதிர்க்கட்சி எதிர்க்குமானால் மக்களிடம் இருந்து அக்கட்சியினர் தனிமைப்படக்கூடிய நிர்ப்பந்தத்தையும் புதிய ஆளும் கட்சி அங்கு ஏற்படுத்தி உள்ளது.**

ஆனால் இலங்கையில் ஆளும் பொதுஜன முன்னணியினர், 'சாதிக்க முடியாதவர்கள்' என்று தம்மால் பதவியில் இருந்து இறக்கப்பட்ட ஐ.தே.கட்சியிடம் ஒத்துழைப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**எந்தவொரு நாட்டிலும் எதிர்க்கட்சியின் நோக்கம் அடுத்து ஆட்சியைப் பிடிப்பதில்தான் இருக்கும். அதனால் தம்மால் முடியாத ஒரு பெரிய காரியத்தை ஆளும்கட்சி செய்து முடித்து பலன் பெறுவதை எதிர்க்கட்சி விரும்பமாட்டாது. அவ்வாறு செய்வது தனக்குத்தானே குழி தோண்டிக் கொள்ளும் காரியம் என்றே எதிர்க்கட்சி நினைத்துக் கொள்ளும்.**

ஆனால், பொதுப் பிரச்சனை ஒன்றில் ஆளும் கட்சி முன்வைக்கும் தீர்வொன்று மக்களின் பெருத்த ஆதரவைப் பெறும் என்று தெரிந்தால், வேறு வழியின்றி எதிர்க்கட்சியும் ஆதரிக்க வேண்டி ஏற்படும்.

உதாரணமாக, பொது ஜன முன்னணி அரசு போரை நடத்தி யாழ் குடாநாட்டை பிடித்தமை ஐ.தே.கட்சிக்கு கசப்பான ஒன்றுதான். தம்மால் முடியாத ஒரு காரியத்தை செய்துவிட்டார்களே என்று அரசியல் பொறாமை ஏற்பட்டதும் மெய்தான். ஆனால் யாழ் குடாநாட்டு வெற்றியை தென்னிலங்கை மக்கள் வெடி கொளுத்திக் கொண்டாடினார்கள். யாழ் குடாநாட்டை கைப்பற்றியமை பெரும் வீரச் செயலாகக் கருதப்பட்டது. எனவே ஐ.தே.கட்சியும் படைவீரர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவ்வாறு பாராட்டுத் தெரிவிக்காமல் இருந்தால் தென்னிலங்கை மக்களின் உணர்ச்சிப் பெருக்கின் முன்பாக தாக்குப்பிடிக்க முடியாமல் போய்விடும் என்று நினைத்தே அவ்வாறு செய்தனர்.

அது மட்டுமல்லாமல் யுத்தத்தை நடத்த தம்மிடம் ஆலோசனை கோரப்பட்டால் உதவத் தயார் என்றுகூட ரணில் கூறியிருந்தார்.

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களில் அரசு கேட்டாலும்கூட ஒத்துழைப்பு வழங்க ரணில் தயாராக இல்லை. ஆனால் யுத்த விடயத்தில் அரசு கேட்காமலேயே 'ஒத்துழைப்பு வழங்கத் தயார்' என்றும், 'ஆலோசனை கூறத் தயார்' என்றும் ரணில் தானாக முன்வந்து கூறியிருந்தார்.

யாழ் குடாநாட்டில் அரசு முன்னெடுத்த இராணுவ நடவடிக்கையும், அதற்கு சிங்கள மக்களிடம் கிடைத்த வரவேற்புமே ரணிலை அப்படிப் பேசவைத்தது. ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று தானாக முன்வந்து கூறச் செய்தது.

**எனவே இராணுவ முனைப்புக்களில் அரசு காட்டிய தீவிரத்தை அரசியல் தீர்வு விடயத்தில் காட்டியிருக்குமேயானால் எதிர்க்கட்சியும் தவிர்க்க முடியாமல் ஒத்துழைக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.**

தீர்வு யோசனைகளை முன்வைத்த அரச தரப்பினர் அதனை விவாதத்துக்குரிய ஆவணமாக சித்தரித்தனரே தவிர, அந்த தீர்வு யோசனைகள் மக்களால் ஏற்கப்படக் கூடியவிதமான பிரசாரங்களில் ஈடுபட தயக்கம் காட்டினர். தமது தீர்வு யோசனையில் உள்ள ஒவ்வொரு அம்சமும் எத்தகைய முக்கியத்துவம் உரியது என்பதை எடுத்துச் சொல்வதற்கு பதிலாக, தீர்வு யோசனையில் உள்ள விடயங்கள் விவாதத்தின் பின்னர் மாற்றத்திற்கு உள்ளாகக்கூடியவையே என்ற கருத்தையே வெளியிட்டனர்.

**முதற் கோணல் முற்றும் கோணல் என்பதுபோலவே ஆட்சியாளரின் தீர்வு தொடர்பான அணுகுமுறைகளும் ஆரம்பமாகி இருந்தன. இனப்பிரச்சனைக்கு இதுதான் உறுதியான தீர்வு என்று ஒரு திட்டத்தை முன்வைத்து அதற்கு மாபெரும் ஆதரவை திரட்டும் வழிமுறைக்கு பதிலாக, தீர்வு யோசனைகள் என்ற விவாதத்துக்குரிய ஆவணம் முன்வைக்கப்பட்டது.**

அதன் மூலம் அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான தமது பொறுப்பை ஏனைய அரசியல் கட்சிகளிடமும், மக்களிடமும் சுமத்திவிட்டு ஆட்சியாளர்கள் மெல்ல ஒதுங்கி நின்று கொண்டனர்.

**இந்த கால இழுத்தடிப்பும், விவாதங்கள் மூலம் குட்டையைக் குழப்ப வழங்கப்பட்ட சந்தர்ப்பமும்தான் சிங்கள ஆணைக்குழு போன்றவை மறுபடி புத்துயிர் பெறக் காரணமாகின. கடந்த தேர்தல்களில் மக்களால் நிராகரிக்கப்பட்ட பேரினவாத குழுக்களும் விவாதம் என்ற போர்வையில் மறுபடி தலைதூக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது.**

அரசு முன்வைத்த தீர்வு யோசனைகள் அக்குவேறு, ஆணிவேறாக பேரினவாத சக்திகளால் விமர்சிக்கப்பட்டன. ஆனால் தீர்வு யோசனைகளை முன்வைத்த ஆட்சியாளர்கள் தமது தீர்வு யோசனைகளில் உள்ள விடயங்களை குறிப்பிட்டுக் காட்டி அவற்றுக்காக வாதிடத் துணியவில்லை.

**ஏனெனில் தீர்வு யோசனையில் உள்ள அம்சங்களில் மாற்றப்படவோ, வெட்டிக் குறைக்கப்படவோ முடியாத அம்சங்கள் என்ன என்பதில் ஆட்சியாளர்களிடமே தெளிவான கருத்து இருக்கவில்லை. வெறுமனே தீர்வு யோசனை, தீர்வுத்திட்டம் என்று பொதுப்படையாகவே பேசிவருகின்றனர்.**

தீர்வு யோசனை முன்வைக்கப்பட்ட சூட்டோடு சூடாக பௌத்த மதகுருமார் சிலரின் எதிர்ப்புக்கு பணிந்து மாற்றம் செய்யப்பட்டது. பிராந்திய சபைகளை மத்திய அரசு நினைத்த நேரத்தில் கலைக்கும் அதிகாரம் சேர்க்கப்பட்டது.

**அரசு எதிர்ப்புக்கு பணியும் என்றும், தாம் ஓங்கிக் குரல் கொடுத்தால் முன்வைத்த காலை பின்னுக்கு இழுத்துக் கொள்ளும் என்றும் பேரினவாதிகளுக்கு நம்பிக்கை ஏற்படவே அத்தகைய அணுகுமுறை உதவியிருந்தது.**

அரசே கூட தனது காலம் கடத்தலுக்கு பேரினவாதிகளின் கூச்சல்களை சற்றே பயன்படுத்த நினைப்பதாகத்தான் தெரிகிறது. 'சிங்கள மக்களையும் நாம் திருப்திப்படுத்த வேண்டும், வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை நாட்டு மக்கள் ஏற்கமாட்டார்கள் என்றெல்லாம் முக்கிய அமைச்சர்களே கூறிவருவதும் கவனிக்கத்தக்கது.

சாதாரண சிங்கள மக்களோ, முற்போக்கான சிங்களப் புத்திஜீவிகளோ எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை. அப்படியிருக்கையில் அமைச்சர்கள் நாட்டு மக்கள் என்று சுட்டிக் காட்டுவது யாரை என்பது கேள்விக்குரியதே.

சிங்கள ஆணைக்குழு போன்ற பேரினவாதிகளின் கூச்சல்களைத்தான் தங்கள் தயக்கங்களுக்கான உதாரணமாக சுட்டிக்காட்டுகிறார்கள் என்பதையே அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான சூழலில் பேரினவாத சக்திகள் மேலும் உற்சாகமும், ஊக்கமும் பெறுவதும், தீர்வு முயற்சிகள் பின்தள்ளப்படுவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

**இனவாதத்தை எதிர்த்து குரல்கொடுத்தவர் என்று பாராட்டப்பட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இனவாத சூழலின் கைதியாக மாறவேண்டிய நிலவரமே தோன்றி வருகிறது.**

பேரினவாதம் வீச்சாக எழும்போது அதற்கு எதிரான தமிழ்த் தேசிய வாதமும் உரத்து எழவே செய்யும். தமிழ்க் கட்சிகள் மௌனமாக இருந்தாலும்கூட தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளில் எதிர்ப்பு மனோபாவம் உருவாகவே செய்யும்.

ஆட்சியாளர்களின் தயக்கங்களும், தாமதங்களும் எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றும் சூழலை தோற்றுவித்துக் கொண்டிருப்பதையே நோக்க முடிகிறது.

# காட்டுக்குள் தீ

'யால காட்டுப் பகுதி புலிகளின் புகலிடமாகிவிட்டது' என்று 'ஐலன்ட்' பத்திரிகை காட்டூன் வெளியிட்டிருக்கிறது.

13.09.97 அன்று நள்ளிரவு யால வன விலங்கு சரணாலயத்தில் இருந்த மூன்று விடுதிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இச் சம்பவத்தை அடுத்தே புலிகளின் நடமாட்டம் அங்கு இருப்பதாக பீதி தோன்றியிருக்கிறது.

யால காட்டுப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் பற்றிய பீதி தோன்றுவது இது முதற்தடவையல்ல.

1996ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி யால சரணாலயப் பகுதியில் ஒரு சம்பவம் நடந்தது.

செக் நாட்டு உல்லாசப் பயணிகள் சென்ற ஜீப் வண்டி ஒன்று ஆயுதம் தாங்கியோரால் கடத்திச் செல்லப்பட்டது. அதிலிருந்த 'செக்' பயணிகள் இறக்கிவிடப்பட்டனர்.

புலிகள்தான் ஜீப்பை கடத்திச் சென்றனர் என்று நம்பப்பட்டது. இதனையடுத்து யால காட்டுப் பகுதிக்கு உல்லாசப் பயணிகள் செல்வதும் கட்டுப்படுத்தப்பட்டது. அக்காட்டுப் பகுதியில் இருந்த காடையர்களும் புலிகளால் தாம் தாக்கப்படலாம் என்று இடம்பெயர்ந்து சென்றனர்.

தற்போது யால காட்டுப்பகுதியில் விசேஷ அதிரடிப்படையினரின் கண்காணிப்பு இருப்பதாக தெரிகிறது.

இந்நிலையில்தான் கடந்த 13.09.97 அன்று யால வனவிலங்கு சரணாலயத்தில் இருந்த மூன்று விடுதிகளை ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று தீயிட்டுவிட்டு சென்றது. அங்கிருந்த வாகனம் ஒன்றும் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறது.

ஆயுதம் தாங்கிய கோஷ்டியில் இருந்தவர்கள் சிங்களத்தில் சரளமாகப் பேசிக் கொண்டனர் என்று விடுதிக் காவலர்கள் கூறியிருந்தனர்.

இதன் காரணமாக விடுதிகளைத் தீயிட்டது புலிகளா? அல்லது வேறு சக்திகளின் கைவரிசையா? என்ற சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் யால காட்டுப்பகுதிக்குள் புலிகள் வருவதோ, தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் செல்வதோ அப்படி ஒன்றும் கடினமான காரியமல்ல.

யால சரணாலயப் பகுதிக்குள் புலிகள் கவனம் செலுத்தும் தேவையும் இருக்கிறது.

கிழக்கில் உள்ள காட்டுப் பகுதிகளுக்குள் படையினர் புலிகளை தேடி சென்றால், அங்கிருந்து பின்வாங்கி வருவதற்கு பொருத்தமான காட்டுப்பகுதி யால காட்டுப் பகுதிதான்.

புலிகளின் பிரதான தளமான முல்லைத் தீவில் இருந்தும் யால காட்டுப் பகுதிக்கு வந்துசேர முடியும்.




யால புலிகளின் சரணாலயம் என்ற அர்த்தத்தோடு 'ஐலண்ட்' வெளியிட்ட கேலிச்சித்திரம்

புலிகளால் தமிழ் ஈழ தென்கிழக்கு எல்லையாக கூறப்படும் பகுதிகளை ஒட்டியதாகவே யால காட்டுப்பகுதியும் அமைந்துள்ளது. ஒரு காலத்தில் மட்டக்களப்பில் இருந்து 'யால' காட்டுப்பகுதி ஊடாகவே பக்தர்கள் கதிர்காமம் சென்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பொத்துவிலில் இருந்து யால காட்டுப் பகுதிக்கு அருகில் உள்ள பாணம வரை பிரதான சாலை உள்ளது. அங்கிருந்து யால செல்ல உப சாலைகள் இருக்கின்றன.

கடந்த 18.09.97 அன்று பாணமவில் 20 படகுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. இச் சம்பவத்தின் பின்னர் யால சரணாலய சம்பவத்தின் நோக்கமும் தெளிவாகிவிட்டது.

யால காட்டுப் பகுதியிலும், அக்காட்டுப் பகுதி சார்ந்த கடலோரப் பகுதியிலும் தமது தங்கு தடையற்ற நடமாட்டத்துக்கு புலிகள் வழி செய்துவருகின்றனர்.

யால சரணாலயம் வெளிநாட்டவரைக் கவரும் பகுதியாகும். இப் பகுதியில் சுமுக நிலை இருக்குமானால் இலங்கை உல்லாசப் பயணத்துறை பெரும் வருமானம் ஈட்டக் கூடியதாக இருக்கும். அதனை புலிகள் விரும்பமாட்டார்கள் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

கொழும்புக்கு உல்லாசப் பயணிகள் வருவதைத் தடுக்கவே பிரபல நட்சத்திர விடுதிகள் சிலவற்றில் புலிகள் முன்னர் எச்சரிக்கை குண்டுவெடிப்பு நடத்தியிருந்தனர். யால சரணாலயப் பகுதி பாதுகாப்பற்றது என்பதைக் காட்டவே அவ்வப்போது சிறு தாக்குதல்களை அப்பகுதிகளில் நடத்திவிட்டுப் போய்விடுகின்றனர்.

ஆனால் அரசாங்கம் யால காட்டுப் பகுதிக்குள் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் பெரிதுபடுத்தப்படுவதை விரும்பவில்லை. யாலக் காட்டுப் பகுதியை அண்டியுள்ள சிங்களக் கிராம மக்கள் கிலி கொள்ளக் கூடும். உல்லாசப் பயணத்துறை மேலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாகக் கருதப்படும் போன்ற காரணங்களினால் அரசு பெரிதுபடுத்தாமல் இருக்கவே நினைக்கிறது.




ஆனால் தென்னிலங்கையின் நுழை வாயில்களில் ஒன்றான யால காட்டுப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் பற்றி பாதுகாப்புத் தரப்புகள் கவலை கொண்டுள்ளன என்றே தெரிகிறது.

ஒரு பக்கத்தால் தள்ளிக்கொண்டு போனால் புலிகள் வேறு ஒரு பக்கத்தால் வெளிப்படுகிறார்கள். யாலவுக்குள் புலிகள் நடமாடும் செய்தியைக் கேள்விப்பட்ட எதிர்க்கட்சிக்கு ஒரே குஷி. "யால வரை புலிகளை வரவிட்டு விட்டீர்களே. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது வரவிட்டோமா?" என்று கேட்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## பாகம் 2

மரத்தின் கீழ் வந்து நின்ற பொலிஸ்காரர்களில் இரண்டு பேர் மேலே அண்ணாந்து பார்த்தனர். பூலானும், பிக்குவும் ஆடாமல், அசையாமல் அப்படியே இருந்தனர். சற்றுச் சலனம் தெரிந்தால் போதும்; பொலிசார் உஷாராகிவிடுவார்கள்.

தப்புவதற்கு எந்த வழியும் இல்லை. இரண்டே இரண்டு ரவைகள்தான் இருக்கின்றன. பொலிசாரோ ஐந்துபேர்.

பூலான் துர்க்கையம்மனை வேண்டிக்கொண்டாள். பிக்கு மூச்சைப் பிடித்துக்கொண்டு மரக்கிளையில் அமர்ந்திருந்தான்.

ஐந்து பொலிஸ்காரர்களும் மரத்தின் கீழ் அப்படியே அமர்ந்தனர். தங்கள் கைகளில் இருந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

அவர்கள் தங்களைக் காணவில்லை என்பது பூலானுக்கு நிம்மதியாக இருந்தது. கீழே அமர்ந்திருந்து அவர்கள் சாப்பிடத் தொடங்கியதைப் பார்க்க, பூலானுக்கும், பிக்குவுக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. சாப்பாட்டு வாசனை மூக்கைத் துளைத்தது.

அப்படியே மரத்தில் இருந்து குதித்து அவர்கள் சாப்பாட்டைப் பறித்து சாப்பிட்டுவிடலாமா என்பதுபோல ஆசையாக இருந்தது.

மரத்தின்மேலே மரணப்பசியில் இரண்டுபேர் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் அவர்கள் இரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பொலிஸ்காரன் சாப்பிட்டுக்கொண்டே "பூலான்தேவி உன்னிடம் கிடைத்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டான். அதற்கு இன்னொரு பொலிஸ்காரன் சொன்ன அசிங்கமான பதிலைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார்கள்.

மேலே இருந்த பூலானுக்கு இரத்தம் கொதித்தது. பல்லைக் கடித்துக்கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்.

சற்று நேரத்தில் ஐந்து பொலிஸ்காரர்களும் சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்து போய்விட்டார்கள். ஆனாலும் அப்பிரதேசத்தில் பொலிஸ்காரர்களின் நடமாட்டம் இருந்துகொண்டே இருந்தது.

"மரத்தில் இருப்பதுதான் பாதுகாப்பு. பொலிசார் அப்பகுதியை விட்டுச் சென்ற பின்னர்தான் கீழே இறங்க வேண்டும்!" என்று பிக்கு கூறியதை பூலானும் ஏற்றுக்கொண்டாள்.

நன்றாக இருட்டிய பின்னரும் பொலிசார் அங்கிருந்து செல்லவில்லையானால், மரத்தில் இருந்து இறங்கி இருளோடு இருளாக மறுபடி காட்டுக்குள் புகுந்துகொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தாள் பூலான்.

பொலிசார் அவர்களைத் தேடிக்கொண்டு இருந்தார்கள். தங்களைத் தேடுவதை அவர்கள் மரத்தின் மேலே இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதனை நினைக்க பூலானுக்கு சிரிப்பாக இருந்தது.

அடுத்து நடந்த நிகழ்ச்சி பூலானின் மனதில் சினத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

தலையில் விறகு சுமந்துகொண்டு வந்த இளம்பெண் ஒருத்தியை பொலிஸ்காரன் ஒருத்தன் வழிமறித்து ஏதோ கேட்டான். அவள் மலங்க மலங்க விழித்தாள்.

அந்தப் பொலிஸ்காரன் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டான். அவன் பார்வையில் கள்ளம் தெரிந்தது. ஏனைய பொலிஸ்காரர்கள் தூரத்தில் இருந்தனர்.

விறகுக்கட்டை இறக்கி தரையில் வைக்கச்சொல்லிவிட்டு, அவளை ஒரு மரத்தின் பின்னால் அழைத்துச் சென்றான். அவள் தயங்கித் தயங்கி சென்றாள். அவள் ஏதோ சொல்லிக் கெஞ்சுவதும், பொலிஸ்காரன் மிரட்டுவதுபோல ஏதோ சொல்வதும் பூலானுக்கு அவர்கள் பாவனைகளில் இருந்து புரிந்தது.

சட்டென்று அவளை மரத்துடன் சாய்த்து அவள் உடம்பெங்கும் தடவினான். அவள் தடுக்க கன்னத்தில் அறைந்தான். அவள் பயத்தில் உறைந்துபோக– எதிர்ப்பு தளர்ந்துபோக– அவன் அவளின் கழுத்தை ஒரு கையால் பிடித்தபடி உதடுகளில் முத்தமிட்டுக்கொண்டு, அவள் உடைகளைக் களையத் தொடங்க, அந்தப் பெண் கைகூப்பிக் கொண்டிருந்தாள்.

பார்த்துக்கொண்டிருந்த பூலான் தன்னை மறந்து "வேசிமகன்" என்று சற்று உரக்கவே கூறிவிட, பிக்கு பயந்து போனான்.

பிக்குவிடம் இருந்த துப்பாக்கியை பூலான் கேட்க, "நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. வேட்டுச் சத்தம் கேட்டால் எல்லாப் பொலிஸ்காரர்களும் ஓடிவந்து ஒன்றுசேர்ந்துவிடுவார்கள்!" என்று இரகசியம் பேசுவதுபோன்ற குரலில் கூறினான் பிக்கு.

தன் கண்முன்பாகவே ஒரு பெண்ணுக்கு நேரும் கொடுமையைப் பார்க்கப் பார்க்க பூலானுக்கு தனக்கு நேர்ந்த கொடுமைகள் மனக்கண்ணில் தோன்றின.

அந்த இளம்பெண் கொஞ்சம் கொஞ்சமாக பொலிஸ்காரனின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருந்தாள். வெறிபிடித்த நாயைப்போல அவன் தன் முகத்தால் அவள் உடலெங்கும் உரசிக் கொண்டிருந்தான்.

அவளை தரையில் சரிக்க அந்த மிருகம் முயன்றநொடியில், சட்டென்று ஏற்பட்ட உந்துதலில் அவன் பிடியிலிருந்து நழுவி அவள் ஓடத்தொடங்கினாள்.

சிறிதுதூரம் அவளைத் துரத்திச் சென்ற பொலிஸ்காரன், அவள் அருகிலுள்ள காட்டுக்குள் புகுந்து விட்டதால் தன் முயற்சியைக் கைவிட்டு திரும்பிவந்தான்.

பூலானின் கண்களுக்கு பூனையின் வாயில் இருந்து எலியொன்று தப்பி ஓடியது போல இருந்தது. அந்த இளம் பெண் தப்பிவிட்டாள்

# கொள்ளை ராணி



பூலான்

# பூலான்தேவி 63

தருவது ரசிகன்

என்பதே திருப்தியாக இருந்தது.

பூலானும், பிக்குவும் நினைத்ததுபோல இரவாகிக்கொண்டிருந்தபோது 'தங்கள் தேடுதலை முடித்துக்கொண்டு பொலிசார் திரும்பிப் போய்விட்டனர்.

மரத்தில் இருந்து கீழிறங்கி அடுத்த கிராமத்தை நோக்கிப் போனார்கள். இனி மேலும் தாக்குப்பிடிக்க முடியாது என்பது போல பசியும், தாகமும் வாட்டி எடுத்தது.

கிராமத்திற்குள் சென்றதும் ஒருவயதானவர்தான் எதிர்ப்பட்டார். பூலானையும், பிக்குவையும் ஏற இறங்கப் பார்த்தார். "யார் நீங்கள்?" என்று கேட்டார்.

பூலானுக்கு அந்த வயதானவரைப் பார்த்ததும் தன் தந்தையின் ஞாபகம் வந்துவிட்டது. "உங்கள் பிள்ளைகள்" என்றாள்.

அந்தப் பதிலால் அவர் நெகிழ்ந்து போனார். "எங்களுக்கு முதலில் குடிக்கத் தண்ணீர் வேண்டும். சாப்பாடும் வேண்டும் அப்பா! கொலைப்பட்டினி," என்றாள் பூலான்.

அவர்களை தன் வீட்டுக்குள் அழைத்துப் போனார். மீதமிருந்த உணவைக் கொடுத்தார். "இந்தக் கிராமத்தின் பெயர் என்ன அப்பா?"

"பண்டறி" என்றார் முதியவர்.

அந்தப் பெயரைக் கேட்டதும் பூலானுக்கு புதுத்தெம்பு வந்துவிட்டது. 'தனது கூட்டாளியான விஜேசிங் சௌஹான் 'பண்டறி' என்ற கிராமத்தில்தான் இருக்கிறான்' என்று மல்லா ஒருதடவை பூலானிடம் சொல்லியிருந்தான்.

"விஜேசிங் சௌஹான் இங்கேதானே இருக்கிறார்?" என்று கேட்டாள் பூலான்.

அவள் அந்தப் பெயரைச் சொன்னதும் முதியவரின் முகத்தில் அச்சம் தோன்றியது போல இருந்தது. பூலானையும், பிக்குவையும், பூலானின் கையில் துப்பாக்கியையும் பார்த்த உடனேயே அவர்கள் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று முதியவர் புரிந்து கொண்டிருந்தார்.

அதனால் விஜேசிங் சௌஹானின் பெயரைச் சொல்லி பூலான் கேட்டதும் முதியவருக்கு அச்சம் ஏற்பட்டதே தவிர, அதிர்ச்சியாக இருக்கவில்லை.

விஜேசிங் சௌஹான் கொள்ளைக் கோஷ்டிகளோடு தொடர்பு உள்ளவன் என்பதால் அக்கிராமத்தில் உள்ளவர்கள் அவனைக் கண்டாலே பயந்தனர். முதியவருக்கும் அவனைக் கண்டால் நடுக்கம்தான்.

பூலானை மட்டும் முதியவருக்கு பிடித்துவிட்டது. "அப்பா!" என்று அவள் வாஞ்சையோடு அழைத்தது நெகிழ்ச்சியாக இருந்தது.

**கடந்த வாரம்**

**ஜமுனா நதிக்கரை அருகே மரம் ஒன்றின்மேல் பூலானும், பிக்குவும் மறைந்திருக்கிறார்கள். அந்த மரத்தின் கீழ் பொலிசார் வந்து சேருகிறார்கள்.**

**இனி....**

அவர்கள் யார், ஏன் இங்கு வந்தார்கள்? என்றெல்லாம் அவர் கேட்கவும் இல்லை.

விஜேசிங் சௌஹானின் வீட்டை இருவருக்கும் காண்பித்துவிட்டு முதியவர் திரும்பிவந்துவிட்டார். அவரிடம் விடைபெற முன் அவர் காலில் வீழ்ந்து வணங்கினாள் பூலான்.

விஜேசிங் சௌஹான் வீட்டில் இல்லை. அவனது சகோதரர்கள்தான் இருந்தனர். மல்லாவின் பெயரைச் சொன்னதும் அவர்கள் முகம் மலர்ந்தது. வந்திருப்பது பூலான்தேவிதான் என்று உணர்ந்துகொண்டு மரியாதையாக நடந்துகொண்டார்கள்.

மல்லா கொல்லப்பட்டதையும், அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்களையும் அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். பல கொள்ளைக் கோஷ்டிகளுடன் தொடர்பு இருந்தமையால் சகல விபரங்களும் உடனுக்குடன் தெரிந்திருந்தன.

பண்டிதரை ஸ்ரீராம் சுட்டுக்கொன்றுவிட்டான் என்ற செய்தியையும் அவர்கள் சொல்லித்தான் பூலான் அறிந்துகொண்டாள்.

பூலானின் மனக் கண்முன்பாக பண்டிதரின் உருவம் வந்து போனது. கடைசியாக தன் கையில் அவர் துப்பாக்கியைத் தந்து வழியனுப்பிய காட்சி தோன்றியது.

பண்டிதர் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார் என்பதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. பிறர் முன்பாக அழுதுவிடக்கூடாதே என்று தன் சோகத்தை மனதுக்குள் புதைத்துக்கொண்டாள்.

"உங்களுக்கு என்ன உதவி வேண்டுமோ கேளுங்கள். இங்கு நீங்கள் விரும்பும் வரை தங்கியிருக்கலாம்!" என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்களுக்கு சுமையாக இருக்க பூலான் விரும்பவில்லை. அது தவிர அங்கிருந்தால் தனது கடமைகளை நிறைவேற்றவும் தாமதமாகும் என்பதால், "ஒரு நாள் மட்டும் தங்கியிருக்க அனுமதித்தால் போதும். கொஞ்சம் பணமும் வேண்டும்; கடனாகத்தான் கேட்கிறேன்," என்றாள்.

அன்று இரவும், மறுநாளும் பூலானும், பிக்குவும் அங்கேயே தங்கி இருந்தனர். விஜேசிங் சௌஹானின் சகோதரர்களும், அவர்கள் வீட்டுப் பெண்களும் இருவரையும் பிரமாதமாக உபசரித்தனர்.

காக்கி உடையொன்றையும், இரண்டாயிரம் ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டாள் பூலான். சேலையை துறந்துவிட்டு, காக்கி உடைக்கு மாறிக்கொண்டாள்.

மறுநாள் இரவே இருவரும் புறப்பட்டனர். ஜமுனா நதியைக் கடந்து அவர்களைக் கொண்டுசெல்ல நம்பிக்கையான படகோட்டி ஒருவரை விஜேசிங் சௌஹானின் சகோதரர்களே ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

படகின் அடித்தளத்தில் இருவரையும் படுக்கவைத்துவிட்டு, மேலே மீன்பிடி வலைகளைப் போட்டு மறைத்துவிட்டான் படகோட்டி.

பாலம் ஒன்றின் கீழாக படகு சென்றுகொண்டிருந்தபோது, பாலத்தில் நின்றபடி படகைக் கண்காணித்தனர் பொலிசார். மீன் வலைகளின் கீழே கிடந்தவர்கள் அவர்களின் கண்ணில் படவில்லை.

பூலானின் நெருங்கிய உறவினன் ஒருவன் நாகினா என்ற கிராமத்தில் இருந்தான். அவனிடம் போய்ச்சேர்ந்த பின்னர், அவன் உதவியோடு தன் அடுத்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதுதான் பூலானின் எண்ணம்.

பிக்குவின் உதவிக்கு நன்றி சொன்னாள் பூலான். நாகினா கிராமம்வரை தானும் உதவிக்கு வருவதாக பிக்கு கூறினான். பூலான் அதனை ஏற்கவில்லை.

"வேண்டாம், இனி நான் பார்த்துக் கொள்கிறேன். துர்க்கையின் அருள் இருந்தால் நாம் மீண்டும் சந்திக்கலாம்!" என்றாள் பூலான். சொல்லும்போதே அவள் கண்கள் கலங்கிவிட்டன.

நாகினா கிராமத்துக்கு சமீபமாக நதிக்கரைப்பகுதியில் பூலான் தனியாக இறங்கிக் கொண்டாள்.

படகைவிட்டு இறங்க முன்னர் பிக்குவின் நெற்றியில் முத்தமிட்டாள்.

"நன்றி சகோதரா!" என்று அவள் சொன்ன ஒரே வார்த்தையில் பிக்கு விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டான்.

பூலான் திரும்பிப் பாராமல் தனியாக நடக்கத் தொடங்கினாள்.

படகில் இருந்து கண்களில் திரையிட்ட கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்த பிக்குவுக்கு புயல் ஒன்று அசைந்து செல்வது போல் இருந்தது.

பிக்குவை பிரிந்ததால் கனத்த மனதோடு, தன் வாழ்க்கையின் அடுத்த அத்தியாயம் நோக்கி பூலான் நடந்துகொண்டிருந்தாள்.

**(தொடர்ந்து வரும்)**

# "என் தேடல் முடிந்துவிட்டது!"

## டயானாவால் திருந்திய டோடி

டோடி அல்ஃபயட் ஒரு உல்லாசப் பிரியர்தான். மத்திய தரைக் கடலில் உலா வரும் அவரது உல்லாசக் கப்பலுக்கு அழகிகள் பலர் விஜயம் செய்திருக்கிறார்கள்.

பிரபல ஹொலிவூட் நடிகைகள், மொடல் அழகிகள் டோடியின் மடியில் தவழ்ந்திருக்கிறார்கள். மதுபான விடுதி, விளையாட்டரங்கு, கேளிக்கை அறைகள் என்று சகல வசதிகளும் கொண்ட பிரமாண்டமான அந்த உல்லாசக் கப்பலில்தான் டோடியின் பொழுதுகள் கழிந்தன.

இதெல்லாம் டயானாவை அவர் சந்திக்க முன்னர்தான். எப்போது டயானாமீது காதல் கொண்டாரோ அப்போதே தனது முந்தைய விளையாட்டுக் குணத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டாராம்.

"என் தேடல் முடிந்துவிட்டது; இனி டயானாதான் எனக்கு எல்லாமே. எனக்குப் பொருத்தமானவளை கண்டுவிட்டேன்!" என்று டோடி தன் நண்பர்களிடம் கூறியிருந்தாராம்.

டோடியின் உல்லாசப் படகில்தான் டயானாவும், டோடியும் சில நாட்களைக் கழித்திருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்தான் டோடி– டயானா காதலை உலகம் அறியச் செய்திருந்தன.

மரணமாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் டோடி செய்த காரியமும் டயானா மீது அவர் வைத்திருந்த ஆழமான காதலைப் புலப்படுத்தியது என்கிறார்கள் டோடியின் நண்பர்கள்.

மொண்டே கார்லோ நகரில் பிரமாண்டமான ஹோட்டல் அறையொன்றை வாடகைக்கு எடுத்திருந்த டோடி, தன் நண்பர் ஒருவருடன் அமர்ந்து டயானா–சாள்ஸ் திருமணத்தின்போது எடுக்கப்பட்ட வீடியோவைப் போட்டுப் பார்த்தாராம்.

பாதியிலேயே டோடியின் நண்பருக்கு அலுப்பாக இருக்க, எழுந்துபோய்விட்டார். டோடி மட்டும் கடைசிவரை டயானா திருமணக்காட்சியைப் பார்த்துக்கொண்டே இருந்தாராம்.

டயானா–சாள்ஸ் திருமணத்தைவிட டயானாவுக்கும், தனக்கும் நடைபெறப்போகும் திருமணத்தை பிரமாண்டமாக நடத்திக்காட்டத்தான் ஒவ்வொரு காட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தாராம்.

டோடியின் கடைசி நாளன்று இரவு 8.45 மணிக்கு தனது மாமா முறையான ஹஸ்ஸீன் யஸ்ஸீன் என்பவரை காபி அருந்த வருமாறு அழைத்தாராம் டோடி. அவரிடம், தானும் டயானாவும் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் கூறியிருக்கிறார்.

டோடி அல் ஃபயட் டயானர்மீது கொண்டிருந்த காதல் உண்மையானது என்பதற்கு மேற்கண்ட சம்பவங்களை உதாரணமாக காட்டியுள்ளன வெளிநாட்டு பத்திரிகைகள்.

ஒரு சில பத்திரிகைகள் வேறு கருத்தையும் தெரிவித்துள்ளன.

"டயானா–டோடி திருமணம் நடைபெற்றிருந்தால், பிரிட்டிஷ் பிரஜைகள் ஆகவேண்டும் என்ற டோடி குடும்பக் கனவு கைகூடியிருக்கும். பாவம் டோடி..." என்று எழுதியிருக்கிறது. 'டெய்லி மெய்ல்' என்னும் பத்திரிகை.

"டயானாவை இன்று இத்தனைதூரம் நேசிப்பவர்கள், டோடியை அவர் திருமணம் செய்திருந்தால் வெறுத்திருப்பார்கள். தங்கள் இளவரசிக்கு டோடி பொருத்தமானவரல்ல என்பதுதான் பெரும்பாலான மக்களது கருத்தாகும்," என்று தெரிவிக்கிறது இன்னொரு இலண்டன் பத்திரிகை.

ஆனால் டயானா மரணமாக முன்பாக பிரிட்டன் பத்திரிகைகள் மேற்கொண்ட கருத்துக் கணிப்பின்படி பெரும்பாலானவர்கள் டோடியை டயானா திருமணம் செய்வதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.



டயானாவின் முடிவு சரியானது எனவும் கூறியிருந்தனர்.

அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான 'ரைம்ஸ்' மற்றொரு பரபரப்பு தகவலை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. டயானா மரணமாகும்போது ஆறுவார கர்ப்பிணியாக இருந்தார் என்று மருத்துவர் ஒருவர் தெரிவித்ததாக 'ரைம்ஸ்' கூறுகிறது.

அவசர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் டயானாவை உடல் பரிசோதனை செய்தபோது வயிற்றைத் தடவ வேண்டி இருந்ததாகவும், டயானா ஆறுவார கர்ப்பிணி என்பதை அறிந்து கொண்டதாகவும் கூறினாராம். ஆனால் பிரேத பரிசோதனை செய்த அதிகாரியிடம் 'ரைம்ஸ்' தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் அதனை மறுக்கவுமில்லை. ஏற்கவுமில்லை. "இதுபற்றிக் கருத்துச் சொல்ல முடியாது. இதெல்லாம் விசாரணையின் ஒரு பகுதியாகும்!" என்று கூறிவிட்டாராம்.

# புதிய காதலர்கள்

அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனின் காதல் விவகாரங்களை வெளியிட்ட அமெரிக்க பத்திரிகைகள் இப்போது கிளிண்டனின் புதல்வி செல்சியாவின் காதல் விவகாரங்கள் பற்றி செய்திகள் வெளியிடத் தொடங்கியுள்ளன.



ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் கெமிஸ்ட்ரி படிக்கத் தொடங்கியுள்ள செல்சியா, காதல் பாடங்களையும் படித்துக் கொண்டிருக்கிறார்.


செல்சியாவும் அவரது ஆண் நண்பரும் பூங்கா ஒன்றில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது புகைப்படம் எடுத்துவிட்டார்கள். செல்சியின் காதலர் பெயர், மார்க் மெஜ்வின்ஸ்கி.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம்தான் இருவரும் முதன் முதலாகச் சந்தித்தனராம். அவர்கள் வெறும் நண்பர்கள் மட்டுமே என்று கூறப்பட்டாலும், அமெரிக்கப் பத்திரிகைகள் அதனை நம்பத் தயாராக இல்லை.

செல்சியாவின் காதல் விவகாரம் வெளியான பின்னர், அவரைத் தொடரும் புகைப்படப் பிடிப்பாளர்களையும், பத்திரிகையாளர்களையும் விரட்டத் தொடங்கியுள்ளது ஜனாதிபதியின் பாதுகாப்புப் படை.

# சதியா? விபத்தா?

டோடியும், டயானாவும் சென்ற கார் விபத்துக்குள்ளானது திட்டமிடப்பட்ட சதியாக இருக்குமோ என்ற கோணத்திலும் ஃபிரான்ஸ் பொலிசார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.



டோடி–டயானா பயணம் செய்த காரை முந்திச் சென்ற ஒரு கார், டோடியின் காரின் முன்பக்கத்தில் இடித்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் கிளம்பியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், டோடியின் காரை முந்திச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்து காருக்குள் படம் எடுக்கப்பட்டதாகவும், கமராவின் 'ஃபிளாஷ்' வெளிச்சம் காரணமாக சாரதி தடுமாறியிருக்கலாம் என்றும் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா? இப்போது ஃபிரான்ஸ் பொலிசாரும் அதே சந்தேகத்தை வெளியிட்டுள்ளனர்.

'சாரதியை தடுமாறச் செய்யும் திட்டமிட்ட நோக்கத்துடன் கமரா வெளிச்சத்தை சாரதியை நோக்கி அடித்தார்களா?' என்று பொலிசார் ஆராயத் தொடங்கி உள்ளனர். டோடியின் காரை முந்திச்சென்ற ஒரு காரையும், மோட்டார் சைக்கிள்காரர்களையும் பற்றிய விபரங்கள் மர்மமாக இருப்பதால்தான் அந்த சந்தேகம் தோன்றியிருக்கிறதாம்.

டோடியின் காரின் பின்னால் வந்த மோட்டர் சைக்கிள்காரர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் எடுத்த புகைப் படச் சுருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் முந்திச் சென்ற அந்த மோட்டார் சைக்கிள்காரர்கள் மட்டும் யார் என்று தெரியவில்லையாம்.

டயானா–டோடி ஆகியோர் ஃபிரான்ஸ் வருவதற்கு முன்னர், சார்டீனியாவில் இருந்தே புறப்பட்டுள்ளனர். சார்டீனியா இருப்பது இத்தாலியில். கூலிக்கு கொலை செய்வதில் பெயர் போன மாஃபியா கும்பல் மையம் கொண்டிருப்பதும் இத்தாலியில்தான்.

சார்டீனியாவில் இருந்தே டயானா நிழலாகத் தொடரப்பட்டாரா? என்ற சந்தேகம் பூதாகரமாகக் கிளம்பியிருக்கிறது.

அந்தச் சந்தேகம் உறுதியானால் பிரிட்டிஷ் அரச குடும்பம்மீதும் சந்தேகப் பார்வை திரும்பியே தீரும். எனினும் இவ்வாறான பெரிய இடக் கமராக்காரர்களைக் கிளற போதிய ஆதாரங்கள் தேவைப்படும். உண்மையாகவே திட்டமிடப்பட்ட சதியாக இருந்தால்கூட போதிய ஆதாரங்கள் சிக்குமா? என்பது கேள்விக்குறிதான்.




படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி

## மகா மகா கொடி



← ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான அமெரிக்க தேசியக் கொடி இது. இக் கொடியை இங்கிலாந்திலுள்ள நியூ ஹாம்ஷாயர்- மாஞ்செஞ்சஸ்டரில் உள்ள ஓர் புடவை ஆலையில் உருவாக்கப்பட்டு அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகர நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இக்கொடி தயாரிக்கப்பட்டு இருவருடங்களுக்குப் பின்னர் 1916ம் ஆண்டின் மத்தியில் நியூயோர்க் நகருக்குக் கொண்டுவரப்பட்டபோது இப்படம் பிடிக்கப்பட்டது.

முதலாவது உலகப் போரில் அமெரிக்காவும் இறங்கியதைக் குறிக்குமுகமாக நியூயோக் நகரில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் பங்கு பற்றிய 11 மணிநேர நீண்ட ஊர்வலத்தில் இக்கொடி முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் ஆரம்பமாகும் முன்னர் பிடிக்கப்பட்டது இப்படம்.

இந்த மகா பிரமாண்டக் கொடியின் அகலம் 95 அடி. உயரம் 50 அடி. ■

## குழாயில் பிறந்த கொரில்லா




↑ குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான். அதற்கு நன்றிக்கடனாக மனிதனிடமிருந்து ஒரு குரங்கு தோன்றியுள்ளது. என்ன புரியவில்லையா? மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியில் பரிசோதனைக் குழாய் குழந்தை உருவானது பழைய சமாச்சாரம். இப்போது பரிசோதனைக் குழாய் மூலம் கொரில்லா குரங்கு ஒன்றை பிறக்கவைத்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒஹியோவிலுள்ள சின்சினாட்டி மிருகக் காட்சிச் சாலையில் பிறந்த முதலாவது பரிசோதனைக் குழாய் கொரில்லாக் 'குழந்தை' இது. சின்சினாட்டியிலிருந்த 'ரோசி' என்ற பெண் கொரில்லாவுக்கு நெப்ராஸ்கா மாநிலத்திலிருந்த மொசுபா என்ற ஆண் கொரில்லாவின் உயிரணுக்களைச் செலுத்தியதன் மூலம் 'திமு' என்ற இந்தக் குட்டிக் கொரில்லா பிறப்பிக்கப்பட்டது. இது ஒரு (இரு மாதக்) குறைப் பிரசவமாகும். பிறக்கும் போது ஆக 3 இறாத்தல் எடையே இருந்தது. இதனை வேண்டிய மருத்துவ உதவிகள் செய்து காப்பாற்றிவிட்டனர். சாதாரண மனிதக் குழந்தைகளுக்கும் கிடைக்காத சௌகரியங்கள் திமுவுக்குக் கிடைக்கிறது.

அமெரிக்கா முழுவதிலுமுள்ள மிருகக் காட்சிச் சாலைகளில் ஆக மொத்தம் 335 கொரில்லாக்களே உள்ளன. பிற நாடுகளிலிருந்து கொரில்லாக்களை அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதால் செயற்கையாகப் பரிசோதனைக் குழாய் மூலம் கொரில்லா இனவிருத்தி செய்யலாம் என்ற முயற்சி இதனால் வெற்றி பெற்றிருக்கிறது. இது தொடர்ந்தால் உலகில் அரிதாகிவரும் உயிரினங்களை பெருகச் செய்யலாம். அதெல்லாம் சரி, போரால் அழியும் மனித இனங்களை காப்பாற்ற மட்டும் உலகம் ஏன் கவலைப்படுவதில்லை?! ■

## நடந்தால் ஊர்வலம் – நின்றால் மாநாடு



↑ இளவரசி டயானா உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் அவரைச் சுற்றி ஒரு கூட்டம் திரண்டுவிடும். 'நடந்தால் ஊர்வலம். நின்றால் மாபெரும் மாநாடு' என்று பிரபல தலைவர்களின் மக்கள் செல்வாக்குப் பற்றி சிறப்பித்துக் கூறுவதுண்டு. அது டயானாவுக்குத்தான் மிகப் பொருத்தம். ரோம் நகருக்கு டயானா சென்றிருந்தபோது அவரைக் கண்டதும் பெரும் கூட்டமே திரண்டுவிட்டது. சாதாரண மக்கள்கூட கமராக்களுடன் முண்டியடித்தனர். மக்கள் வெள்ளத்தில் டயானா கரைந்துபோக அவரை மீட்டெடுக்க குதிரைப்படைப் பொலிசார் பலத்த சிரமப்பட்ட காட்சிதான் இது.

↓ நினைத்த நேரத்தில் நினைத்த இடத்துக்கு செல்வதற்கான போக்குவரத்து சாதனங்கள் இன்று புதிது புதிதாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தக் காலத்தில் உள்ளவர்கள் போக்குவரத்துக்காக பட்ட பாட்டைத்தான் இந்தப் படம் காட்டுகிறது.

ஓவன் லட்டிமோர் என்பவர் ஒரு எழுத்தாளர். நன்றாக புகைப்படம் பிடிக்கவும் தெரிந்தவர். 1926ல் அவருக்கு திருமணம் நடந்தது. தன் மனைவியுடன் தேனிலவுப் பயணம் புறப்பட்டார். துருக்கிஸ்தானில் இருந்து சீனா சென்று திரும்புவதுதான் திட்டம்.

'ஸிங்கியான்ஸ் சஞ்சு' என்ற கணவாயைக் கடக்கும்போது அவர் எடுத்த புகைப்படம்தான் இது. எத்தனை கஷ்டப்பட்டிருப்பார்கள் என்று படத்தைப் பார்த்தால் தெரிகிறதல்லவா. தேன் நிலவுக்கு இப்படியா கஷ்டப்படவேண்டும். பாவம். "இதென்ன பெரிய காரியம். நவீன உலகில்கூட நாம் படும் கஷ்டத்தை அறியமாட்டீர்களோ" என்று யாழ் குடாநாட்டு பயணிகள் கூறுவதும் காதில் விழுகிறது. அதனால் மேற்கொண்டு விபரிக்கவில்லை.

## இது அந்தக் காலம்




## இரண்டும் – இரண்டும்



← ராமச்சந்திரனும், ஜெயச்சந்திரனும் இரட்டைச் சகோதரர்கள். தங்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக வருபவர்களும் இரட்டைச் சகோதரிகளாக இருந்தால் அசத்தலாக இருக்கும் என்று ஆசைப்பட்டனர். நினைப்பதெல்லாம் நடப்பதில்லைதான். இவர்கள் விடயத்தில் நினைத்தது பலித்தது.

ஷீஜா, ஷீனா என்னும் இரட்டைச் சகோதரிகள் இவர்களுக்காகவே பிறந்ததுபோல காத்திருந்தனர். இரு வீட்டாரும் மகிழ்ச்சியுடன் சம்மதிக்க இரட்டையர்கள் திருமணம் ஒரே மேடையில் அமர்க்களமாக நடந்து முடிந்தது. நான்கு பேரும் இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ■

## என்றும் பலம் வேண்டும்



→ 'என்னைப்பார், என் உடல் வலுவைப்பார்' என்று காண்பிப்பதில் சிலருக்கு ஏக குஷி. அந்தக் காலத்தில் உடல் பலத்தைக் காட்ட எத்தனையோ போட்டிகள் நடத்தப்படுவதுண்டு. இப்போதெல்லாம் அப்படி போட்டிகள் நடத்துவது அரிதாகிவிட்டது. எனினும் சில நாடுகளில் இப்போதும் உடற் பலத்தை ஊக்குவிக்கும் போட்டிகள் நடந்து வருகின்றன.

ஐரோப்பாவில் கருங்கடலுக்கு வடக்கே 'ஸ்கித்தியா' என்றொரு நாடு இருந்தது. கி.மு. 4ம் ஆண்டளவில் சிறப்போடு வாழ்ந்த மக்கள் அவர்கள். தற்போது முடி இழந்து, கொடி இழந்து, பல திசைகளில் சென்று பிரிந்து வாழ்கிறார்கள். சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக விளங்கிய உக்ரேன் நாட்டின் ஒரு பகுதியில் தற்போதும் 'ஸ்கித்திய' மக்கள் வாழ்கின்றனர். வீரர்களாக வாழ்ந்த தங்கள் முன்னோர்கள் போல திடகாத்திரமாக வாழவேண்டும் என்ற விருப்பத்தில் உடல் வலுப் போட்டிகள் அங்கு நடத்தப் பட்டு வருகின்றன.பல தொன் எடையுள்ள ரசியத் தயாரிப்பான பெரிய வண்டி ஒன்றில், இரும்பு பொருட்களையும், ஆட்களையும் ஏற்றிக்கொண்டு தெரு வழியாக இழுத்துச் சென்று தன் பலத்தைக் காண்பிக்கிறார் இந்த இளைஞர். பலத்துக்குத்தான் மரியாதை.


படிப்பகம்

www.padippakam.com

## மம்தா எச்சரிக்கை

நடிகை மம்தா குல்கர்னிக்கும் மும்பாயை உலுக்கும் தாவூத் இப்ராகீமுக்கும் இடையே தொடர்பு இருக்கிறதாம். தற்போது வெளி நாட்டில் தலைமறைவாக இருக்கும் தாவூத் இப்ராகீமையும், அவரது கோஷ்டியையும் மகிழ்ச்சிப்படுத்த மும்பாய் நடிகைகள் வெளிநாடு சென்று வருவது உண்டாம். அந்த நடிகைகள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார் மம்தா என்று செய்தி பரவியிருக்கிறது.

இதனை அறிந்த மம்தா கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். "என்னிடம் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத சில தயாரிப்பாளர்கள்தான் புரளி கிளப்பிவிட்டுள்ளார்கள்.

அவர்கள் தங்கள் வாயை மூடிக் கொண்டிருக்காவிட்டால் அவர்கள் யார், அவர்கள் சுயரூபம் என்ன என்றெல்லாம் நான் வாயைத் திறக்க வேண்டி இருக்கும்" என்று எச்சரித்துள்ளார் மம்தா.

## மறுப்பு அறிக்கை

நடிகை பானுப்பிரியாவின் தந்தையான பட்டாபிராமன் தனது தொழிலில் வெளுத்துக் கட்டுகிறார். அப்படி என்ன தொழில். எல்லாம் பெண்களை வைத்து நடத்தும் தொழில்தான். பானுப்பிரியாவுக்கும் அந்தத் தொழிலில் சம்பந்தம் இருப்பதாக முன்னர் செய்திகளும் வந்திருந்தன.

இப்போது பானுப்பிரியா ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். "என் அப்பாவான பட்டாபிராமன் என்பவருக்கும் எனக்கும் ஒரு தொடர்புமில்லை. அவர் எங்கு போனாலும் என் பெயரைச் சம்பந்தப்படுத்திப் பேசுவதாக அறிகிறேன். தயவு செய்து யாரும் அவர் பேச்சை நம்பவேண்டாம்." என்று அறிக்கை விட்டுள்ளார்.

## மணி ஆட்டம்

இதுவரை துணை நடிகைகளுடன்தான் கவுண்டமணி ஆட்டம் போட்டார். 'ஜானகி ராமன்' படத்தில் ரம்பாவோடு ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறார். எப்படியாவது ஒரு படத்தில் ரம்பாவுடன் ஆடவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாராம். இயக்குநர் சி.சுந்தருக்கு தன் ஆசையைத் தெரிவித்தாராம் கவுண்டமணி. சுந்தரும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துவிட்டார். ரம்பாவும் கவுண்டமணியுடன் நெருங்கி நடனமாடி மணியின் விருப்பத்தை பூர்த்தி செய்தாராம்.

## விக்னேஷ் உஷார்

விக்னேஷ் நடித்த படங்கள் அடுத்தடுத்து திரைக்கு வந்திருக்கின்றன. 'காதலி' படமும், 'ராமன் அப்துல்லா' படமும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு விற்கப்பட்டுள்ளன. 'ராமன் அப்துல்லா' வசூலில் பாதகம் செய்யாமல் ஓடுகிறது. ஆனாலும் வழக்கமான பாலுமகேந்திரா படம்போல இல்லை என்றும் குறை கூறப்படுகிறது.

விக்னேஷ் நடித்து அடுத்து திரைக்கு வரவுள்ள படம் 'வாணி மஹால்'. அப்படத்திலும் தன் நடிப்புத் திறமை வெளிப்படும் என்கிறார் விக்னேஷ்.

"தற்போது நிறையப் படவாய்ப்புக்கள் தேடிவருகின்றன. பொருத்தமான வேடம் இருந்தால் மட்டுமே நடிப்பேன். ஏற்கனவே பலமுறை சறுக்கி விழுந்து காயப்பட்டவன் நான்" என்றும் அனுபவ பூர்வமாகப் பேசுகிறார்.

## இரண்டு வேடம்

'சிம்மராசி' படத்தில் பிரகாஷ்ராஜ் இரண்டு வேடத்தில் தோன்றுகிறார். சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தை இயக்கப்போவது ஈரோடு சவுந்தர்.

இதுவரை படங்களுக்கு கதாசிரியராக இருந்த சவுந்தர் 'சிம்மராசி' மூலம் இயக்குநர் ராசி பெற்றுக் கொண்டுள்ளார்.



அப்பாஸ்-சிம்ரான்
படம்: இதுதான் காதல்

## சரளா சரணம்

முன்னணி கதாநாயகர்களுடன் இணைந்து நடிக்க நகைச்சுவை நடிகை தேவைப்பட்டால் உடனே நினைவுக்கு வருபவர் கோவை சரளா. ஏற்கனவே 'சதி லீலாவதி' படத்தில் கமலின் ஜோடியாக நடித்தார். இப்போது 'பெரிய மனுஷன்' படத்தில் சத்யராஜின் ஜோடியாக நடித்து வருகிறார்.

சத்யராஜின் இன்னொரு ஜோடியாக நடிக்கும் அம்பிகாவையே நடிப்பில் தூக்கிச் சாப்பிட்டுவிட்டாராம் சரளா. படப்பிடிப்புக் குழுவினர் சரளாவின் நடிப்பை வியந்து கைதட்டி ஆரவாரம் செய்தனராம். சரளமான கோவைத் தமிழ் பேசி நடித்திருக்கிறார்.

## காதல் என்றால் என்ன?

நக்மாவின் தங்கை ரோஷினிக்கு காதல் மீது அப்படி என்ன வெறுப்போ தெரியவில்லை. பிளந்து கட்டுகிறார்.

"காதலில் எனக்கு நம்பிக்கையே இல்லை. அது வயதுக் கோளாறிலும், வாலிபத் திமிரிலும் வருவது. செக்ஸ் உணர்வைத்தான் காதல் என்று மாற்றிச் சொல்கிறோம். புனிதமான காதல் , உயிருக்கு உயிரான காதல் என்பதெல்லாம் சுத்த ஏமாற்று" என்கிறார்.

## ரசிகை

நடிகர் விஜய் ஏற்கனவே 'ரசிகன்' படத்தில் நடித்தார். இப்போது 'ரசிகை' என்ற படத்தில் நடிக்கப்போகிறார். விஜய்யின் அப்பா சந்திரசேகரன் இயக்கிய படம் 'ரசிகன்'. அவரது மனைவி ஷோபா சந்திரசேகரன் இயக்கும் படம் 'ரசிகை'. விஜய் ஜோடியாக நடிக்கப்போவது சங்கீதா. 'பூவே உனக்காக' படத்திலும் விஜய் ஜோடியாக நடித்திருந்தார்.

## மினி சினி

* 'மாணிக்கம்' படத்தை இயக்கிய பாண்டியன் அடுத்து பிரபு இரட்டை வேடத்தில் நடிக்க 'தேவர் ஐயா' என்ற பெயரில் படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப்படத்தை சிவாஜி ஃபிலிம்ஸ் தயாரிக்கவுள்ளது.
* கே.பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனம் தயாரிக்கும் 'துள்ளித் திரிந்த காலம்' படத்தை 'லவ்டுடே' படத்தை இயக்கிய பாலசேகரன் இயக்குகிறார். இப்படத்தில் முக்கிய வேடத்தில் குஷ்பு நடிக்கவிருக்கிறார்.
* சரண் இயக்கும் 'காதல் மன்னன்' படத்திற்கு பரத்வாஜ் என்ற புதிய இசையமைப்பாளர் இசையமைத்து வருகிறார். அண்மையில் இவர் இசையில் 'காதல் மன்னன்' படத்திற்காக இசையமைப்பாளர் தேவா 'மாரிமுத்து மாரிமுத்து...' என்று தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்.
* முன்னாள் நடிகை ஷீலாவின் மகன் விஷ்ணு கதாநாயகனாக அறிமுகமான 'காதல் ரோஜாவே' படம் வெளிவருவதற்குமுன் இவர் இரண்டாவதாக நடித்த 'ஃபைவ் ஸ்டார் ஹொஸ்பிட்டல்' என்ற மலையாளப்படம் வெளியாகிவிட்டது.
* 'வீரபாண்டிக் கோட்டையிலே' படத்தில் மூன்று கதாநாயகிகளில் ஒருவராக நடித்து வருகிறார் மைனா. இவர் அமிர்தா என்ற பெயரில் சில தெலுங்குப் படங்களில் நடித்திருக்கிறார்.
* 'செல்வா' படத்தை வழங்கிய விஜய்-வெங்கடேசன் கூட்டணி மறுபடி இணைந்து புதிய படமொன்றைத் தரப்போகிறார்கள். இப்படத்தை விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் தயாரிக்கவுள்ளார்.
* வி.ராமன்பிள்ளை என்னும் பிரபல மலையாள எழுத்தாளர் எழுதிய 'மார்த்தாண்ட வர்மா' என்ற நாவல் 'குலம்' என்ற பெயரில் மலையாளத்தில் படமாகவுள்ளது. இப்படத்தில் பானுப்பிரியா கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.
* கார்த்திக்-மீனா நடிக்கும் 'அரிச்சந்திரா' படத்தை இயக்குபவர் செய்யாறு வி.ரவி. முன்பு ஆர்.வி.உதயகுமாரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த இவர், பிரபு நடித்த 'தர்மசீலன்' படத்தை இயக்கியவர்.
* பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்க 'சிப்பாய்' என்ற பெயரில் தொடங்கப்பட்ட படம் இப்போது 'முத்துசிகாமணி' என்ற பெயரில் தயாராகி வருகிறது. இதில் 'லவ்டுடே' படத்தில் சுவலட்சுமியின் தோழியாக நடித்த சிநேகா கதாநாயகியாக நடிக்கிறார்.
* சௌகார் ஜானகி தற்போது தமிழில் நடிப்பதில்லையே தவிர தெலுங்கில் பிஸியாக நடித்து வருகிறார். இவர் அண்மையில் முக்கிய வேடத்தில் நடித்த 'சுபா கான்ச்சலு', 'நேனு பிரேமிஸ்த்துனானு' ஆகிய இரண்டு படங்களும் பெருவெற்றி பெற்றுள்ளன.

## காதோடு சொல்லுகிறோம்

பெயரில் 'கவி' வைத்திருக்கும் சங்க நடிகைக்கு யோகம் என்றால் யோகம். அப்படியொரு யோகம். தெலுங்குப் பக்கம் போனவர் அங்கு இரண்டு இயக்குநர்களின் அன்புப் பிடியில் சிக்கிவிட்டாராம். தமிழ்ப் படவுலகம் கைவிட்டாலும் சுந்தரத் தெலுங்கு கைகொடுக்கும் என்ற நினைப்பில் தமிழ்ப்பட புள்ளிகள் சிலரது தொடர்பை வெட்டிவிடத் தொடங்கிவிட்டாராம். அடிக்கடி வீட்டை மாற்றிய 'சங்க' நடிகை தன் கூட்டையும் மாற்றிக்கொள்ள தொடங்கிவிட்டார்.

ரஞ்சித நடிகைக்கு புதிய வாய்ப்புக்கள் கதவைத் தட்டவில்லை. பிறந்தநாள் விருந்தை வெகு விருந்தாக நடத்தியும் வாய்ப்பு மட்டும் எட்டாக்கனியாக இருக்கிறது. அதனால் சம்பளத்தை மேலும் குறைத்துக் கொண்டதோடு தனக்கு தெரிந்த ஹீரோக்களுடன் ஃபோனில் சொக்லேட் தடவி பேசி வாய்ப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

தன் பெயரில் 'பூ' வைத்திருக்கும் இரண்டெழுத்து நடிகை மனக் கவலையில் மாட்டித் தவிக்கிறார். மணியான காதலர் இயக்கும் படத்திற்கு பணம் போதவில்லையாம். அதனால் காதல் இயக்குநர் மனம் உடைந்து போய்விடுவாரோ என்று கலங்குகிறார். தனக்கு 'நன்கு தெரிந்த' சினிமாப் புள்ளிகள் சிலரிடம் நிதி உதவி கோரியுள்ளாராம் நடிகை.

தேவலோக அழகிகளில் ஒருவரது பெயர் கொண்ட ரம்ப நடிகை சென்னையில் சொந்தமாக வீடு வாங்கினாலும் தங்கியிருப்பது ஹைதராபாத்தில்தானாம். பெரும்பாலான இந்திப் படங்களின் படப்பிடிப்புக்கள் அங்குதான் நடப்பதுண்டு. அங்கு தங்கியிருப்பதுதான் பசையுள்ள தயாரிப்பாளர்களுடன் பரிச்சயமாக வசதியாம். இங்கு புதிய பங்களா ஒன்றும் கட்டத் தொடங்கியுள்ளாராம்.

முன்னணி நடிகைகள் வீட்டிற்கு மட்டும்தான் முன்னணி நடிகர்கள் படையெடுக்க வேண்டுமா என்ன? வித்யமான ஸ்ரீ நடிகை வீட்டிற்கும் முன்னணி ஹீரோக்கள் சிலர் சென்று வருகிறார்களாம். படங்களில் அம்மா வேடம் ஏற்று நடிக்கும் அந்த நடிகை முன்னர் சுருக்கமாக மூன்றெழுத்தால் அழைக்கப்படும் நடிகரைக் காதலித்தவர்.

## நிறுவனம் ஒன்று படங்கள் ஆறு

'எட்டுப்பட்டி ராசா', 'பிஸ்தா' உட்பட பல படங்களை தயாரித்த பிரமிட் பட நிறுவனம் அடுத்து ஆறு படங்களை ஒரே நேரத்தில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

முதல் படத்தின் பெயர்: 'வாராயோ வெண்ணிலாவே'. இதில் கதாநாயகன் பிரபு. இசை: இளையராஜா.

இரண்டாவது படம்: 'என் ஆசை ராசாவே' சிவாஜிகணேசன் இதில் முக்கிய பாத்திரம் ஏற்க, கஸ்தூரிராஜா இயக்குகிறார்.

'புது வசந்தம்', 'சூர்யவம்சம்' ஆகிய படங்களை இயக்கிய விக்ரமன் இயக்கத்தில் சத்யராஜ் நடிக்கும் படம் மூன்றாவது. பெயர் சூட்டப்படவில்லை.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் அரவிந்தசாமி நடிக்கும் படம் நாலாவது. அதற்கு 'ரிதம்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

மற்றும் இரு படங்களில் ஒன்றில் விஜய் கதாநாயகனாகவும், இன்னொன்றில் கார்த்திக் கதாநாயகனாகவும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## சினிவிசிட்



விக்னேஷ்-சுவலட்சுமி
படம்: காதல் பள்ளி



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 22

மித்ரவாசு

# குளியல் காட்சியை தவறவிடாத இயக்குநர்

## மருமகளிடம் பாராமுகம் காட்டிய நடிகர்

குடும்பப் பாங்கான படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த எம்.கர்ணன் இயக்குநராக மாறியபோது காலம் வெல்லும் என்ற படத்தை இயக்கினார். அதில் வன்முறைக் காட்சிகள்தான் பெரிதும் இடம்பெற்றன. ஜெய்சங்கரும், ராஜ்கோகிலாவும் (நடிகை மீனாவின் சித்தி) ஜோடியாக நடித்தனர்.

இந்த ஜோடி கர்ணன் இயக்கத்தில் 'ஜக்கம்மா', 'ஒரே தந்தை', 'எங்க பாட்டன் சொத்து' என்று பல படங்களில் தொடர்ந்தது. அத்தனை படங்களிலும் ராஜ்கோகிலா உள்ளாடைகள் இன்றி மெல்லிய சருகு போன்ற வெண்ணிற சேலை மட்டும் அணிந்து குளியல் காட்சிகளில் நடித்தார். அதில் ஒரு படத்தில் ஜெய்சங்கரோடு குளத்தில் ஜலக்கிரீடை எல்லாம் செய்வார்.

'எங்க பாட்டன் சொத்து' படத்தில் ராஜ்கோகிலாவோடு அவரது அக்கா ராஜ்மல்லிகாவும் (மீனாவின் அம்மா) அதே போன்ற காட்சியில் நடித்தார்.

அடுத்து 'புதிய தோரணங்கள்' என்ற படத்தை இயக்கினார் கர்ணன். இந்தப் படத்தில் சரத்பாபு ஹீரோ. அவருக்கு ஜோடியாக முதலில் நடித்தவர் 'பஞ்ச கல்யாணி' படத்தில் பிரபலமான எம்.எஸ்.வசந்தி. படத்தின் இறுதிக் காட்சிகள் சென்னை செங்கல்பட்டு அருகே உள்ள திருவடிசூலத்தில் படமாக்கப்பட்டன.

ஒரு காட்சியில் வசந்தி குளத்தில் (எல்லா கர்ணன் படங்களிலும் வருவதைப்போல) குளித்துக் கொண்டிருக்கும்போது, அவரை வில்லன் கெடுக்க முயற்சி செய்வதுபோல படமாக்கத் திட்டமிட்டார்கள்.

அந்தக் காட்சியில் மெல்லிய துணியில் குட்டையான பாவாடையைக் கட்டிக்கொண்டு வில்லனிடம் சிக்கி நடித்தால் எப்படி இருக்கும்? நினைத்துப் பார்த்தபோதே வசந்திக்குப் பயம் வந்துவிட்டது.

அதனால் தயக்கத்துடன் கர்ணனிடம் "இந்த உடையில் நான் நடிக்கத்தான் வேண்டுமா?" என்று கேட்டபோது, கர்ணனுக்கு கோபம் வந்துவிட்டது. "இப்படித்தான் நடிக்க வேண்டும். இல்லாவிட்டால் போகலாம்" என்று உறுதியாக கூறிவிட்டார்.

படம் முடியப்போகிறது, வசந்தி எப்படியும் நடித்தே ஆகவேண்டும் என்று கர்ணன் நினைத்தார். ஆனால் வசந்தியோ அதுபோல் நடிப்பதில்லை என்று முடிவெடுத்து போய்விட்டார். கர்ணனுக்கு அது அதிர்ச்சிதான்.

என்றாலும் தான் நினைத்ததுபோல படமாக்க புதுமுகத்தைத் தேடினார். ஆந்திராவில் இருந்துவந்த விஜயலட்சுமி கர்ணனிடம் சிக்கினார். கர்ணன் விருப்பப்படியெல்லாம் அவர் நடித்தார். நடந்தார். வசந்தி முதலில் நடித்த காட்சிகளையும் விஜயலட்சுமியை வைத்தே மீண்டும் படமாக்கினார் கர்ணன்.

அந்த விஜயலட்சுமிதான் பின்னர் கமல், ரஜினியோடு ஜோடியாக நடித்த மாதவி.

### நடிகரின் இரகசியம்

சமீபத்தில் விருது பெற்ற பெரிய நடிகர் அவர். சினிமாவுக்கு வருவதற்கு முன்பே நாடகத் துறையில் இருந்தபோது ரத்னமான நடிகையுடன் நெருக்கமாக இருந்தார். வாலிப வயதில் நடிகர் பசிக் கொடுமை அறியாமல் பார்த்துக் கொண்டவரும் அந்த நடிகைதான்.

நடிகர் சினிமாவில் அறிமுகமாகி வெற்றிகரமாக உலாவந்த பின்பும் நாடக நடிகையை கைவிடவில்லை. இரகசிய திருமணம் செய்து கொண்டார்.

இது நடிகரின் தாய்க்குத் தெரியாது. தாயின் கட்டளைப்படி சினிமா தொடர்பில்லாத இன்னொரு பெண்ணையும் திருமணம் செய்துகொண்டார்.

நடிகரின் முதல் மனைவி விடயம் திரையுலகில் உள்ள பலருக்கே தெரியாது. பழைய நாடகக் கலைஞர்கள் அறிவார்கள். நாடக நடிகையான முதல் மனைவி மூலம் நடிகருக்கு குழந்தை ஏதும் இல்லை. என்றாலும் அந்த மனைவிக்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார். வருடத்தில் சில நாட்களை அந்த மனைவிக்காக நடிகர் ஒதுக்குவார்.

நடிகரின் பிள்ளைகளுக்கும் இதெல்லாம் பகிரங்கமாகத் தெரியும். நடிகரின் மூத்த பிள்ளை ஒரு நடிகையின் அக்காவை இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார். அதுபற்றி தந்தை கேட்டபோது, "நீங்கள் மட்டும் இரண்டு மனைவி வைத்துக் கொள்ளலாம், நான் வைத்துக்கொள்ளக்கூடாதா?" என்று திருப்பிக் கேட்டார். நடிகரோ பிள்ளையின் இரண்டாவது மனைவியை தனது வீட்டுக்குள் நுழைய அனுமதிக்கவே இல்லை.

ஒரு சமயம் நடிகர் சென்றிருந்த ஒரு நிகழ்ச்சிக்கு பிள்ளையின் இரண்டாவது மனைவியும் வந்திருந்தார். கையில் கொண்டுவந்த குழந்தையை நடிகரிடம் காண்பித்து, "மாமா, உங்க பேரக் குழந்தையைப் பாருங்க" என்றதும் நடிகர் முகத்தைச் சுளித்து வேறொரு பக்கம் திரும்பிக்கொண்டார்.



அப்பாஸ்-சங்கவி
படம்: இனியெல்லாம் சுகமே

## குஷ்புவின் அஞ்சலி

டயானா மறைந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் குஷ்பு அதிர்ந்து போனாராம். டயானாமீது கொள்ளையான பிரியம் வைத்திருந்தார் குஷ்பு.

தமிழ்ப்பட நடிகைகளிலேயே டயானாவுக்காக விசேஷ மலர்வளையம் அனுப்பி அஞ்சலி செய்தவர் குஷ்பு மட்டும்தான். கூறியர் சேவிஸ் மூலமாக மலர்வளையத்தை அனுப்பிவைத்தார் குஷ்பு.

"டயானா மறைந்த செய்தி கேட்டதும் தலையில் இடி விழுந்தது மாதிரியாகிவிட்டது. அச் செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்று நினைத்தேன். தொலைக்காட்சியில் டயானாவின் இறுதிச் சடங்கை பார்த்துக் கொண்டிருந்தபோது என்னையுமறியாமலேயே அழுதுவிட்டேன்" என்று சொல்லியிருக்கிறார்.

## சரத்-தேவயாணி- ராசியான ஜோடி

சரத்குமார்-தேவயாணி நடித்த 'சூர்யவம்சம்' சூப்பர் ஹிட்டாகிவிட்டது. அதனால் இந்த ஜோடிக்கு 'ராசியான ஜோடி' என்ற முத்திரை குத்தப்பட்டுவிட்டது.

'முறைமாமன்', 'உள்ளத்தை அள்ளித்தா' போன்ற படங்களை தயாரித்த கங்கா கவுரி புரொடக்ஷன் புதிதாக தயாரிக்கும் படத்திற்கு 'மூவேந்தர்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சரத்குமார்-தேவயாணி இணைந்து நடிக்கிறார்கள். என்.எம். நம்பியார், மணிவண்ணன், லட்சுமி, ராமதாஸ் ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

இயக்குநர் சி.சுந்தரின் சிஷ்யரான சி.ஜி.சுராஜ் இப்படத்தின் மூலம் இயக்குநராகிறார். கதை, வசனம் செல்வபாரதி. இசை: சிற்பி. பாடல்கள்: பழநிபாரதி. படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகிறது.

சரத்குமார், தேவயாணி இருவருமே தாங்கள் நடிக்கும் படத்தின் கதை, தங்கள் பாத்திர அமைப்புப் பற்றி ரொம்ப ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளார்கள். இருவருக்குமே 'மூவேந்தர்' படக்கதை திருப்தி அளித்துவிட்டதாம்.



மம்தா குல்கர்னி
படம்: சைனா கேட் (இந்தி)

## அப்பாஸ்-சிம்ரான் காதலர்களா?

தமிழ்த் திரையுலகில் தற்போது கிசுகிசுக்கப்படும் காதல் ஜோடி அப்பாஸ்-சிம்ரான். நடிக்க வரமுன்பே நட்பு இருந்தது. இப்போது இறுக்கமாகி இருக்கிறது. ஆனாலும் இது காதலல்ல என்கிறார்கள் இரண்டு பேரும். அதையும் தாண்டிப் புனிதமானதா? என்று கேட்கிறீர்களா?

அப்பாஸ் சிம்ரான் இருவரிடமும் ஒரே விதமான கேள்விகளை தொடுத்து பதில் பெற்று பிரசுரித்துள்ளது பிரபல சினிமா சஞ்சிகை. அதிலிருந்து ஒரு பகுதி.

**கே: தொடர்ந்து காதல் படங்களிலும், கவர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறீர்களாமே?**

அப்பாஸ்: அப்படி இல்லை. நான் நடித்த முதல் படமான காதல் தேசத்துக்குப் பிறகு அப்படி அமைந்துவிட்டது. காதல் படங்களில் நடித்து எனக்கே அலுத்துவிட்டது.

சிம்ரான்: இந்த வயதில்தானே கவர்ச்சியாக நடிக்க முடியும். இப்போதுள்ள படங்களில் கவர்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இப்படி நடித்தால்தான் தத்ருபமாக வரும் என்று நினைப்பார்கள். ஆனால் அதைச் சொல்லத் தயங்குவார்கள். அவர்களின் தயக்கத்தை புரிந்து கொண்டு கவர்ச்சி வேண்டுமா என்று நானே கேட்பேன். இதில் என்ன தவறு?

**கே: நீங்கள் இருவரும் காதலித்துக் கொள்வதாகச் சொல்கிறார்களே?**

அ: ஆமாம். இதைத்தான் எல்லோரும் சொல்கிறார்கள். எங்களுக்கு மட்டும் இந்தக் காதலைப் பற்றித் தெரியவில்லை. ஒரு ஆணும், பெண்ணும் பேசிப் பழகுவதுதான் காதலா? அப்படியானால் எனக்கு நிறைய பெண் நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் காதலிக்கிறேன் என்று அர்த்தமா? சிம்ரானும் நானும் நல்ல நண்பர்கள்.

சிம்: இந்தக் காதல் கத்தரிக்காய் இதில் எல்லாம் எனக்கு நம்பிக்கையே கிடையாது. அதிலும் அப்பாஸோடு காதலா? திருமணம் பற்றி எனக்கென்று சில கனவுகள் இருக்கிறது. எனக்கு வரும் மாப்பிள்ளை அழகானவராக, என்னைப் புரிந்து கொண்டவராக, என்மீது அன்பு செலுத்துபவராக, என் சொந்த விஷயத்தில் தலையிடாதவராக... இப்படி நிறைய இருக்கிறது.

முகப்பில் குஷ்பு



செல்வா–சுவாதி
படம்: நாட்டுப்புற நாயகன்

## புடவை அணிய மறுப்பு

சேலை கட்டி நடிக்க கொள்ளை கொள்ளை ஆசை என்று சங்கவி பேட்டி கொடுப்பதெல்லாம் சும்மா. 'அந்திமந்தாரை' படத்தில் சேலை கட்டி நடித்தது ரசிகர்களைக் கவரவில்லை என்பதால், கவர்ச்சி காட்டி நடித்தால்தான் மார்க்கெட் நிலைக்கும் என்று நம்புகிறார் சங்கவி.

'பொற்காலம்' படத்தில் சங்கவியை புடவை கட்டி நடிக்குமாறு இயக்குநர் சேரன் கேட்க, சங்கவி முதலில் மறுத்தாராம். "இந்தப் படத்தில் உன்னுடைய பாத்திரம் சரியாக எடுபடாமல்போனால் என் அடுத்த படத்தில் உன்னை கவர்ச்சியாகக் காண்பிக்கிறேன்" என்று சேரன் உறுதியளித்த பின்னர்தான் சங்கவி சம்மதித்தாராம்.

## கலைஞர் கதை படமாகிறது

தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி எழுதி தொடராகவும், நாவலாகவும் வெளிவந்த கதை 'தென்பாண்டிச் சிங்கம்'. அக் கதை பிரமாண்டமான திரைப்படமாகப் போகிறது.

படத்தை இயக்கப் போகிறார் வி.சி.குகநாதன். எம்.ஜி.ஆர் நடித்த 'புதிய பூமி படத்திற்கு கதை எழுதியதில் தொடங்கி இதுவரை 149 படங்களுக்கு கதை எழுதிவிட்டார். 'ராஜபார்ட் ரங்கத்துரை', 'மனிதன்', மின்சாரக் கனவு ஆகிய படங்களும் வி.சி.குகநாதன் கதை எழுதிய படங்களில் அடக்கம். இதுவரை 24 படங்களை இயக்கியுமுள்ளார்.

தென்பாண்டிச் சிங்கம் படத்தின் வசனம், இயக்கம் இரண்டும் வி.சி.குகநாதன்தான். யாரை கதாநாயகனாக நடிக்கவைப்பது என்பது இன்னமும் முடிவாகவில்லை.

## கமலின் மருதநாயகம்

கமல் இயக்கி நடிக்கப்போகும் 'மருதநாயகம்' படம் பற்றிய எதிர்பார்ப்பு இப்போதே ஆரம்பமாகிவிட்டது. கமல் என்னவெல்லாம் புதுமைகள் செய்யப்போகிறார் என்று எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

வெள்ளையர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற குறுநில மன்னன் பற்றிய உண்மைக் கதையில் கொஞ்சம் கற்பனையும் கலந்து பிரமிக்கச் செய்வதுதான் திட்டம். மன்னரின் இருப்பிடம், ஊர்கள், படைவீரர்கள் என்று பல்லாயிரக் கணக்கானோரை காண்பிக்கவேண்டி இருப்பதால் ஸ்ருடியோ போதாது. அதனால் 50 ஏக்கர் நிலத்தை குத்தகை எடுத்து பிரமாண்டமான 'செட்'டுக்கள் போடும் வேலை தொடங்கியிருக்கிறது.



www.padippakam.com
படிப்பகம்

## மணமானபின்னர் குண்டாவது ஏன்?

தொகுத்து அனுப்பியவர்-ஏ.அபிலாஷா

திருமணத்திற்குப் பிறகு நிறைய எடை போடுவதில் ஆண்களை விடப் பெண்களே முன்னணியில் இருக்கிறார்கள். குறிப்பாக இருபதிலிருந்து முப்பது வயது வரை என்று எடுத்துக் கொண்டால் அதிக எடையைக் கூட்டிக்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிட 22 சதவீதம் அதிகமாம்.

திருமணம் என்பதை விடப் பிள்ளைப் பேறு என்பது இந்த விஷயத்தில் பெண்களைப் பொறுத்தவரை முக்கிய பங்கு வகிக்கிறது. கட்டாய ஓய்வு, ஹோர்மோன் அளவுகளில் ஏற்படும் மாற்றம் இவற்றின் காரணமாகவும், திருமணமாகி விட்டதால் தன் தோற்றத்தைப் பற்றிய ஓர் அலட்சிய உணர்வு ("இனிமேல் அழகாக இருந்து யாரைக்



கவர வேண்டும்?") தோன்றி விடுவதாலும் இந்த நிலை ஏற்படுகின்றது.

இருந்தாலும் உணவு வழக்கமும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பசிக்குச் சாப்பிடுவது என்று மட்டுமில்லாமல் சும்மா எதையோ சாப்பிடுவது என்பதும் இதற்குக் காரணம், இதோ சில உணவுக்குறிப்புகள். பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக மேலே உள்ள வயது கட்டத்தில் உள்ள பெண்களுக்கு இவை உதவும்.

- இனிப்புகள், ஐஸ்கிறீம், வறுத்த உணவுப் பதார்த்தங்கள் போன்றவை கலோரிகளை விர்ரென்று ஏற்றும் என்பது தெரிந்ததே. அப்படியிருக்க இதுபோன்ற உணவுப்பொருட்களை வீட்டில் அதிகம் இருப்பில் வைத்திருக்க வேண்டாமே. இருந்தால்தானே ஆசை வரும், உண்ணத் தோன்றும், எடை அதிகமாகும்.
- வழக்கமான மிதமான உணவைத் தவிர வேறு எந்த உணவுப் பண்டத்தையும் (நொறுக்குத் தீனி உட்பட) கையில் எடுக்கும்போது "அதைச் சாப்பிட்டே ஆகவேண்டியது அவசியமா?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். இல்லை என்று பதில் வந்தால் எடுத்ததை வைத்து விடுங்கள்.
- வீட்டில் இருக்கும்போது உணவு நேரம் வந்துவிட்டதே என்பதற்காகச் சாப்பிட வேண்டாம். பசித்தால் மட்டும் சாப்பிடவும்.
- ரீ.வி. பார்த்துக்கொண்டே சாப்பிடுவதைத் தவிர்க்கவும். ஏனென்றால் விருப்பமான நிகழ்ச்சி முடியும் வரையில் எதையாவது தட்டிலும், வயிற்றிலும் நிரப்பிக் கொண்டே இருக்கத் தோன்றுவது இயல்பு.
- நம் பெண்களுக்கு இன்னொரு வழக்கமும் உண்டு. "வீணாக்குவானேன்" என்று மீந்து போகும் உணவை கட்டாயமாகவாவது சாப்பிடுவது. தேவையானதை மட்டும் நல்லது. அதேபோல் சத்துள்ள உணவுப்பொருள் என்றால் எல்லாவற்றையுமே வீட்டு ஆண்களுக்கே பரிமாறிவிட வேண்டும் என்பதில்லை. தனக்கென்றும் ஒரு பகுதியைக் குடும்பத் தலைவி எடுத்து வைத்துக்கொள்ளலாம்.
- சாப்பிட்டு ஓரிரு மணி நேரத்திலேயே பசியெடுக்கிறதென்றால் லேசாக எதையாவது சாப்பிடுவதில் தவறில்லை. ஏனென்றால் பசியைத் தள்ளிப்போட்டால் அடுத்த உணவின்போது (மனவியல் காரணமும் சேர்ந்து கொண்டு) மிக அதிகமாகச் சாப்பிட்டுவிட வாய்ப்புண்டு.
- பெண்கள் அதிகமாகச் சாப்பிடுவதற்கு டென்ஷனும் மன இறுக்கமும் கூட காரணமாக அமையலாம் என்று கூறுகிறார்கள் மனவியல் நிபுணர்கள். குழந்தை அழும்போது டக்கென்று தாய்ப் பாலைக் கொடுத்து அந்த அழுகையைத் தாய் சமாதானப்படுத்துகிறாள் இல்லையா? அதுபோல் "தன்னை எதிர்க்காத, தனக்கு நிறைவை மட்டுமே தரும் விஷயம்" உணவு என்ற ஆழ்மன எண்ணத்தினால் டென்ஷனாகும் சமயங்களில் பெண்கள் அதிகம் சாப்பிட வாய்ப்புண்டாம். எனவே இந்த விஷயத்தில் முன்னெச்சரிக்கை தேவை.

## அன்னையின் கருணை

சென்னைப் பல்கலைக்கழக விழா ஒன்றுக்காக 1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சென்றிருந்தார் அன்னை தெரேசா.

அந்த விழாவுக்கு முன்பாக பிரதம விருந்தினர்களுக்கு இனிப்பும், காரமும், டீயும் பரிமாறப் பட்டன. எல்லோரும் சாப்பிட்டனர். அன்னை தெரேசா மட்டும் எதனையும் தொட மறுத்துவிட்டார்.



எல்லோரும் டீ குடித்துவிட்டு அன்னை தெரேசாவை அழைத்துக்கொண்டு செல்ல ஆயத்தமாகினார்கள். அப்போது திடீரென்று அன்னை தெரேசா செய்த காரியம் கண்டு அனைவரும் பதறிப் போனார்கள்.

தட்டுக்களில் மீதியாக இருந்த இனிப்பு வகைகளை சேகரிக்கத் தொடங்கினார். அவற்றையெல்லாம் தன்னிடமிருந்த பை ஒன்றுக்குள் போட்டுக்கொண்டார்.

பதறியபடி பார்த்துக்கொண்டிருந்தவர்களிடம் மெள்ளச் சொன்னாராம்: "இந்த இனிப்புக்களின் சுவையே அறியாத குழந்தைகள் கல்கத்தாவிலே இருக்கிறார்கள். இது அவர்களுக்கு பயன்படும்."

அங்கும் மட்டுமல்ல, எங்கு போனாலும், விமானப் பயணத்தில் கூட மிஞ்சுகிற உணவுப்பொருட்களை பையில் எடுத்துச் சென்று குழந்தைகளுக்கு கொடுப்பது அன்னை தெரேசாவின் வழக்கம்.

## உங்கள் கவனத்திற்கு....

வெள்ளிப்பாத்திரத்தைத் தேய்க்க- கடுகை அரைத்துப் பயன்படுத்தினால், பளபளவென்று இருக்கும். வெள்ளியில் உள்ள கறைகள் போய்விடும்.

பச்சை மிளகாய் பழுக்காமல் இருக்க, ஒரு போத்தலில் மிளகாயுடன் மஞ்சள் தூள் ஒரு சிட்டிகை போட்டு, மூடி வைத்துப் பாருங்கள். பழுக்கவே பழுக்காது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** CK

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-10-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள்

2

இளவரசர் சாள்ஸுக்கும் கமீலாவுக்கும் இடையில் உள்ள உறவு எப்படிப்பட்டது என்பதை தன் கண்களாலேயே கண்டபின்னர், டயானாவுக்கு தன் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போல இருந்தது.

அதன்பின்னர்தான் அரண்மனை ஊழியர் மூலமாக அந்த அதிர்ச்சியான தகவலை அவர் அறிந்துகொண்டார்.

இளவரசர் சாள்ஸ் சிறு வயதில் கூச்ச சுபாவம் உள்ளவராக இருந்தார். இளம் பெண்களைக் கண்டாலே வெட்கத்தில் ஒதுங்கிச் சென்று விடுவார்.

சாள்ஸின் தந்தையாரான எடின்பரோ கோமகனுக்கு தன் மகனின் கூச்ச சுபாவத்தை எப்படியாவது போக்க வேண்டுமே என்று கவலையாகிவிட்டது.

கமீலாவின் கணவரான பார்க்கர் ஒரு பிரிகேடியர். மகாராணி குடும்பத்துக்கு நம்பிக்கையானவர். பார்க்கருடன் அரண்மனைக்கு வந்து சென்று கொண்டிருந்த கமீலாவும் மகாராணி குடும்பத்தின் நம்பிக்கைக்கு உரியவரானார்.

புவனா

இளவரசர் சாள்ஸின் கூச்ச சுபாவத்தை போக்க வேண்டுமானால் வெளிப் பெண்களுடன் அவரை சரளமாக பழக வைக்க வேண்டும் என்று நினைத்த எடின்பரோ கோமகன், அதற்கு கமீலாதான் பொருத்தமானவர் என்று நினைத்தார்.

### உருவான நெருக்கம்

இளவரசரின் கூச்ச சுபாவத்தை போக்கும் பணியை ஒரு வேலை போலவே கமீலாவிடம் ஒப்படைத்தார் எடின்பரோ கோமகன்.

கோமகனே பச்சைக் கொடி காட்டிய பின்னர் கமீலா மெல்ல மெல்ல சாள்ஸை தன் பிடிக்குள் கொண்டுவரத் தொடங்கினார்.

கட்டியணைத்து நடனம் ஆடுவதில் ஆரம்பித்து படிப்படியாக கட்டில்வரை அவர்கள் நெருக்கம் சென்றது. இளவரசர் சாள்ஸ் கூச்ச சுபாவங்களை மூட்டைகட்டி எறிந்துவிட்டு காதல் இளவரசராக மாறினார்.

இந்த நெருக்கம் அரண்மனைக்குள் மகாராணிக்கும், எடின்பரோ கோமகனுக்கும் மட்டுமல்லாமல் அரண்மனை ஊழியர்களுக்கும் நன்கு தெரியும்.

சாள்ஸும், கமீலாவும் முத்தமிட்டுக் கொள்வதையும், அணைத்தபடி மெய் மறந்து இருப்பதையும் அரண்மனை ஊழியர்கள் சிலர் கண்டும் இருக்கின்றனர்.

அரண்மனை ஊழியர்கள் சிலர் மூலமாக சாள்ஸ்-கமீலா காதல் லீலைகள் பத்திரிகைகள் சிலவற்றுக்கும் எட்டின.

டயானா-சாள்ஸ் திருமணத்தின் முன்னரே சாள்ஸ்-கமீலா காதல் கதைகளை பத்திரிகைகள் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி இருந்தன.

அச் செய்திகளை பத்திரிகைகளின் கட்டுக் கதைகள் என்றே அப்போது நினைத்தார் டயானா.

அது கட்டுக் கதையல்ல என்பதை தன் கண்ணால் கண்டபின்னர்தான் நம்பினார்.

கமீலாவை சாள்ஸுக்காக தெரிவு செய்து கொடுத்தவரே சாள்ஸின் தந்தையார்தான் என்ற தகவலையும் அரண்மனை ஊழியர் மூலம் அறிந்தபோது இடிந்து போய்விட்டார் டயானா.

### வெளியான செய்திகள்

டயானாவைத் திருமணம் செய்த பின்னரும் சாள்ஸ் கமீலாவுடன் காதல் லீலைகளில் ஈடுபடுவதை பத்திரிகைகள் மோப்பம் பிடித்து வெளியிடத் தொடங்கின.

இச் செய்திகளால் பிரிட்டிஷ் அரச குடும்ப மானம் கப்பலேறிக் கொண்டிருக்கிறதே என்று கவலைப் பட்டார் மகாராணி.

இதற்கிடையே மகாராணியின் இரண்டாவது மருமகளான சாராவும் தலையிடியாக மாறினார். இளவரசர் ஆண்ட்ரூவை மணந்து கொண்ட சாரா ஓர் உல்லாசப் பிரியை.



"ஒவ்வொரு நாளும் பேசியதைவிட கண்ணீர்விட்டு அழுத நாட்கள்தான் அதிகம்."

பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அழைத்தால் அதற்காக கணிசமான ஒரு தொகை கேட்டு வாங்கிக் கொள்ளுவார்.

சாராவின் நடவடிக்கைகள் பிடிக்காத மகாராணி எலிசபெத் "இனிமேல் வெளி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது" என்று தடைவிதித்தார்.

"குடும்பத்தை கவனிக்க அதிக

## அரண்மனை இரகசியம்




இளவரசர் ஆண்ட்ரூ–சாரா

நேரம் ஒதுக்க வேண்டி இருப்பதால் வெளி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கிறது" என்று சமாளிப்பு அறிக்கை வெளியிடச் செய்தார் மகாராணி.

ஆனாலும் மாமியார் எட்டடி பாய்ந்தால் மருமகள் சாரா பதினாறடி பாய்பவராக இருந்தார். ஆண்ட்ரூவைத் தவிர வேறு ஆண் நண்பர்களையும் சந்திக்க ஆரம்பித்தார். தன்னைப் பற்றிய கிசுகிசுச் செய்திகளையும் சாராவே பத்திரிகைகளுக்கு கிடைக்குமாறு செய்தாராம். அத்தனை விளம்பர மோகம்.

தனக்கும் இளவரசர் ஆண்ட்ரூவுக்கும் இடையிலான சச்சரவுகளைக்கூட வரிக்கு வரி பத்திரிகைகளுக்கு கிடைக்கவும் ஏற்பாடு செய்துவிடுவார் சாரா.

அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவருடன் சாராவுக்கு நெருக்கம் ஏற்பட்டது. இருவரும் அடிக்கடி தனிமையில் இனிமை



"சாள்ஸ்–கமீலா. இது 1975 இல் எடுக்கப்பட்ட புகைப்படம். அதாவது டயானா திருமணத்திற்கு ஆறு வருடங்கள் முன்பாக."

காணுகின்றனர் என்ற செய்தி மகாராணியின் செவிகளுக்கு எட்ட முன்னரே, பத்திரிகைகளில் வெளியாகி தூள் கிளப்பியது.

ஒருநாள் தனது தலைமுடியை கட்டையாக வெட்டிக்கொண்டு தன் எதிரே வந்த சாராவைப் பார்த்த மகாராணி, "ஏன் இப்படி வெட்டினாய்?" என்று கேட்க, "என் முடி, என் இஷ்டம். எப்படி வேண்டுமானாலும் வெட்டிக் கொள்வேன். உங்களுக்கு பிடிக்கவில்லையானால், எனக்கென்ன?" என்று நெத்தியடியாக கேட்டுவிட்டுப் போய்விட்டார் சாரா.

இளவரசர் ஆண்ட்ரூவுடன் தன் உறவு முறிந்ததை அடையாளமாகக் காட்டத்தான் முடியை கட்டையாக வெட்டிக் கொண்டதாகப் பின்னர் தெரிவித்தார் சாரா.

அரண்மனைக்குள் ஆண்ட்ரூ-சாரா மோதலும், சாள்ஸ்-கமீலா காதல் லீலையும் துல்லியமாக பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்க மகாராணியின் சந்தேகப் பார்வை டயானாமீது திரும்பியது.

சாள்ஸுடன் உள்ள கோபத்தில் டயானாதான் பத்திரிகைகளுக்கு இரகசியமாகச் செய்தி கொடுக்கிறாரோ என்று சந்தேகப்பட்டார் எலிசபெத் மகாராணி.

இளவரசர் ஆண்ட்ரூ, சாரா இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். பத்திரிகைச் செய்திகள் உறுதியாகின. அதனால் பத்திரிகைகள் கற்பனைச் செய்திகளை வெளியிடுவதாக மகாராணி குடும்பத்தால் குற்றம் சாட்டவும் முடியாமல் போனது.

### அனுதாபம்

ஆண்ட்ரூ-சாரா விவாகரத்தின் பின்னர் அடுத்தது இளவரசர் சாள்ஸ்-டயானா விவாகரத்துத்தான் என்று பத்திரிகைகள் ஜோசியம் வெளியிடத் தொடங்கின.

டயானாவுக்கு சாள்ஸ் செய்த கொடுமைகள் பத்திரிகைகளில் இடம்பெற்றன.

'ஒருநாள் டயானாவின் அறைப்பக்கமாகச் சென்றேன். அறைக் கதவின் கீழ்ப்பக்க வழியாக இரத்தம் ஒரு கோடாக வழிந்து வந்து கொண்டிருந்தது. டயானா தன் கையை பிளேடினால் கீறிக்கொண்டு கட்டிலில் விழுந்து கிடந்தார். கட்டில் மீதும் இரத்தம். உடனே டாக்டரை அழைத்து சிகிச்சை செய்து டயானாவை காப்பாற்றினோம். அடிக்கடி தன் கைகளை பிளேடினால் அறுத்துக் கொள்கிறார். தனியே கிடந்து புலம்புகிறார்" என்று அரண்மனை ஊழியர் ஒருவர் பேட்டி கொடுத்திருந்தார்.

பேட்டியைப் படித்த பிரிட்டிஷ் மக்கள் மகாராணி குடும்பம் மீது வசை பாடினார்கள். டயானா மீது அனுதாபம் பெருகியது.

"பக்கிம்ஹாம் அரண்மனையில் ஒரு ரோஜா இரத்தம் சிந்துகிறது. அரச குடும்பத்து போலிக் கௌரவம் என்ற சிறையில் ஒரு புறா சிறை வைக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதியது ஒரு பத்திரிகை.

மகாராணிக்கு தன் மகன் செய்வது குற்றமாகத் தெரியவில்லை. மருமகள்மீதுதான் கோபம் வந்தது.

மனநல மருத்துவர்களை வரவழைத்தார். அவர்கள் டயானாவை பரிசோதித்தனர். சில மாத்திரைகளும் கொடுத்தனர்.

"இளவரசர் சாள்ஸுடன் மனம்விட்டுப் பேசுங்கள்" என்று யோசனை கூறிய ஒரு மனநல மருத்துவரிடம், "ஒவ்வொரு நாளும் பேசியதைவிட நான் கண்ணீர்விட்ட நாட்கள்தான் அதிகம்" என்று சொல்லி வாய்விட்டு அழுதார் டயானா.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**காரைதீவு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**அ. புஸ்பவதி**
மகா வித்தியாலய வீதி,
காரைதீவு-04.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## இலவசக் கனவுகள் மன்னிக்கப்படும்

நிராகரிப்பின் வேதனைகளை
அனுபவித்திருக்கிறாயா
எப்போதாவது...?
யாராலும் நிராகரிக்கப்பட்டிருக்கிறாயா?
என்னை நிராகரித்ததில்
என்ன சந்தோசம் கண்டாய்?
எதை எதிர் பார்த்தாய்...?
ஏன் நிராகரித்தாய்...?
**
பட்டாம் பூச்சியாய் பறந்தவனை
சிறைக்குள் அடைத்து
சிறகை உடைத்தாய்!
பூஜைக்கு பூக்கேட்டேன்
மலர் வளையம் தந்தாய்– மரணத்திற்கு:
சந்தோசவானில் சிட்டுக்குருவியாய்
சுற்றித்திரிந்தவனை
கூட்டுக்குள் கட்டிப்போட்டு
காணாமல் போனாய்..!
பரவாயில்லை....
காதலின் விதி கண்ணீர் மட்டும்தானோ?
**
சோகவிலங்குடைப்பாய்,
விடுதலை கொடுப்பாய்
என்றெண்ணிக்கொண்டிருந்தவனை
செவிடனாக்கி சிலுவையில்
ஏற்றியவளே...!
சத்தியமாய்ச் சொல்கிறேன்–
சாவில் என்மீது தூவிய மலர்களும்
பித்தனாக்கிய உன் பெயரையே
உச்சரித்துக்கொண்டிருக்குமடி...
**
எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு
நான் காதலிப்பதாய் சொன்னபோது
சிரித்துக்கொண்டே சொன்ன
'வேண்டாம் வேண்டாம்' என்பதின்
அர்த்தமெனக்கு விளங்கவில்லையடி!
இனியென்ன இருக்கிறது....
நான் கொடுக்க– நீ மறுக்க...?
முடிந்தால் இதயத்தைத் திருப்பிக்கொடு!
**
உன்னால்
ஒவ்வொரு கவிதையின்
மையிலும் வீசும்
பச்சை இரத்தத்தின் வாசத்தைப்
பழக்கமாக்கிக் கொண்டவன்,
பாலைவன சுடு மணலையே,
பாதையாக வகுத்துக் கொண்டவன்..!
அந்த–என்னிடமே
உயிரோடு விளையாடியவள்....
**
செய்...!
எத்தனை செய்யமுடியுமோ...
அத்தனையும் செய்!
என் நந்தவனக் கனவுகளை
மதயானையைப் போல்
மொத்தமாய் வெறிகொண்டழி!
ஆசையாய் நட்ட மல்லிகையை
அடியோடு புயலாய் பிடுங்கிப்போடு!
எடுத்துக் கொண்டுள்ள இதயத்தை
கத்தியால் சொருகி...
காலடியில் போட்டு
கால்பந்து விளையாடு...!
சந்தோசப் பட்டுக்கொள்!
**
இப்பொழுது
என்னால் முடிந்ததெல்லாம்
உன்னை நினைத்து நினைத்து
ஒவ்வொரு இரவுகளிலும்
இதயத்தை விரித்துப்போட்டு
நினைவுகளை உதறி– அதில்
உன்னை மட்டும் பொறுக்கி
கண்ணீரும் இரத்தமும் கோடுபோட்ட
கன்னத்தை சொறிந்தபடி
உப்புக்கோடு ஈரம் காய்வதற்குள்
உன்னைப் பற்றி
எஞ்சிய இரத்தத்தில் கவிதை எழுதும்
மனதை மன்னிக்க மட்டுமே....!
**

**அகன் கபிலன், வவுனியா.**

## என்-கவிகள்....-?

உன்
ஸ்பரிசங்கள்
நித்தம் ஒரு புதுமையினை
எனக்குள்
புகுத்திச் செல்லும்...!
**
நீ...
முத்தமிடும் பொழுதுகளில்
கற்பனை
காட்டாறாய்
கரைபுரளும...!
**
உன்
தெத்துப் பல்
சிரிப்பில் சிக்கி,
கன்னக் குழியில்
வழுக்கி என்
எழுதுகோல்
தவிக்கும...!
**
வலிமையான
கரங்களால்
வலிக்காமல்
நீயென்னை
சிறைப் பிடிக்கும்
போதெல்லாம்,
சிந்தனைகள் சிறகு
விரிக்கும...!
**
நெஞ்சமதை மஞ்சமாக்கி
தலை சாயும்
நேரங்களில்
உன் இதய 'துடிப்பு'
என் காதுகளில்
புது மெட்டுகளாய்
பரிணமிக்கும்...!
**
உன் விரல்கள்
தேக தேசத்தில்
ஊடுருவும் வேளையில்
என்னுள் 'கவிகள்'
கருகட்டும்...!
**
உன்
அன்பு மழையினால்
பூக்கும்
சந்தோசக் காளான்கள்
என் கவிகள்...!
**
ஆனால்...
நம் சந்திப்புகள்
'தணிக்கை'யான
நேரங்களில்
அழுது வடிப்பதும்
'என்–கவி'களோ...!
**

**எஸ்.கல்யாணி-இரத்தினபுரி.**

## கற்பனையில்......

கடலற்ற கப்பல் போல்
வாழ்வில்,
விடையில்லா வினாவாகும்
எதிர்காலம்...!
பசித் தீயும் வறுமைப் பிணியும்
வாட்டும் போதும்,
தடையில்லா அருவிபோல்
கற்பனை மட்டும் சிறகடிக்கும்!
•••
உண்பதற்கு ஒரு பருக்கைச்
சோறின்றி,
உடல் மெலிந்து நைந்த போதும்,
உடலாற ஒரு துண்டு
நிலமின்றி,
வாடிவாடி நின்ற போதும்,
காலகாலமாய்ச் செழித்த
கற்பனை மட்டும் பண்ணிசைக்கும்!
•••

## தேன் கிண்ணம்

அம்புலியில் வீடுகட்டி
நட்சத்திரக் கூரையிட்டு
தனித்திருக்கும் கற்பனையில்
என் கூட்டை அழித்தொழிக்கும்
போர் விமானம் ஒன்றில்லை!
•••
யுரேனஸில் தாலிகட்டி
செவ்வாயில் தேனிலவு போகும்
கற்பனையில்
என் கையில் விலங்குமாட்டும்
கொடுமை நிலை என்றுமில்லை!
•••

**ஜே.ஜஸ்டின்-வவுனியா.**

## பிரயோசனமற்ற தேடுதல்

சூரியன் உடைந்து
தூளாகப் போகும் நாள்
வெகு தூரத்தில் இல்லை!
*
சந்திரன் செயலிழந்து
கரைந்து வடிய
சூரியத் துகள்கள்
அண்ட சராசரமெங்கும்
பற்றி எரிய
பூமி கோடி கோடி
பிளவுப் பாதாளங்களை
ஏற்படுத்தப்போகும்நாள்
வெகு தூரத்தில் இல்லை!
*
பயப்படாதே!
அந்த நேரத்தில்
அனைத்து ஜீவராசிகளும்
இறக்கும்–ஆனால் நீ
உன் முயற்சியை
மேலும் தொடர
நிச்சயம்
உயிருடன் இருப்பாய்!
*
மலைகள் பிடுங்கப்பட்டு
பஞ்சு பஞ்சாக பறக்கின்ற
அந்த கொடிய கணத்திலும்
நீ மட்டும் தலைமுறை தலைமுறையாக
உன் இருப்பிடத்தைவிட்டு அசையாது
இன்னும் தேடிக்கொண்டிருப்பாய்!
*
எல்லாம் முடியும் தருணம்
நீ தேடியது
உன் கையை எட்டும்போது
நீ இறக்கும் நேரம் வரும்!
அப்போது காலங்காலமாய்
இறந்து போன
எல்லா மனிதப் பிணங்களும்
உன் கையிலிருக்கும்:
சமாதானத்தைப் பார்த்து
கேலி செய்யும்!
*

**எஸ்.யு.சுபைதா-இக்கிரிகொள்ளாவ.**

## வழுவங்கள்

***வாலிபம்***
இரத்தத்தின் வேகத்தில்
நித்தத்தைத் தவறவிட்டு
காதல்
பித்தத்தின் ராகத்தில்
சித்தத்தைச் சிதறவிட்டு
வெறும்
சத்தத்தின் மோகத்தில்
தடுக்கி விழுத்தப் பார்க்கும்
வித்தக விபரீதம்....!
வாழ்க்கையெனும்....
தத்துவத்தின் தலைவாசல்.
0*


***தாம்பத்தியம்***
சதயங்கள் சங்கமத்தால்
இல்லறமாய்த்
தொடங்கும்!
இதயங்கள் சங்கமித்தால்
நல்லறமாய்த்
தொடரும்!
0*

***மானுடம்***
சிறுதுளி நீரில்
உருஉடல் கொண்டு
ஒரு துளி காற்றில்
உயிர்வழி நின்று
பெருவலி பேசிப்
பேதையாய்
உலர்ந்து
சிறுபொறி தீயில்
நீராகும் மகிமை!
0*

**தருமலிங்கம்– நீர்கொழும்பு.**









← 7வயதில் டயானா அவரது சகோதரர் ஏர்ல் ஸ்பென்சருடன்

## டயானா ஆல்பம்





பிரபல நடனக்காரர் வேய்ன் ஸ்லீப்புடன் கைகோர்த்து ஆடுகிறார் டயானா.

## இந்த வாரம் உங்கள் பலன்

(28.09.1997 தொடக்கம் 04.10.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கன்னி - சூரியன், புதன்.
துலாம் - வெள்ளி, செவ்வாய்.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.
சிம்மம் - இராகு

★ சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் அதிகம், கடன் தொல்லை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, கடன் சுமை. | மு.ப. 10 மணி |
| திங்கள்- தொழில் பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, பொருள் பேறு. | மு.ப. 9 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- வீண் விரோதம், அந்நியர் சகவாசம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, வெளியிடப் பயணம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் மந்தம், பலவித நஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- வீண் விரயம், கடன் தொல்லை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| சனி- வெளியிடவாழ்க்கை, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மனக் கிலேசம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, பயனற்ற செயல். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு; மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- கடன் சுமை, காரியத் தடை. | பி.ப. 2 மணி |
| சனி- பொருள் வரவு, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| திங்கள்- துயர் அதிகம், தேககம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பணக்கஷ்டம். | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் விரயம், மனக் கிலேசம். | மு.ப. 10 மணி |
| சனி- செலவு அதிகம், கடன் படல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- காரியக் கேடு, மனக் கிலேசம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | மு.ப. 12 மணி |
| புதன்- வீண் விரயம், தொழில் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| சனி- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் 11 மணி |
| புதன் - கடன் சுமை, மனக் கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- வீண் விரயம், அந்நியர் பகை. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பலவித நன்மை. | மு.ப. 10 மணி |
| திங்கள்- வீண்மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- கடன் தொல்லை நீங்கும், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் நன்மை; மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்-பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| புதன்- மறைமுக எதிர்ப்பு, தொழில் கேடு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், மனக் கவலை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | மு.ப. 10 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் விரயம். | பகல் 11 மணி |
| திங்கள்- வெளியிடவாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- காரியத்தடை, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| சனி- முயற்சியில் வெற்றி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, பணவரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| திங்கள்- பொருள் பேறு, பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், கௌரம். | பி.ப. 3 மணி |
| சனி- செலவு மிகுதி, மனக் கிலேசம். | பி.ப. 2 மணி |


அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்

www.padippakam.com





உற்றவர் நாட்டவர் ஊரார்
இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்- இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும்
இல்லை.
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# மூன்று வரங்கள்



மூன்னொரு காலத்தில் ஓர் ஊரில் விறகுவெட்டி ஒருவன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அந்த விறகுவெட்டி ஒரு முன்கோபக்காரன். அவன் மனைவியோ சரியான வாய்க்காரி. தினமும் இருவரும் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஒரு நாள் விறகுவெட்டி, மரம் ஒன்றை வெட்டுவதற்காகக் காட்டுக்குப் போனான். அங்கு ஒரு பெரிய மரமொன்றைத் தெரிவு செய்து, அதை வெட்டுவதற்காக கோடரியை ஓங்கினான்.

அப்போது–

"மனிதனே! என்னை வெட்டாதே! என்னை வெட்டாதே!" என்ற குரல் கேட்டது.

இதைக்கேட்டு வியப்படைந்த விறகு வெட்டி "யார் நீ?" என்று கேட்டான்.

"நான் இந்த மரத்தில் வாழும் வன தேவதை. இந்த மரத்தை வெட்டாமல்விட்டால் நீ நினைக்கும் மூன்று வரங்களைத் தருவேன்," என்றது அந்தக் குரல்.

"உன்னை நம்பலாமா?" என்று கேட்டான் விறகுவெட்டி.

"ஆம். நீ வீட்டிற்குச் சென்றதும், நீ நினைக்கும் மூன்று வரங்களை நிறைவேற்றி வைப்பேன். வரம் பெற்றபின், இந்த மரத்திற்குக் கிட்ட வந்தால் நீ இறந்து விடுவாய்!" என்றது அந்தக் குரல்.

"மூன்று வரங்களைப் பெற்று நான் பெரிய பணக்காரனாகிவிடுவேன். பிறகெதற்கு நான் காட்டுக்கு வரவேண்டும்?" என்று விட்டு சந்தோஷத்துடன் வீடு திரும்பினான் விறகு வெட்டி.

வீட்டுக்குச் சென்றதும் மனைவியைக் கூப்பிட்டு,

"எனக்கு அகோரமாகப் பசிக்கிறது. கெதியாக சாப்பாட்டைக் கொண்டு வா!" என்றான் விறகு வெட்டி.

"நீங்கள் வருவதற்கு நேரமாகும் என்று நினைத்து, நான் இன்னமும் சமைக்க ஆரம்பிக்கவில்லை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், சற்று நேரத்தில் சமைத்து விடுகிறேன்," என்றாள் மனைவி.

'இவள் எப்போது சமைப்பது? எப்போது சாப்பிடுவது? அதற்குள் பக்கத்தில் இருக்கும் உணவு விடுதியில் ஏதாவது வாங்கி உண்ண வேண்டும்.' என்று நினைத்தான் விறகுவெட்டி.

அவன் நினைத்து முடிப்பதற்குள் பக்கத்து உணவு விடுதியில் இருந்து சுவை மிகுந்த உணவுப் பதார்த்தங்கள் அவன் முன் இருந்தன.

"ஆ! தேவதை சொன்னதைச் செய்து விட்டதே!" என்று வாய்விட்டு அலறிய விறகு வெட்டி மனைவியிடம் காட்டில் நடந்தவைகளைக் கூறினான்.

"ஏ முட்டாள் கணவனே! தேவதையிடம் ஒரு நல்ல வரமாகக் கேட்கக்கூடாதா? போயும் போயும் இதையா கேட்பது?" என்று சண்டை போட்டாள்.

விறகு வெட்டிக்கு கோபம் தலைக்கேறியது. அவன் மனைவியுடன் சண்டை போட்டான். இருப்பினும் விறகுவெட்டியின் மனைவி, அவனைத் திட்டிக்கொண்டே இருந்தாள்.

'இவள் கத்திக்கொண்டே இருக்கிறாளே, இந்தச் சாப்பாடுகளை எல்லாம் வாயில் திணித்தால்தான் சத்தம் போடமாட்டாள்' என்று விறகுவெட்டி நினைக்க, உணவுப் பதார்த்தங்கள் எல்லாம் போய் விறகுவெட்டியின் மனைவியின் வாயை அடைத்தது.

விறகுவெட்டியின் மனைவி மூச்சுத் திணறினாள்.

'அய்யய்யோ நான் கோபத்தில் நினைத்தது, நான் கேட்ட வரமாகிவிட்டதே. என் மனைவி மூச்சுத்திணறி இறந்துவிடப்போகிறாளே. அவள் வாயை அடைத்திருக்கும் உணவுப் பொருட்களை எடுக்க வேண்டும்' என நினைத்து அவளின் பக்கத்தில் சென்றான் விறகுவெட்டி.

'உணவுப் பொருட்கள் எடுக்க வேண்டும்' என்று நினைத்தவுடன், அவளின் வாயை அடைத்திருந்த உணவுப்பொருட்கள் வெளியே வந்துவிட்டன.

தேவதை கொடுத்த மூன்று வரங்களும் தன் முன்கோபத்தினாலும், மனைவியின் வாய்த்துடுக்கினாலும் வீணாகிவிட்டதே என்று வேதனைப்பட்டான் விறகுவெட்டி.

# அதிசயம்–ஆனால் உண்மை!



**நீர் வீழ்ச்சிப் பாறை:**

அவுஸ்திரேலியாவில் உள்ள ஹைடன் என்ற இடத்தில் இந்தப் பாறை அமைந்துள்ளது. இது பார்ப்பதற்கு, பிரமாண்டமான நீர்வீழ்ச்சி போல் தோற்றமளிக்கிறது.



**மான் தலை மரம்:**

டெல்சிடி என்ற இடத்தில் ஜோன் டபிள்யூ ஸ்னைடர் என்பவரின் பண்ணையில் மான் தலையைப் போன்றதொரு மரம் இருக்கிறது.



**சுழல் முகில்:**

இந்தோனேஷியாவில் மௌண்ட் ஜிரினாஜ் என்ற அணைந்த எரிமலை ஒன்று உள்ளது. சாதாரண மேகக்கூட்டம் இதன் மேல் வரும்போது அசாதாரணமாகச் சுழல்கிறது. அணைந்த எரிமலையாயினும் இதிலிருந்து வெளிவரும் வெப்பக்காற்று இதன் மேல் வரும் மேகக் கூட்டத்தைச் சுழலச் செய்கிறது.

# வாரம் ஒரு நாடு

## பெலிஸ்

**தலைநகர்**– பெல்மோபான்
**பரப்பு** – 22,965 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை** – 2.3 இலட்சம்
**மொழி** – ஆங்கிலம், ஸ்பானிஷ், கிரியோல், கிளைமொழிகள்
**சமயம்** – கிறிஸ்தவம்
**நாணயம்**– பெலிஸ் டொலர்
**எழுத்தறிவு** – 93%
**தனி நபர் வருமானம்**– 2210 டொலர்

**அமைவிடம்:**

மத்திய அமெரிக்க நாடு. கரீபியன் கடலில் கடற்கரைப்பகுதி கொண்டது. வடக்கில் மெக்ஸிக்கோவும்; மேற்கில் கௌதமாலாவும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

பிரிட்டன் 1981ல் சுதந்திரம் வழங்கியது. பெலிஸ் என்னும் பெயர் 1973ல் நடைமுறையில் வந்தது. புராதன தலைநகரான பெலிஸ் நகரம் 1961ல் ஏற்பட்ட சூறாவளியால் சின்னாபின்னமானது. 1970க்குப் பின்னர் பெல்மோபான் தலைநகராக்கப்பட்டது.



**பொருளாதாரம்:**

அன்னியச் செலாவணியின் பெரும் பகுதி விவசாயத்திலிருந்தே ஈட்டப்படுகிறது. மக்கள் தொகையில் சுமார் 90 வீதமானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். மரங்கள், எலுமிச்சை வகைப்பழங்கள் முக்கிய உற்பத்திப் பொருட்கள். தொழில் வளர்ச்சி எதுவும் இல்லை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.10.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 212
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 210

பரிசுக்குரியவர்:
கிருஷ்ணபிள்ளை ஜதார்த்தனி,
மகாவித்தியாலயம், கோட்டைக்கல்லாறு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ம.இன்பதேவி,<br>மட்/புனித சிசிலியா மகாவித்தியாலயம், மட்டக்களப்பு. | செல்வன் இராஜாராம்,<br>விவேகானந்த கல்லூரி, கொழும்பு-13. |
| ஏ.எம்.ஸாமிலா தஸ்பான்,<br>பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. | சுப்ரமணியம் நிசாந்தினி,<br>தமிழ் மத்திய மகா வித்தியாலயம், பண்டாரவளை. |
| நிரோஷன் லிங்கம்,<br>ரணபிம ரோயல் கல்லூரி, பேராதெனிய. | ம.யோகச்சந்திரன்,<br>தி/விவேகானந்தா கல்லூரி, உவர்மலை, திருகோணமலை. |
| எம்.சீ.எம்.அஜுனாஸ்,<br>மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. | வி.பிரதீபா,<br>இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |
| சி.அமலராஜா,<br>மன்/நானாட்டான் ம.வி., நானாட்டான். | மொஹமட் முர்ஷித்,<br>ஆண்டு 5B, அல்ஹம்றா வித்தியாலயம், தர்கா நகர். |

# விந்தை விலங்குகள்

ஒரு புதிய தவளையை உயிரியல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். 'ஜாப்பா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் தவளை செம்மஞ்சள் நிறத்தில் உள்ளது. இதன் நிறத்திற்கு மரபியல் குறைபாடுதான் காரணம் என்றும், இது சாதாரண தவளையைப் போன்றதுதான் என்றும் முதலில் கூறினர்.



இதன் நிறத்தைப் பார்த்துவிட்டு எதிரி உயிரிகள் இதனைக் கொல்வதில்லை என்று உயிரியல் ஆய்வாளர்கள் முன்பு கூறியிருந்தனர். ஆனால் உண்மை அதுவல்ல, இதன் உடலில் விஷம் இருப்பதால்தான் இதனை ஏனைய உயிரிகள் நெருங்குவதில்லை என்று அண்மையில் தெரிவித்துள்ளார்கள்.

இது போன்ற தவளைகள் உலகத்தில் அரிதாகவே காணப்படுகின்றன.

'ஸ்கட்' என்றால் ஏவுகணை என்று தெரியும். ஸ்கட் என்னும் நீர்வாழ் உயிரினத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கடல் மட்டத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைல் ஆழத்தில் இந்த ஸ்கட் உயிரினங்கள் வாழ்கின்றன. ஒக்டோபஸ்ஸைப் போலவே இதற்கும் 10 கைகள் உள்ளன. ஒரு அங்குல நீளத்திலிருந்து 70 அடி நீளம்வரை உள்ள ஸ்கட் உயிரினங்கள் கடல் மட்டத்திற்குக் கீழே வசிக்கின்றன.

இது தன் உடலில் இருந்து ஒரு



வினோதமான ஒளியை வெளிப்படுத்தி தனக்கு தேவையான இரையைப் பிடிக்கும். இந்த உயிரினங்களைப்பற்றி அமெரிக்கா நாட்டிலுள்ள கலிபோர்ணிய விஞ்ஞானிகள் மேலும் ஆராய்ந்து வருகிறார்கள்.

# அளவுகள்

கி.மு. 3000 ஆண்டிலேயே எகிப்தியர்கள் நீளத்தை அளக்க கையால் முழம் போடப் பழகி விட்டார்கள். முழங்கை தொடங்கி விரல்கள் வரை இந்த அளவு அடக்கம். கிரேக்க அரண்மனையில் கல் ஒன்றில் செதுக்கப்பட்ட பொதுவான முழங்கை அளவு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இந்த அளவு சரியானது தானா என்பதை மக்கள் அறியவே இந்தச் சிலை அமைக்கப்பட்டது.




ஃபிரெஞ்சுப் புரட்சி நடந்தபோது அங்கு கண்டுபிடிக்கப்பட்டதுதான் மீட்டர் அளவு முறை. வடதுருவம், பூமத்திய ரேகை இடையேயான தூரத்தை கோடி மீட்டர் என்று கணக்கெடுத்துக்கொண்டு, அந்தக் கோடியில் ஒரு பங்கு என்று மீட்டரின் அளவை அறிமுகம் செய்தார்கள்.

# முதல் பெண்கள்

உலகில் பல்வேறு துறைகளிலும் பெண்களில் முதலாவது என்ற சாதனையைப் புரிந்த பெண்களும், அவர்கள் சாதனை புரிந்த துறைகளும், சாதனை புரிந்த வருடமும், அவர்களது நாடுகள் பற்றிய விபரங்களும் பின்வருமாறு:

| பெயர் | துறை | வருடம் | நாடு |
|---|---|---|---|
| 1. எலிஸபெத் பிளக்வெல் | மருத்துவர் | 1849 | அமெரிக்கா |
| 2. லூஸி ஹொப்ஸ் | பல்வைத்தியர் | 1866 | அமெரிக்கா |
| 3. அரபெல்லா மேன்ஸ்ஃபீல்ட் | வழக்கறிஞர் | 1869 | அமெரிக்கா |
| 4. எஸ்தர் மோரிஸ் | நீதிபதி | 1876 | அமெரிக்கா |
| 5. மைலி எலிலி | விமானி | 1909 | ஃபிரான்ஸ் |
| 6. அலிஸ் ஸ்ரெப்பின்ஸ் வெல்ஸ் | பொலிஸ் | 1910 | அமெரிக்கா |
| 7. சிறிமாவோ பண்டாரநாயக்க | பிரதமர் | 1960 | இலங்கை |
| 8. வலன்டினா டெரஸ்கோவா | விண்வெளி வீராங்கனை | 1963 | முன்னாள் சோவியத்ரஷ்யா |
| 9. மரியா ஸ்டெலா பெரோன் | ஜனாதிபதி | 1974 | ஆர்ஜென்டினா |
| 10. அன்னே விண்டர் | புகையிரத ஓட்டுநர் | 1983 | இங்கிலாந்து. |

# லேசர் கதிர்கள்



சிறுவைச் சிகிச்சைகளுக்கும், கடினமான உலோகங்களை வெட்டுவதற்கும் லேசர் கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல விதங்களிலும் பயன்படுத்தப்படும் லேசர் தொடர்பான கோட்பாட்டை ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

1917ம் ஆண்டில் இந்தக் கோட்பாட்டை ஐன்ஸ்டீன் கண்டுபிடித்தார். பின்னர் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஸ்கால்வோ என்பவர் லேசர் கதிரைக் கண்டுபிடித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# உடைந்த இரவு

இரவு 18

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**சென்றவாரம்**

வந்திருப்பது பாஸ்கர்தான் என்று தெரிந்துவிட ஓடிப்போய்க் கேட்டைத் திறந்தாள்.

பாஸ்கர், பட்டாபியின் பாடியை டிஸ்போஸ் பண்ணியதை விபரிக்க முயல்கையில் மைத்ரேயி இடைமறிக்கிறாள். தினேஷ் மெட்ராஸ் ஏர்போர்ட் வந்துவிட்டதாகவும் எந்நேரமும் வீடு திரும்பலாம் என்பதால் பாஸ்கரை உடன் புறப்படுமாறும் அவள் கூற, அவன் புறப்பட்டுச் செல்கிறான்.

காரை போர்டிகோவில் நிறுத்தி நிமிர்ந்த மைத்ரேயி, வையாபுரி மாமா நின்றிருப்பதைப் பார்க்கிறாள். தினேஷ் திரும்பிவிட்டிருந்த விசயத்தைக் கூறுகிறாள். தினேஷை எதிர்பார்த்து இருவரும் போர்டிகோவில் அமர்ந்தனர்.

நேரம் வீணாகிக் கொண்டிருக்க தொலைபேசி அழைத்தது. மறுமுனையில் பொலிஸ். மைத்ரேயி அதிர்கிறாள். தினேஷ் வந்த டாக்ஸி லாரியுடன் மோதியதால் தினேஷ் ஆபத்தான நிலையில் ஹாஸ்பிடலில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் கூறவே, மைத்ரேயியும், மாமாவும், மாமியும் ஹாஸ்பிடலுக்கு விரைகின்றனர்.

தினேஷ் ஐ.ஸி. யூனிட்டில் இருப்பதாக இன்ஸ்பெக்டர் கூறிக்கொண்டிருக்க ஒரு நர்ஸ் ஓடி வருகிறாள்.

இனி...

ஓடிவந்த நர்ஸ் இன்ஸ்பெக்டரை பார்வையில் வாங்கி சட்டென்று நின்றாள். இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என்ன... சிஸ்டர்...?"

"டாக்டர் உங்களைக் கூப்பிட்டார் ஸார்..."

"பேஷண்டோட நிலைமை இப்போ எப்படி இருக்கம்மா?"

"அதைப்பத்திப் பே சத்தான் டாக்டர் கூப்பிடறார்ன்னு நினைக்கிறேன் ஸார்...."

இன்ஸ்பெக்டர் மைத்ரேயியை ஏறிட்டார்.

"ஒரு நிமிஷம் இங்கேயே நில்லுங்க... நான் போய் டாக்டரைப் பார்த்துட்டு வர்றேன்..."

"நானும் உங்க கூட வரலாமா...?"

"வேண்டாம்...! டாக்டர்கிட்ட பேசிட்டு தேவைப்பட்டா நான் உங்களைக் கூப்பிடறேன்..." சொன்ன இன்ஸ்பெக்டர் நர்ஸைப் பின் தொடர்ந்து வராந்தாவில் நடந்து ஐ.ஸி.யூனிட்டுக்குப் பக்கத்தில் இருந்த டாக்டரின் அறைக்குள் நுழைந்தார்.

டாக்டர் கவலையோடு காத்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் கேட்டார்,

"ஹௌ ஈஸ் த பேஷண்ட் டாக்டர்...?"

"ப்ளீஸ் பீ ஸீட்டட்..."

உட்கார்ந்தார். டாக்டர் பெருமூச்சொன்றை விட்டபடி சொன்னார், "நிலைமை சரியில்லை... கோமா ஸ்டேஜ்ல இருந்தாலும் பல்ஸ் வேகமா விழுந்துட்டு வருது. ராத்திரியை தாண்டறது கஷ்டம்... பேஷண்ட்டுக்கு வேண்டியவங்க வந்திருக்காங்களா...?"

"ஒய்ஃப் வந்திருக்கா..."

"இருக்கிற உண்மை நிலையை சொல்லிடுங்க. வீணா ஃபால்ஸ் ஹோப் கொடுக்க வேண்டாம்..."

"நிச்சயமா ஆள் போயிடுவான்னு சொல்றீங்களா?"

"ஆல் மோஸ்ட்..."

"டாக்டர்... அந்தப் பொண்ணைப் பார்த்தா பாவமாயிருக்கு. இப்போதைக்கு எதுவும் சொல்ல வேண்டாம்... நிலைமை ரொம்பவும் மோசமாகும்போது சொல்லிக்கலாம்...."

"உங்க இஷ்டம்...." டாக்டர் தோள்களைக் குலுக்கிக் கொண்டு எழுந்து கொள்ள, இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்துக் கொண்டு அறையிலிருந்து வெளிப்பட்டு வராந்தாவுக்கு வந்தார்.

மைத்ரேயியும், வையாபுரி மாமாவும் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் ஆர்வமாய் நெருங்கினார்கள்.

"ஸார்... அவருக்கு....?"



"இப்போதைக்கு பயப்படற மாதிரி எதுவும் இல்லேம்மா...! ஆனா டாக்டர் நாளைக்குக் காலைல ஆறுமணி வரைக்கும் கெடு வெச்சிருக்கார். அதுக்கு பிறகுதா்ன் எதுவுமே சொல்ல முடியும்..."

"இன்ஸ்பெக்டர்" வையாபுரி குறுக்கிட்டார்.

"தினேஷை வேறு ஒரு நல்ல ஹாஸ்பிடலுக்கு கொண்டு போய் ட்ரீட்மெண்ட் கொடுக்கலாமா...?"

"இந்த நிலைமையில பேஷண்ட்டை மூவ் பண்றது சரியில்லை. அப்படியே மூவ் பண்ணி வேற ஒரு ஹாஸ்பிடலுக்கு கொண்டு போனாலும் இந்த ஹாஸ்பிடலில் இப்ப குடுத்துட்டிருக்கிற இதே ட்ரீட்மெண்ட்டைத் தான் அங்கேயும் குடுப்பாங்க.... வேணும்னா உங்க திருப்திக்காக வேற ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களை இங்கேயே வரவழைச்சுக் காட்டலாம்."

வையாபுரி, மைத்ரேயியை பார்த்தார்.

"என்னம்மா... உனக்குத்தான் இந்த மெட்ராஸ்ல இருக்கிற ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களை தெரியும். ஃபோன் பண்ணி வரவழைம்மா.."

மைத்ரேயி வேண்டுமென்றே கைகளைப் பிசைந்தாள்.

"இந்த ராத்திரி நேரத்துல எந்த டாக்டர் கிடைப்பார்...? கூப்பிட்டாலும் வர்றது சந்தேகம்தான்.... வீட்ல இருந்துகிட்டே இல்லேன்னு சொல்லிடுவாங்க... எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை..."

இன்ஸ்பெக்டர் கேட்டார், "உங்க ஃபேமிலி டாக்டர் யாரு...?"

"ராமபத்ரன்..."

"அடையார்ல இருக்காரே அவரா?"

"ஆமா..."

"அவருக்கு ஃபோன் பண்ணி விஷயத்தை சொன்னா அவரே மத்த ஃபெஷலிஸ்ட் டாக்டர்களுக்கு ஏற்பாடு பண்ணிடுவார். அவரோட ஃபோன் நெம்பரைக் கொடுங்க... நான் ஃபோன் பண்ணி மெஸேஜை கன்வே பண்ணிடறேன்..."

மைத்ரேயி வேறு வழியில்லாமல் தன் குடும்ப டாக்டர் ராமபத்ரனின் டெலிஃபோன் நெம்பரைச் சொல்ல, அதைக் குறித்துக் கொண்டு அவசர அவசரமாய் வராந்தாவின் கோடியில் இருந்த டெலிஃபோன் அறையை நோக்கிப் போனார்.

வெள்ளைக் கோட்டை தோளில் போட்டுக் கொண்டு தளர்வாய் வெளியேறிக் கொண்டிருந்த டாக்டர் ஒருவரிடம் ஓடினார் வையாபுரி.

"தினேஷை உள்ளே போய் பார்க்கலாங்களா?"

"ம்... போய்ப் பாருங்க..."

வையாபுரி, மைத்ரேயியைக் கூப்பிட்டார், "வாம்மா! தினேஷை போய்ப் பார்த்துட்டு வரலாம்..."



மைத்ரேயி கண்களில் போலிக் கண்ணீர் காட்டினாள்.

"வேண்டாம்... மாமா... அவரை அந்தக் கோலத்துல பார்க்க எனக்கு தைரியம் கிடையாது. மரக்கட்டை மாதிரி கிடக்கிற அவரைப் பார்த்தா என் நெஞ்சே வெடிச்சிடும்... அவருக்கு எப்போ சுயநினைவு திரும்பி என்னைப் பார்த்து பேசக்கூடிய நிலைமையில் இருப்பாரோ... அப்பத்தான் அவரைப் பார்ப்பேன்.. நீங்களும் அத்தையும் போய்ப் பார்த்துட்டு வாங்க..."

அவர்கள் கிளம்பிப் போக,

மைத்ரேயி அங்கிருந்த பாலிவினைல் நாற்காலியொன்றுக்கு உடம்பைக் கொடுத்து சாய்ந்தாள்..

மனசுக்குள் சந்தோஷம் கொஞ்சம் கொஞ்சமாய் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

'அவருக்கு நேர்ந்து இருக்கிற இந்த விபத்து ஒரு பெரிய வரப்பிரசாதம். டாக்டர் வைச்சிருக்கிற கெடுவுக்குள்ளே போய் சேர்ந்துட்டா எனக்கும் பாஸ்கருக்கும் அவரைத் தீர்த்துக்கட்டற வேலை மிச்சம்!'

மைத்ரேயி யோசிப்பில் இருக்கும்போதே,

பக்க அறையில் இரண்டு நர்ஸ்கள் பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டது.

"பொண்ணைப் பார்த்தியா? சினிமா ஹீரோயின் மாதிரி அழகாயிருக்கா..."

"பாவம்...! அழகாயிருந்து என்ன பிரயோஜனம்? வாழ்க்கையில கொடுப்பினை இல்லையே...?"

"ஆக்ஸிடெண்ட் கேஸ் போயிடும்னு சொல்றியா...?"

"நான் சொல்றது என்ன...? சீஃப் டாக்டரே ரெண்டு கையையும் விரிச்சு ஒட்டு மொத்தமா உதட்டை பிதுக்கிட்டு போயிட்டார். நாளைக்கு காலையில போஸ்ட்மார்ட்டத்துக்கு போக வேண்டிய கேஸ் அது...."

"அந்தப் பொண்ணு எப்படித்தான் தாங்கிக்கப் போறாளோ? நினைச்சுப் பார்க்கும் போதே மனசுக்கு கஷ்டமாயிருக்கு..."

"பணக்கார இடம் மாதிரி தெரியுது... பணக்காரங்களோட துக்கமெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்."...

"அப்படி சொல்லாதே...! எல்லாப் பணக்காரங்களும் ஒரே மாதிரி இருக்க மாட்டாங்க..."

மேற்கொண்டு பேச்சைக் கேட்கும் முன் இன்ஸ்பெக்டர் டெலிஃபோன் பேசிவிட்டு வேகவேகமாய் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த மைத்ரேயி எழுந்து நின்றாள்.

இன்ஸ்பெக்டர் பக்கத்தில் வந்து சொன்னார்.

"ஃபோன் பண்ணிட்டேன்..."

"டாக்டர் பேசினாரா...?"

"ஆமா...."

"என்ன சொன்னார்?"

"புறப்பட்டு வர்றேன்னு சொன்னார்..."

"இன்ஸ்பெக்டர்..."

"ம்..."

"என் கணவரோட நிலைமையைப் பத்தி டாக்டர்லோட உண்மையான ரிப்போர்ட் என்ன...?"

"நான்தான் சொன்னேனே....? நாளைக்கு காலையில ஆறு மணிவரைக்கும் கெடு வெச்சிருக்காங்க..."

"பிழைச்சிடுவாரா...?"

"ஸாரி டு ஸே திஸ்....! நீங்க எதுக்கும் ரெடியா இருக்கணும்... ஃபேட்டல் ஆக்ஸிடெண்ட். டாக்டர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்க... அது எந்த அளவுக்கு பலன் கொடுக்கும்ன்னு தெரியாது. நாளைக்குக் காலையில உங்க கணவர் கண் விழிச்சுப் பார்க்கலாம். பார்க்காமலே போனாலும்...

"சொல்லாதீங்த... இன்ஸ்பெக்டர்" வரவழைத்துக் கொண்ட அதிர்ச்சியோடு காதுகளை பொத்திக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டர் பெருமூச்சுவிட்டு விரக்தியாய் புன்னகைத்தார். "ஐ விஷ் ஹிம் ஏ ஸ்பீடி ரெகவரி... நான் இப்போ ஸ்டேஷனுக்கு போறேன். மிஸஸ் மைத்ரேயி.. உங்க டாக்டர் எப்படியும் ஒரு அரைமணி நேரத்துக்குள்ள வந்துடுவார். மெடிகலி அவர் பண்ண வேண்டியதை பண்ணட்டும்... நானும் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை உங்களை ஃபோன் மூலமா காண்டாக்ட் பண்ணிக்கறேன்."

மைத்ரேயி தலையசைக்க,

இன்ஸ்பெக்டர் பூட்ஸ் சத்தத்தோடு வராந்தாவில் நடந்து மறைந்தார்.

நாற்காலிக்கு வந்து மறுபடியும் சாய்ந்து உட்கார்ந்தாள். பக்கத்து அறையில் நர்ஸ்கள் இப்போது சசிகலா கொள்ளையடித்த, சொத்துக்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன இருந்தாலும் இப்படியா வாங்கிப் போடறது? ஒரு வரைமுறை வேண்டாம்...? என்னமோ கடை வீதிக்குப் போய் காய்கறி வாங்கற மாதிரி... கண்ல பார்த்த சொத்துக்களையெல்லாம்...."

பேச்சுக் கேட்டுக் கொண்டிருக்க,

சற்றுத் தொலைவில் இருந்து வெளிப்பட்ட ஜன்னலில் ஒரு முகம் திடீரென்று முளைத்து மைத்ரேயியை கையசைத்துக் கூப்பிட்டது.

மைத்ரேயி திடுக்கிட்டாள்.

'யாரது?'

உற்றுப் பார்த்தாள்.

இருட்டில் முகம் பிடிபடவில்லை.

உருவம் கையைமட்டும் அசைத்துக் கொண்டேயிருந்தது.

மைத்ரேயி எழுந்தாள்.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு ஜன்னலை நோக்கி மெதுவாய் நடந்தாள்.

ஜன்னலை நெருங்க நெருங்க,

அந்த முகம் பார்வைக்கு பிடிபட்டது: பாஸ்கர்.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. கோணேஸ்வரன்,
வயது: 30
முகவரி: 65, தபாற் கந்தோர் வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: சினிமா, கதைப்புத்தகம்.



பெயர்: முகமட் பஸால்,
வயது: 30
முகவரி:329, நாகலகம வீதி, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். ஜோன்சன் கெனடி,
வயது: 23
முகவரி: RUE DELA DOUX-9, 2800 DELEMONT, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: ஆர். சிவானந்தன்,
வயது: 26
முகவரி:42, குடியிருப்பு, வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எல். மர்சூக்,
வயது: 24
முகவரி:78, களப்புக்கட்டு, பாக்கியவத்தை, பொத்துவில்-3.
பொழுது போக்கு: ரீ.வி., பேனாநட்பு.



பெயர்: எஸ். முகமட் அலி,
வயது: 22
முகவரி: GAZI CAKABI MOSJED AL KHIRAN MENA AL,ZOUR, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: தில்மி தௌபீக்,
வயது: 21
முகவரி: பெரிய கிண்ணியா, கிண்ணியா-4.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், கிரிக்கெட்.

பெயர்: எல். நவாஸ்,
வயது: 20
முகவரி:71, பிரதான வீதி, தங்காலை.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா.

பெயர்: ரி. பாலசுப்பிரமணியம்,
வயது: 20
முகவரி: வெதமுள்ள தோட்டம், இறம்பொடை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஜி. யோகராஜ்,
வயது: 20
முகவரி:213, ஓரேஞ்ச் ஃபீல்ட், இறக்குவானை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: என். சிவகுமார்,
வயது: 26
முகவரி: 90, PAISLEY PLVED WEST, MISSISSAUGA, ONTARIO L5 B IE2, CANADA.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். ஜெமீல்,
வயது: 26
முகவரி:91/ஏ, கல்யாண ரோட், சாய்ந்தமருது-04.
பொழுது போக்கு: ரீ.வி., கிரிக்கெட்.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 30

**பிரபஞ்சன்**

**இதுவரை**

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார். சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது. சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்து கோரி மனுத்தாக்கல் செய்கிறாள்.

**இனி...**

உனக்கு நோய் வந்தால் நீதானே மருந்து சாப்பிட வேண்டும். உன் மானத்தை நீதானே மூட வேண்டும்?

இயற்கையே மனிதர்களை அப்படித்தான் படைத்திருக்கிறது. அப்படி இருக்கையில், நீ இன்னொரு துணை வேண்டும் என்றெல்லாம் ஏன் யோசிக்கிறாய்? நூறு சதவிகிதம் ஒரு ஆணும் பெண்ணும் ஒருத்தருக்கு ஒருத்தர் என்று வாழ முடியுமா? அது சாத்தியம் தானா? கணவனாக இருந்தால் என்ன, காதலனாக இருந்தால் என்ன, அவன் இன்னொரு மனிதன்தானே?' என்றெல்லாம் நினைப்புத் தோன்றி தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள் சுமதி.

அலுவலகத்தில் இருக்கையில் அவள் வழக்கறிஞர் சேதுராமன் அவளுக்குப் ஃபோன் செய்தார்.

"என்ன சார்?" என்றாள் சுமதி.

"நாளை உங்கள் விவாகரத்து வழக்கு வருகிறது. உங்களுக்கு ஞாபகப்படுத்துவதற்குத்தான் கூப்பிட்டேன்."

"கணேசன் வழக்கறிஞருடன் பேசுவதாகச் சொன்னீர்களே, பேசினீர்களா, சார்?"

"பேசினேன். கணேசன் ரொம்ப மூர்க்கமாகத்தான் இருக்கிறான். உங்களுக்கும் பீட்டருக்கும் உடம்பு ரீதியான தொடர்பு இருப்பதாக கோர்ட்டில் நிரூபிக்கப் போகிறானாம்."

"நிரூபித்தால், அவனுக்கு நோபெல் பரிசு கிடைக்குமா? என்ன மானம் கெட்ட மனிதன்! தன் பொண்டாட்டி இன்னொருத்தனோடு தொடர்பு கொண்டாள் என்று நிரூபிக்க ஒரு மனிதன் அலைவது எவ்வளவு இழிவான காரியம்!"

"அதுதான் தெரிந்த விஷயம்தானே. ஆணோ பெண்ணோ தங்களுக்குள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கோர்ட்டுக்கு வந்தபின், அவனோ, அவளோ எப்படிப் போனால் யாருக்கென்ன? அடிப்படையில் மனிதர்களுக்கு நாகரிகம் செத்துப் போய் விட்டது. எந்த நாகரிகமான சமுதாயத்திலும் நீதிமன்றத்துக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடம் இல்லை என்பது சரிதானே?"

"சார். என் சினேகிதி வசந்தியின் சினேகிதர் அந்தப் பீட்டர். ரொம்பப் பெரிய படிப்பாளி. ரொம்பப் பெரிய ரசிகர். அவருடன் பேசுவது கலைக்களஞ்சியம் படிப்பது மாதிரி சார். அந்தப் படிப்புக்கும் அறிவுக்கும்தான், அவருடன் நான் பழகுகிறேன். அதாவது இந்த ஆளுக்கு எந்த எந்தக் குணங்கள் இல்லையோ, அந்தக் குணங்களுக்காக. இந்த ஆள் நான் படிப்பதையே வெறுத்தது. நல்ல சங்கீதம் கேட்பதைத் தடை செய்தது."

"அதுதான் எனக்குத் தெரியுமேம்மா. அதை விடுங்கள். நாளைக் காலை ஏழு மணிக்கெல்லாம் என் ஆபீஸுக்கு வந்து விடுங்கள். டிஸ்கஷன் வைத்துக்கொள்வோம்."

வழக்கறிஞர் சொன்னபடி அடுத்த நாள் காலை ஏழு மணிக்கெல்லாம் சுமதி அவர் அலுவலகத்தில் இருந்தாள்.

அவர் சொன்னார்:

"நீங்கள் பீட்டருக்கு எழுதிய ஒரு கடிதமும், அவர் உங்களுக்கு எழுதிய ஒரு கடிதமும் கணேசனுக்குக் கிடைத்து விட்டன. அதைக் கோர்ட்டில் காட்டப் போகிறாராம் கணேசன்."

"அவன் கிடக்கிறான் முட்டாள். காட்டட்டுமே. அது என்ன காதல் கடிதமா? காதல் கடிதமாகவே இருக்கட்டுமே, என்ன நடக்கும்?"

"காதல் என்று நிரூபிக்கப்பட்டால் உங்கள் உத்தியோகத்துக்கு ஆபத்து வரலாம்..."

"கணேசனுக்கு வேண்டுமானால் இந்த உத்தியோகம் இல்லையென்றால், சோற்றுக்கு இல்லாமல் செத்துப் போவான். என்னால் நாலு வீட்டுக்குப் பத்துப் பாத்திரம் தேய்த்துக் கூட வாழ்ந்துவிட முடியும்."

"இந்த மாதிரியெல்லாம் கோர்ட்டில் பேசாதீர்கள். நான் சொல்கிறபடி மட்டும் பேசப்பாருங்கள்." என்றார் வழக்கறிஞர்.

அது குடும்ப வழக்கு மன்றம் ஆகையாலும், கேட்டுக் கொண்டதன் காரணமாகவும், நீதிபதியின் அறைக்குள்ளேயே அந்த வழக்கு நடைபெற்றது.

"சார்.... என்னுடன் இருந்தபோது, இவள் அந்தப் பீட்டருடன் தொடர்பு கொண்டாள் சார். இவள் ஒரு நடத்தை கெட்டவள் சார்..." என்றான் கணேசன் நீதிபதியைப் பார்த்து.

சுமதி "நான் அதை மறுக்கிறேன் சார். அவர் சொல்வது பொய் சார்!" என்றாள்.

கணேசன் மூர்க்கமாக இருந்தான்.

"அவள் ஒரு தேவடியாள் சார்." என்றான் மூக்கு விடைக்க.

அவள் சிரித்தபடி நீதிபதியைப் பார்த்துச் சொன்னாள்.

"சார்.... நான் நடத்தை கெட்டவள் இல்லை. அப்படி நடத்தை கெட்டவள் என்று வாதத்துக்கு வைத்துக் கொள்வோம். என்னை அப்படி ஆக்கியவன் இந்த முட்டாள்தான். ஒரு பெண் சீரழிய, அவள் கணவன் தானே முதல் காரணம்! அப்படிப் பார்த்தால், இவன் தான் நான் சீரழியக் காரணம். அவன் ஒப்புக் கொள்கிறானா என்று கேளுங்கள்."

கணேசன் கொதித்தெழுந்தான்.

"ஒரு ஆம்பிளையை அவன் இவன் என்று பேசுபவள் ஒழுக்கமானவள்தானா சார்?"

"ஒரு பெண்ணை அவள் இவள் என்று பேசுபவன் ஒழுக்கமானவனா, 'சார்?"

நீதிபதி சொன்னார்!

"சுமதி சொல்வது சரிதான் கணேசன். நீங்கள் சுமதியை மரியாதைக்குறைவாகப் பேசக்கூடாது."

நீதிபதியின் வார்த்தைகள் கணேசனைச் சுட்டிருக்க வேண்டும்.

அவன் சொன்னான்,

"சார்....இந்தப் பெண்ணுக்கும் பீட்டர் என்பவனுக்கும் தொடர்பு இருக்கு சார்."

சுமதி நீதிபதியைப் பார்த்துச் சொன்னாள்:

"ஆமாம் சார். எனக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கத்தான் இருக்கு. அதுக்கு இந்த மூடன் என்ன சொல்லப் போகிறான்?"

நீதிமன்றம் ஸ்தம்பித்தது.

☆☆☆

ஒரு நாள் காலை சுமார் ஐம்பது வயதான பெண்மணி ஒருத்தி கையில் துணி மூட்டையுடன் வந்து கதவைத் தட்டினாள்.

"யாரு?"

"நான்தான் பாகீரதி."

"எனக்குத் தெரியலையே!"

"நான் உன் அம்மாவுக்கு ஒரு வகையில் தங்கைமுறை. பாம்பேயில் என்னைக் கட்டிக்கொடுத்தது. வீட்டுக்காரர் கொஞ்சம் முசுடு. எந்த உறவுக்கார நல்லதுக்கும் கெட்டதுக்கும் போகக் கூடாது என்று என்னைத் தடுத்துவிட்டார். அதனால்தான் உன்னைப் பார்க்கவே முடியாமல் போய்விட்டது. என் மகளைப் போல நீ. தனியாகக் கிடந்து கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறாய் அல்லவா? அதனால்தான் உன்னைப் பார்த்து, உன்னுடன் துணையாகத் தங்கியிருக்கலாம் என்று வந்தேன்."

சுமதிக்கு ஒரு பலவீனம் உண்டு. கெட்டுப்போகிறவர்களுக்கே உரிய பலவீனம். யாரையும் முகத்துக்கு நேரே மறுத்துச்சொல்ல முடியாத பலவீனம். வாழ்க்கையில் அதனால் அவளுக்கு ஏற்பட்ட சோதனைகளுக்கு அளவில்லைதான். எனினும் அது தொட்டில் குணம்; சுடுகாடுவரை நீளும். 'நான் உங்களைப் பார்த்ததே இல்லையே. நீங்கள் எனக்கு உறவு என்று எப்படி ஏற்றுக் கொள்வது?' என்றே அவள் சொல்ல வேண்டும்.

"உள்ளே வாருங்களேன்!" என்றாள்.

அந்த அம்மாள் உள்ளே வந்து, துணிப் பொட்டலத்தை டீப்பாயில் வைத்துவிட்டு, சோபாவில் அமர்ந்து கொண்டாள், புது வேலைக்காரப் பெண் சுசீலாவைக் கூப்பிட்டு அந்த அம்மாளுக்குக் காபி கொடுக்கச் சொன்னாள் சுமதி.



காபியைக் கொண்டு வந்த சுசீலாவைப் பார்த்து அந்த அம்மாள் "யார் இவ வேலைக்காரியா?" என்றாள்.

"ஆமா."

"என்ன சம்பளம்?"

சுமதிக்கு மனம் சங்கடப்பட்டது. மனிதரைப் பார்த்து முதல் பார்வையில் அவள் சம்பளத் தகுதியை, பொருளாதாரத் தகுதியை அளக்கும் தமிழ்த்தரம் தமிழர்களை விட்டு என்று போகும் என்று இருந்தது அவளுக்கு. ஆனாலும் சொன்னாள்.

"சாப்பாடு போட்டு அத்தனை சம்பளமா? அவளை வேலையை விட்டு நிறுத்திடேன். வீட்டு வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்...."

"இருக்கட்டுமே. நான் ஒருத்திதானே! இன்னொரு ஜீவனும், என்னோடு சாப்பிட்டுவிட்டுப் போகட்டுமே! அதனால் என்ன பெரிதாக நஷ்டம் வந்துவிடப் போகிறது?"

"சிறு துளி பெருவெள்ளம். வருகிறவளுக்கும் போகிறவளுக்கும் வாரிக் கொடுக்க இது என்ன பிள்ளை இல்லாத சொத்தா?"

"போகட்டும் விடுங்கள்."

சுமதி குளித்துவிட்டு அலுவலகம் புறப்படும்போது அம்மாள் கேட்டாள்,

"நெற்றியில் ஏன் பொட்டைக் காணோம்?"

"கணேசனை விட்டுப் பிரிந்து வந்த பிறகு நான் பொட்டுவைத்துக்கொள்வதை விட்டுவிட்டேன்."

"புருஷன் உயிருடன் இருக்கும் போது..."

"எவன் புருஷன்? அந்தக் குடிகார மனுஷனா? அவனுக்காக நான் எதற்குப் பொட்டுவைப்பது? எனக்கு எப்போதுமே பொட்டு வைத்துக் கொள்ளவும், பூ வைத்துக் கொள்ளவும் பிடிக்காது."

"என்ன இருந்தாலும் புருஷன் அல்லவா? அது இல்லாமலா போய் விடும்?"

"இல்லாமல்தான் போய்விடும். பரஸ்பரம் மனசுக்குள் மரியாதை இல்லாத இடத்தில் புருஷன் என்ன, மனைவி என்ன?"

அவள் கிளம்பினாள்.

கார் புறப்படும்வரை காரின் அருகில் நின்றிருந்த அம்மாள் பிறகு உள்ளே வந்தார்.

"டீ சுசீலா" என்று சப்தம் போட்டுக் கூப்பிட்டாள் அவள்.

"ஏன்?"

"என்ன இவள் பந்தயக் குதிரை மாதிரி இருந்து கொண்டு புருஷன் வேண்டாம் என்கிறாளே, எவனாவது இங்கு வந்து போகிறானா?"

"சேச்சே. அப்படியெல்லாம் நினைச்சாலே வாய் அழுகிப் போயிடும்?"

"சர்த்தான் போ! நான் எத்தனையோ பேரைப் பார்த்துட்டேன்."

நகரப் போனவளை இழுத்து நிறுத்தி அம்மாள் சொன்னாள்,

"புது டிக்காஷன் போட்டுக் காப்பி கொண்டு வா. போ..."

"காலைக் காபிக்குப் பிறகு இங்கு யாரும் காபி சாப்பிடுவதில்லை பெரியம்மா..."

"எவ போட்ட சட்டம்டி அது?"

"அம்மா போட்ட சட்டம்தாங்க."

"சர்தான் போடி, பெரிய இவளாட்டம்! வாழா வெட்டிக்கு என்ன அதிகாரம்? போடு காபி. அவளுக்கு என்ன தெரிஞ்சா போயிடும்?"

"தெரியுமோ, தெரியாதோ, அம்மா வார்த்தையை நான் மீறமாட்டேங்க..."

வேலைக்காரியின் அந்த வார்த்தை அவளை உறுத்திக் கொண்டேயிருந்திருக்க வேண்டும். சுமதி வந்தவுடன் தான் அவளைப் பற்றிச் சொல்லியவற்றை சுசீலா பற்ற வைத்துவிடக்கூடும் என்ற அச்சம் அம்மாளுக்கு ஏற்பட்டது. ஆகவே தன்னைத் தயார் செய்து 'கொண்டாள்.

சுமதி அலுவலகத்தை விட்டு வந்தவுடன் அந்த அம்மாள் சொன்னாள்:

"கொஞ்சம் இந்தப் பக்கம் வர்றியா?" என்று சுமதியை அறைப் பக்கம் அழைத்துச் சென்றாள்.

(தொடர்ந்து வரும்)

# பொன்னாடை

**கனகசபை தேவகடாட்சம்**

**அவரால் காப்பாற்ற முடிந்தது நான்கு உயிர்களையும் அந்த சூட்கேஸ் பெட்டியையும்தான்!**

படுத்திருந்தபடியே தனது வலக்கரத்தால் அந்த 'சூட்கேசைத்' தொட்டுப் பார்த்துக் கொள்கிறார் பிறைசூடி: 'இந்த அகதிமுகாம் வாழ்விற்குள் முடங்கி இம்மாதத்தோடு பதினான்கு வருடங்கள் வெற்றிகரமாக முடிகிறது.'

மனதிற்குள் ஏக்கத்துடன் எண்ணியவை ஒரு நீண்ட பெருமூச்சாக வெளியேறியது.

'பிறைசூடி' என்ற பெயர்– தாமாகவே சூடிக்கொண்ட புனைபெயர்.

இப்பெயரில் வெளியாகும் சிறு கதைகளுக்கும் கவிதைகளுக்கும் எத்தனை மவுசுதான் இருந்தது! பரந்த இப் பூவுலகின் நெளிவு சுளிவுகளை, கவிதைகளுக்குள்ளும் கதைகளுக்குள்ளும் இரசனைகுன்றாது, பல்வேறுபட்ட கோணங்களில் அவரால் எப்படித்தான் அடைக்க முடிந்தது?

தனது ஆக்கங்கள் பிரசுரமானதும் அது பற்றிய விமர்சனங்கள் மடல் மூலம் கிடைப்பதில் எத்தனை பெருமையிருந்தது பிறைசூடிக்கு!

ஒரு சராசரி கலைப்படைப்பாளியின் மன உணர்வு– அதாவது சமூகமட்டத்தில் உயர்ச்சியாய் அடையாளபடுத்தப்படும் போது உண்டாகும் அந்த உவகை உணர்வு இருக்கிறதே– அது விலைமதிப்பற்றது– நிரந்தரமானது.

பிறைசூடியின் இந்த உயர்ந்த வாழ்க்கையை திசை திருப்பியது 1983ம் ஆண்டு ஆடிமாதம்– அதாவது எம்மவர் என்றும் ஆவணத்திரட்டாக வைத்திருக்கும் 'கறுப்பு ஜூலை!'

அந்த அகோர வன்செயலின்போது அவரால் காப்பாற்ற முடிந்தது. தன் குடும்பத்தின் நான்கு உயிர்களையும், 'சூட்கேஸ்' பெட்டியையும்தான்.

அன்றிலிருந்து அவரால் பேனாவிற்கு ஓய்வு கொடுக்க முடிந்ததே தவிர, அவரின் எழுச்சிமிகு சிந்தனைகளுக்கல்ல.

பதினான்கு வருடங்களைப் பூர்த்தி செய்தமையால் அவ்வகதிகள் முகாமில் நிரந்தர அங்கத்தவராக பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டார் பிறைசூடி. இதற்குள் எத்தனை மாற்றங்கள்! தன் இரு புதல்வர்களில் ஒருவன் சென்ற திசை புரியாது– திசையறிந்து தேடியும் திரும்பாது கை விட்ட நிலை அது!

மற்றவன்,

அகதி அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டு கடல் கடந்தவன். பார்சல் அனுப்புவது போல் பெண் அனுப்பித் திருமணம் செய்ததோடு, பிறைசூடியின் குடும்பத் தொடர்பையும் அறுத்துக் கொண்டவன்.

இவை அனைத்தும் வழமையானவைகள். இதில் புதுமையும் இல்லை. அதனால் பிறைசூடிக்கு தாக்கமும் இல்லை.

ஆனால்,

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அவரின் மனைவி சடுதியாக மரணமடைந்தது...!

மரணம் பொதுவானது; அது பெரிதாகப் படவில்லை; வெற்றிகளுக்கெல்லாம் படிக்கட்டாக வாழ்ந்தவளை– தான் பிறந்து, தவழ்ந்து, நடமாடிய அந்த சொந்த மண்ணில், அவ்வுடலை அடக்கம் செய்ய முடியவில்லையே.... என்ற ஏக்கமும் தாக்கமும் வெகுவாகப் பிறைசூடியை வியாபித்திருந்தது. என்ன செய்வது?

★★★

மெதுவாகச் சூட்கேசைத் திறந்து உள்ளே பார்க்கிறார் பிறைசூடி.

அதனுள்ளே அவர் பொக்கிஷப் படுத்தியிருக்கும் அவரின் ஆக்கங்களில் நோட்டம் விடுகிறார்.

கடந்த கால நினைவுகளை மீட்டும்போது தான் ஒரு மனிதன் இயல்பாகவே தன்னை மறக்கிறான்.

எத்தனை இரணமான தடங்கள்....!

எத்தனை சுவாரசியமான ஆக்கங்கள்...!

தனக்குள் மட்டும்தான் ஆனந்திக்க முடிகிறது. இப்போதெல்லாம் பிறைசூடி என்ற சிருஷ்டிப்பாளர் ஒருவர் இருந்ததோ, இருப்பதோ மக்களுக்குத் தெரியாது.

காலத்திற்குக் காலம் மக்கள் புதுமையை நாடுவது இயல்பு. ஆனால், பழமைகள் தூக்கி எறியப்பட்ட செல்லாக்காசாகக் கிடப்பதைத்தான் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த ஆதங்கத்தில் மூழ்கி படுக்கையில் சாய்ந்திருந்த பிறைசூடியின் நினைவுகளை திசை மாற்றியது அந்தக் குரல்.

"பிறைசூடி அய்யா வணக்கம்! உங்களிட்டத்தான் வந்தனான்." படுக்கையில் இருந்து



மெதுவாக எழும்பி பாயில் உட்கார்ந்தவாறு வந்தவர்களை உற்று நோக்கினார். வயோதிபமும், பார்வைக்குறைவும் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

"என்னாலை என்னப்பா ஆகணும்?" ஆறுதலாக வினவினார் பிறைசூடி.

"ஒண்டுமில்ல வாற இருபதாம் திகதி தியாகிகளிட நினைவு தினம். அதில பலருக்கு பொன்னாடை போர்த்த இருக்கிறம். எழுத்தாளர் என்ற வகையில உங்களுக்கும் -தான்!" வந்தவர்கள் ஏதோ சலுகை செய்பவர்கள் போன்று பேசினார்கள்; சென்றார்கள்.

பிறைசூடிக்கு புரிந்துவிட்டது. தேர்தல் காலம் அண்மித்துவிட்டதென! தன் முதுகு ஓர் அரசியல் மேடையாகப் போகிறது. இருப்பினும் உள்ளூர ஒரு குதூகலம். அந்திம காலத்திலாவது எழுத்தாளனுக்குரிய கௌரவம் கிடைத்திருக்கிறதே!

★★★

இருபதாம் திகதி

வாகனத்தில் வந்திறங்கிய பொன்னாடைக்குழு திகைத்து நின்றது. அந்த அகதிகள் முகாமில்– பிறைசூடியின் இருப்பிடத்தைச் சுற்றிக் கூட்டம். அதில் ஒருவரின் குரல்கள் மிகத் தெளிவாக பொன்னாடைக் குழுவின் செவிகளில் விழுந்தன.

"சும்மா கிடந்த மனுசனுக்கு பொன்னாடை ஆசை உண்டாக்கிவிட தலைகால் புரியாமல் சந்தோசப்பட்டு இருதயம் வெடிச்சுப் போயிற்று."

"நாம கிடக்கிற கெடக்குள்ள இதெல்லாம் தேவதானா? அவருக்கும் இதெல்லாம் பொருத்தமில்லை எண்டுதான் அந்த ஆண்டவனும் அழைச்சிட்டார் போல."

குழு நழுவுகிறது.

இப்போது பிறைசூடியின் உடல் துணியால் போர்க்கப்படுகிறது. அது பொன்னாடை அல்ல. அகதிகளின் கூட்டுறவுப் பரிசு.

தலையை மூடினால் கால் தெரியும். கால்வரை மூடினால் தலை தெரியும். எம்மவர் வாழ்க்கை நிலை போன்று.



படிப்பகம்

www.padippakam.com

# கிரிக்கெட்

அறையின் மூலையில் இருந்த அலமாரியை மரகதம் திறந்தாள். அது அவள் கணவன் சாரங்கனுடையது. பொன்னாடைகள், விருதுகள் பாராட்டுப் பத்திரங்கள், வாழ்த்து மடல்கள் என்றிப்படி அலமாரித் தட்டுக்களை அலங்கரித்தன.

"மரகதம் நீ குடுத்துவச்சவ; பிரபல எழுத்தாளர் சாரங்கனின் மனைவி என்று சொல்றப்போ உனக்கு எவ்வளவு பெருமை?" மரகதத்தின் காதில் அவள் கணவன் அடிக்கடி கிசுகிசுப்பது இப்போதும் நிஜமாகக் கேட்பதுபோல் இருந்தது. அவள் முகம் அனிச்சம் பூவாய் வாடியது.

'இந்தப்புகழும் பொன்னாடைகளும் என் கணவரைக் காப்பாற்றக் கொஞ்சமும் உதவவில்லையே.' மரகதத்தின் இதயத்தில் விழுந்த கீறல்கள் கண்ணீராய் வடிந்தது. பழைய நினைவுகள் நிழலாடுவதை அவளால் தவிர்க்கமுடியவில்லை.



"அப்பா... நான் ஏ.எல். பாஸாகிட்டன் ருஏ-ருஸி. கட்டாயம் எனக்குக் கம்பஸ்ல இடம் கெடச்சிடும்." மகிழ்ச்சியில் துள்ளினாள் அந்தப் பதினெட்டு வயது மரகதம்.

"கம்பசும் வேணாம். ஒரு மண்ணும் வேணாம். றாக்கிங், ஸ்ட்ரைக் எண்டு உயிரை வாங்குவாங்க. உனக்கொரு கலியாணம் பண்ணிப்பாக்க ஆசைப்படுறேம்மா. நீ தாயில்லாதவ, காலா காலத்ல நான் என் கடமயச் செய்யணும். மாப்பிள வேறுயாருமில்ல, எஞ்ஜினியர் பிரசாந்த். ஆயுளுக்கும் உன்னக் கஷ்டப்படவிடாமக் காப்பாத்துவான்." மரகதத்தின் அப்பா சிவராம் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார்.

மரகதத்துக்குத் தூக்கிப்போட்டது. "அப்பா எனக்கு எஞ்ஜினியர் வேணாம்பா. பிரபல எழுத்தாளர் சாரங்கன ரொம்பப் பிடிக்கும். அவரிட விசிறி நான். அவர நான் பார்த்ததில்ல.. ஆனா ஒரு எழுத்தாளன முடிக்க..." மீதியைச் சொல்லிமுடிக்குமுன் அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது.

சிவராம் மகளின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை; என்றாலும் சொல்ல வேண்டியதைச் சொன்னார்: "மரகதம் உன் இஷ்டத்துக்குமாறா எதையும் நான் செய்யப் போவதில்லை. ஆனா ஒண்ணு, ஒரு எழுத்தாளன முடிச்சி, நீ வசதியா சந்தோஷமா இருப்பியோன்னு எனக்குச் சந்தேகமாருக்கு. வெறும் புகழ் வயிற்றை நிரப்பாது, ஒரு நல்லது கெட்டது வரும்போது ஒரு எழுத்தாளன் மனைவியால் என்ன பண்ணமுடியும்?" சிவராமின் பழுத்த அனுபவம் பேசியது.

அதையும் மீறிப் பிரபல எழுத்தாளர் சாரங்கனுக்கும் மரகதத்துக்கும் திருமணம் நடந்து இருபது ஆண்டுகளாகிவிட்டன. 'அன்று அப்பா சொல்லியதில் தப்பில்லையே?' என்று, ஒரு கணம் எண்ணிய மரகதம் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"அம்மா.." என்று குரல் கேட்டு அவள் நினைவுகள் நிமிஷத்தில் ஓடி ஒளிந்தன. மட்டையும் பந்துமாக ஓடிவந்தவன் மரகதத்தின் ஒரே வாரிசு மயூரன். அவன் மரகதத்தைக் கட்டிக் கொண்டான். அவன் உடல் பூராவும் வியர்வையில் குளித்திருந்தது.

"மயூரன் நீ ரியூஷன் போகல? எப்போ பார்த்தாலும் விளையாட்டுத்தானா? எக்ஸாம் நெருங்குதில்லையா? படிச்சி ஆளாகிற எண்ணம் கொஞ்சமாவது இருக்கா?" மரகதம் கேட்டாள். அவள் குரல் உடைந்தது. "ஏ.எல் பாஸாகி என்னம்மா பண்றது? எல்லாத்துக்கும் பணந்தான் தேவை. அப்பா படிச்சுப் பாஸாகினவர்தான். நாடறிந்த எழுத்தாளர், பேச்சாளர்தான், கடைசியில என்னாச்சு?

> "அப்பா எனக்கு
> எஞ்ஜினியர் மாப்பிள்ளை வேண்டாமப்பா.
> பிரபல எழுத்தாளர்
> சாரங்கனைத்தான் பிடிக்கும்!"

**ரூபராணி**

அப்பாவுக்குப் பக்கவாதம் வந்து படுக்கையில் கஷ்டப்பட்டாரே? யாரு உதவினா? நல்ல வேளை தாத்தா இருந்தப்போ அவர் தெய்வமா உதவினார். அப்பா இறந்ததும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்று பத்திரிகைகளும் வானொலியும் கவலை தெரிவிச்சதே போதுமா? அப்பாக்குக் கிடச்ச பொன்னாடைகளால் அவரப் போர்த்தக்கூட முடிஞ்சுதா? இவ்வளவு பெரிய எழுத்தாளனக் காப்பாத்தக் காசுதான் நம்மிடம் இருந்துதா?" மயூரன் உணர்ச்சிவசப்பட்ட மேடைப் பேச்சாளனாக மாறிப்போனான்.

மரகதத்தின் தலை கவிழ்ந்திருந்தது. பொட்டுப் பொட்டாய்க் கண்ணீர் உதிர்ந்தது "மயூரா முடிந்த கதைக்கு மீண்டும் ஆரம்பமா? இப்படியொரு அப்பா கிடைக்கக் குடுத்து வைக்கணும். நீ எதையும் யோசிக்காமப் படி," மரகதம் சொல்லி முடிப்பதற்கிடையில் மயூரன் "மாட்டேன்!" என்றான் உறுதியாக. மரகதம் அதிர்ச்சியில் ஆடிப் போனாள்.

"அம்மோய் அதிர்ச்சியடையாதீங்க. ஆனந்தப்படுவீங்க. இப்போ கல்வியைவிட கிரிக்கெட்டுக்கு நல்ல கிராக்கி. ஓட்டத்துக்கு நல்ல மவுசு, எவ்வளவு பெரிய படிப்பாளிக்குக் கூட இப்படியொரு மதிப்பு, வரவேற்பு இல்லேம்மா. அடேயப்பா, வீடு, கார், காணி, பூமி எல்லாமே இலவசம். உலகப் புகழ், விளம்பரம், எவ்வளவு சம்பாத்தியம் தெரியுமா? கல்வியா? விளையாட்டான்னு நான் முடிவு பண்ணிற்றன் நீ மகாராணி மாதிரி இருக்கலாம்மா. படிச்சிற்று வேல தேடி அலையிறதவிட விளையாடிற்றுப் பணக்காறனாயிடலாம்." மயூரன் சொன்ன வார்த்தைகளில் ஏதோ ஒரு உண்மை எட்டிப் பார்த்தது. ■

# விலை

**யாழ். மு.கலை**

விமலாவின் பொறுமை இழந்து கொண்டிருந்தது. கணவன் தவராஜா வேலை நேரம் முடிவடைந்து இரண்டு மணித்தியாலங்கள் கரைந்தும் இன்னும் வீட்டுக்கு வரவில்லை.

இளைய மகனுக்கு காய்ச்சல் காரணமாக உடல் கொதித்துக் கொண்டிருந்தது. அக்குழந்தைக்கு ஒரு வயது பூர்த்தியாகி சில வாரங்கள்தான் ஆகியிருந்தன.

குழந்தையை வைத்தியரிடம் எடுத்துச் செல்ல கணவனின் வருகைக்கு காத்திருந்தாள்.

தவராஜாவும் விமலாவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் தவராஜாவுக்கு வேலை இடமாற்றம் காரணமாக திருமலைக்கு வந்து வருடங்கள் இரண்டு உருண்டு போயிருந்தன.

குழந்தைகளுக்கான பனடோலை இரண்டாவது தடவையாக குழந்தைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது தவராஜா உள்ளே வந்தான். நேரம் இரவு ஒன்பது மணிக்கு மேலாகியிருந்தது.

"என்னங்க! இவ்வளவு நேரமும் எங்கை போய்வாறியள்? பிள்ளைக்குக் காய்ச்சல் நெருப்பாகக் காயுது. சளி இழுக்கிற சத்தமும் கேக்குது." ஆத்திரத்துடன் விமலா கவலையாகச் சொன்னாள்.

"ஏன் மருந்தெதுவும் குடுக்கேல் லையோ?" என்றவாறு குழந்தையின் நெற்றி மீது கை வைத்துப் பார்த்தான். அப்போதுதான் அவனிலிருந்து எழுந்த வாசனை, அவன் குடித்திருப்பதைக் காட்டிக் கொடுத்தது.

கோபத்துடன் நிமிர்ந்து கணவனை அப்போதுதான் நன்கு அவதானித்தாள். கண்கள் சிவப்பேறி அவன் குடித்திருப்பதை மேலும் உறுதி செய்தது.

"உங்களுக்கு எத்தினை தடவை சொல்லுறது குடிக்க வேண்டாமென்று. ஓம், ஓமென்று சொல்லுறியளே தவிர பாழாப்போன இந்தக் குடியை விடுகிறியளே இல்லை. நீங்கள் இப்படிக் கண்மண் தெரியாமல் குடிச்சிட்டு வாறியள். உங்களுக்கு ஒன்று நடந்தால் எங்களுக்கென்று இங்கை யார் இருக்கினம்?"

கோபந்தீரக் கத்தினாள் விமலா.

"பிள்ளைக்குக் காய்ச்சல் காயுது. எப்ப வருவியள் ஆஸ்பத்திரிக்குப் போகலாமெண்டு காத்திருக்கிறன். நீங்கள் குடிச்சிட்டு நிதானமில்லாமல் தள்ளாடிக் கொண்டு வாறியள்?"

தொடர்ந்தும் கத்தினாள். தவராஜா மௌனமாக இருந்தான். விமலா சத்தமிட்டு ஓய்ந்த பின்,

"எழும்பன் விமலா, ஹொஸ்பிட்டலுக்குப் போவம்," என்றான் தவராஜா. ஒப்புக்காகக் கேட்டானே தவிர, அவனால் எழுந்து ஒரு அடிகூட வைக்கமுடியாது என்பது அவனுக்குத் தெரியும். நன்கு குடித்திருந்தான்.

"நீங்கள் இருக்கிற நிலையிலை எங்களைச் சைக்கிளிலை கொண்டுபோய் விழுத்தி உடைக்கவோ?" என கணவனின் நிலை உணர்ந்து சொன்னாள்.

தொடர்ந்தும் இருக்க முடியாதவன், உடை மாற்றாமலேயே கட்டிலில் சரிந்தான். உலகையே மறந்து போனான்.

தவராஜாவிடம் பல நல்ல பழக்கங்கள்



இருந்தபோதிலும், குடிக்கு அடிமையான ஒரேயொரு கெட்டபழக்கமும் அவனிடம் இருந்தது.

அதை நிறுத்தப் பல முயற்சிகள் மேற்கொண்ட விமலா தோற்றுப்போனாள்.

"உங்களைக் குடிக்க வேண்டாமென்று நான் சொல்லேல்லை. அளவாக் குடியுங்கள் என்றுதான் சொல்லுறன்," என குடியை முற்றாக நிறுத்தமுடியாவிட்டாலும் குடிப்பதைக் குறைக்க விமலா முயற்சித்தாள்.

இன்று தவராஜாவுடன் வேலை செய்தவர் பதவி உயர்வு காரணமாக ஒழுங்கு செய்த விழாவில் கலந்து கொண்டதனால் அளவுக்கதிகமாகக் குடித்திருந்தான்.

குழந்தைக்கு அருகில் உறங்கிய விமலாவுக்கு அதன் முனகல் சத்தம் கேட்டதும் விழித்துக்கொண்டாள். முன்பைவிட உடம்பு அனலாகக் கொதித்தது.

பதறிப்போன விமலா கணவனைத் தட்டி எழுப்பினாள். அவன் எழும்பவில்லை. போதை அவனை எழும்ப விடவில்லை.

கணவன் மீது எல்லை மீறிய கோபம் எழுந்தது. "விடிய எழும்புங்க! சொல்லுறன்!" என்று அவள் சொன்னது அவன் காதில் விழவில்லை.

திரும்பவும் குழந்தைக்கான பனடோலைப் பருக்கினாள்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் வரும்போது ஈரச்சேலை கொண்டு உடம்பு பூராவும் துடைப்பது அவசியம் என்பதைக் கேள்விப் பட்டிருந்த விமலா செயற்பட்டாள்.

உடற் சூடு கொஞ்சம் தணிந்தது. விமலாவின் மனவெப்பமும் தணிந்தது.

குழந்தையோடு விமலாவும் உறங்கிப் போனாள்.

தவராஜாவும் விமலாவும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். காதலிக்கும்போது காதலிக்காக எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடுக்க முன் வருபவர்கள், அதே காதலி, மனைவியாக வரும்போது அவளது வேண்டுகோளை மதித்து நடக்கத் தவறிவிடுவார்கள். இது பெரும்பாலானவர்களிடத்து காணப்படுகிற விடயம்.

தவராஜாவும் காதலித்தபோது, தவிர்த்த குடிப்பழக்கத்தை கல்யாணத்தின் பின் தொடர்ந்து கொண்டான்.

பறவைகள் பலவித ஆரவாரங்களுடன் விடியப் போகும்பொழுதை வரவேற்றுக் கொண்டிருந்தன.

"ஐயோ...! என்ரை பிள்ளை!" விமலாவின் அலறல் தவராஜாவின் காதுக்குள் நுழைந்தது.

போதை தெளிந்து, அவசரமாக அடுத்த அறைக்குள் ஓடிவந்தான்.

விமலாவின் மடியில் குழந்தை.

பதட்டத்துடன் குழந்தை மீது கை வைத்தான்.

குழந்தை உயிரற்ற பிணமாக படுத்திருந்தது.

தவராஜாவின் இதயம் வெடித்துச் சிதறியது.

இனி எப்போதுமே குடியைத் தொடமாட்டான். ஆனால் குடியை விடுவதற்குப் பாடமாக ஓர் உயிர் விலையாகி விட்டதை அவனால் தாங்க முடியாதிருந்தது. ■

# இவ்வளவுதான் உறவு...!

**களுவாஞ்சிக்குடி யோகன்-அவுஸ்திரேலியா**

பொதுவாகப் பெண்கள், வயதை வெளியில் சொல்ல விரும்பமாட்டார்கள் என்றொரு அபிப்பிராயம் உண்டு. அதிலும் கல்யாணமாகாத பெண்களென்றால் வயது பற்றி வாய் திறக்கவே கூடாது. அப்படித்தான் கண்மணி அக்காவின் வயதை அறிவதும் அவ்வளவு சுலபமல்ல.

அவருக்கு இந்த டிசம்பர் வந்தால் முப்பத்தேழு முடிவடைகின்றது. அக்காவிற்கு இன்னும் கல்யாணச் சடங்கு கைகூடி வரவில்லை. ஆனால் அவர் அப்படியொன்றும் அழகில்லாதவர் அல்ல. எலுமிச்சம் பழ நிறம், இடைக்குக் கீழே வளர்ந்து தொங்கும் கூந்தல், மாதளிப்பான உடல்வாகு, கெண்டை மீன் கண்கள். இப்படி அழகில் குறையொன்றும் கண்டுபிடித்துவிட முடியாது.

அப்படியென்றால் சீர்வரிசைப் பிரச்சனையோ, என்று எண்ணத்தோன்றும். அப்படியும் வறுமைப்பட்ட குடும்பமல்ல அவர்களது குடும்பம். கிராமமுமல்லாத நகருமல்லாத அந்த ஊரில் மிகப்பெரிய வீடு அவர்களுடையதுதான். காணி-வயல்கள் என்று ஏகப்பட்ட சொத்து. அது தவிர மூத்த இரு சகோதரிகளும் அவுஸ்திரேலியாவில் வாழ்க்கைப்பட்டிருக்கிறார்கள். மூன்று அண்ணன்களும் லண்டனில் குடும்பமாக வசிக்கிறார்கள். தாயாரும் அக்காவும்தான் சொந்த ஊரில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இருந்த சொத்துக்களை ஏற்கனவே மூன்று பெண்களுக்கும் பிரித்துக் கொடுத்தாயிற்று. அக்காவின் பங்கு அப்படியே காத்தபடியிருக்கிறது.

அவர்களின் தகுதிக்கு உள்ளூரில் மாப்பிள்ளை எடுப்பது அவர்களுக்கு அநாகரிகமாகப்பட்டது. இதனால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஒரு மாப்பிள்ளைக்கு வலை வீசிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென ஒருநாள் அக்காவின் தாய் மாமன் ஒருவர் அவர்களது வீட்டிற்கு வந்தார்.

"பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பரமநாதனைப் பேசிப்பார்ப்போம். அவர் கண்மணிக்குப் பொருத்தமாக இருப்பார்." என்று வந்த தாய்மாமன் அபிப்பிராயம் சொன்னார்.

பரமநாதன் வேறொரு மாவட்டத்திற்குச் சொந்தக்காரர்.

நாற்பத்திரெண்டு வயதுப் பிரமச்சாரி, இரண்டு வருடங்களாக அந்த ஊர்ப் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக பணியாற்றிக் கொண்டு வருபவர்; தனிப்பட்ட முறையில் பழகுவதற்கு மிகவும் எளிமையான மனிதர்.

இவரின் நடவடிக்கைகளையும், குணங்களையும் பார்த்துக் கவரப்பட்டுத்தான் கண்மணி அக்காவிற்கு கேட்டுப்பார்க்கலாமென்று அந்த மாமன் சொன்னார். ஏற்கனவே பரமநாதனைப்பற்றி அறிந்து தெரிந்திருந்ததால் அக்காவிற்கும் அவரைப் பிடித்துப் போயிற்று.

"நமது தகுதி தராதரத்திற்குப் பொருத்தமாக அமைவார்," என்று அக்காவின் வீட்டுக்காரர்களும் விருப்பம் தெரிவித்தார்கள். தாய்மாமன் கல்யாணப் பேச்சுவார்த்தைகளில் இறங்கினார். பரமநாதன் பகுதியிலிருந்தும் எதிர்ப்பொன்றும் கிளம்பவில்லை.

மனப் பொருத்தத்திலிருந்து சாதகப் பொருத்தம்வரை நல்லபடியாகவே அமைந்தது. ஒரு நல்ல நாளாக தெரிவு செய்து திருமணத்திற்குத் திகதி குறிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாச் சகோதரிகள், லண்டன் சகோதரர்கள் என அனைவரும் திருமணத்திற்காக ஊருக்கு வந்தார்கள்.

மிகவும் கோலாகலத்துடன் கண்மணி அக்காவிற்குத் திருமணம் நிகழ்ந்து முடிந்தது. அக்காவின் அதிஷ்டமோ என்னவோ திருமணம் முடிந்தகையோடு பரமநாதனுக்குப் பதவியுயர்வும் கிடைத்தது. ஆனால் பதவியுயர்வுடன் இடமாற்றமும் வந்திருந்தது. இதனால் பரமநாதன் குடும்பம் நுவரெலியாவிற்குப் பணிக்காகச் சென்றது.

இந்த நேரம் அக்கா கர்ப்பமாக இருந்தார். இந்தக் கர்ப்பம் தொடர்ந்து அவர் வயிற்றில் தங்கவில்லை. புதிய சூழலோ என்னவோ இடையிலே கலைந்து போயிற்று. அதனால் இரண்டு நாட்கள்வரை அக்கா ஆஸ்பத்திரியிலேயே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பரமநாதன் கொஞ்சம் பயந்ததென்னவோ உண்மை. அதைவிடப் பதறிப் போனார்கள் இதையறிந்த அக்காவின் சகோதரிகள், அவர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து நுவரெலியாவிற்குப் பறந்து வந்தார்கள்.

அவர்களின் வருகையை பரமநாதன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"இப்பொழுது என்ன நடந்துவிட்டது? அவசரப்பட்டு இவ்வளவு பணத்தைச் செலவு செய்துவிட்டீர்கள்?" என்று அவர் தனது மனதிலெழுந்தவற்றைச் சொன்னார்.

"பணம் என்ன பொல்லாத பணம்? எங்களுக்குப் பணம் முக்கியமில்லை, உயிர்தான் முக்கியம். அந்த உயிரைத்தாங்கி நிற்கும் உறவுதான் முக்கியம்!" என்று ஒரு சகோதரி சொன்னார்.

"கண்மணி எங்களுக்குக் கண் மாதிரி. அவளின் உயிருக்கு ஒன்றென்றால் அதை அவ்வளவு சுலபமாய் எங்களால் தாங்கிவிட முடியாது," என்று அடுத்த சகோதரி உணர்ச்சியுடன் கூறினார்.

பரமநாதன் உருகிப்போனார். இப்படியொரு உறவுத் தொடரைப்பெற்றதையிட்டு உண்மையில் அகமகிழ்ந்தார் அவர்.

காலங்கள் கரைந்து இரண்டரை வருடங்கள் மறைந்தன. இந்த இரண்டரை வருடகாலத்தில் ஒருமுறை கர்ப்பம் தரித்துக் கலைந்து போனதோடு சரி. பின்னாளில் அக்கா வயிற்றில் கர்ப்பத்திற்கான சூழ்நிலையே உருவாகவில்லை. இதனால் மிகவும் கலங்கிப்போனார் அக்கா. எங்கே தனக்குப் புத்திர பாக்யம் இல்லையோ என்று பரிதவிக்க ஆரம்பித்தார். அவரது பரிதவிப்பையும் வேதனையையும் பார்த்து பரமநாதனே கண்கலங்கி விடுவார். அவரால்தான் என்ன செய்ய முடியும்? 'உள்நாட்டில் பார்க்க

> "கண்மணி எங்களுக்கு
> கண்மாதிரி. அவள் உயிருக்கு
> ஒன்றென்றால் எங்களால்
> தாங்கமுடியாது."



வேண்டிய அத்தனை வைத்தியங்களும் பார்த்தாயிற்று. இறுதி முயற்சியாக இந்தியா போய் ஒருமுறை வைத்தியம் பார்த்தால் என்ன?' என்றொரு சிந்தனை அவர்களுக்கு உதித்தது.

இதன்படி பரமநாதன்-கண்மணி அக்கா தம்பதியினர் இந்தியாவிற்குப் பயணமாகினர். அங்கு மகப்பேறு மருவத்தில் மிகப்பிரபல்யமான ஒரு லேடி 'டொக்டரை'ச் சந்திக்கக் காத்திருந்தனர்.

அன்றைய பகல் பொழுது இருவரும் சில ஆலயங்களைத் தரிசித்துவிட்டு வந்தார்கள். ராத்திரி அக்காவிற்குக் கொஞ்சம் களைப்பாக வந்தது. அதனால் நேரத்துடன் சாப்பாட்டை முடித்துவிட்டுத் தங்கும் விடுதியில் தங்கிக்கொண்டார்கள். அடுத்தநாள் அதிகாலைப்பொழுது குளித்துவிட்டு டொக்டரிடம் போகவேண்டும் என்று பரமநாதன் மனைவியான அக்காவை எழுப்பினார். அக்கா எழும்பவேயில்லை. நிம்மதியாக- நிரந்தரமாகத் தூங்கிக்கொண்டிருந்தார். ஆமாம்! கண்மணி அக்காவின் உயிர் பிரிந்திருந்தது. பரமநாதன் அடைந்த வேதனை இருக்கிறதே அதை எழுத்தில் வடித்துவிட முடியாது.

எப்படியோ செய்தி சகலதிசைகளுக்கும் விரைந்துபோனது. அக்காவின் சகோதரிகள் வந்திறங்கினார்கள். அவர்கள் எப்படித்தான் இந்தப் பிரிவைத் தாங்கப் போகிறார்களோ? என்று ஏங்கியவாறு பரமநாதன் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

அவர்கள் எந்தச் சலனமுமில்லாமல் அக்காவின் உடலை நெருங்கினார்கள். அக்கா அணிந்திருந்த அத்தனை நகைகளையும் ஒரு சகோதரி கழற்றி எடுக்க ஆரம்பித்தார். அடுத்தவர் பக்கத்தில் கிடந்த கைப்பையை எடுத்துக் கிளற ஆரம்பித்தார்.

இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த பரமநாதன் கொதித்துப்போனார்.

"என்ன காரியம் பண்ணுகிறீர்கள்?" என்று சற்றுச் சூடாகவே கேட்டார்.

"எங்களுக்குச் சேரவேண்டியதை எடுத்துக் கொள்கிறோம்!" என்றார்கள்.

"உங்களுடையதுதான். நீங்கள் தந்த நகை, சொத்து எல்லாம் உங்களுடையதுதான். அதற்காக இப்படியா வந்ததும் வராததுமாக நடந்துக்கொள்வது?" என்று கேட்டார்.

"எங்களுக்குச் சேரவேண்டியதை இப்போது எடுத்தால் என்ன? எப்போது எடுத்தால் என்ன?" என்று ஒரு சகோதரி கேட்டார்.

அவர்களின் நிமித்தம் வைத்திருந்த மரியாதையெல்லாம் நிமிடத்தில் மறைந்து போயிற்று. உயிருக்குயிரான சகோதரியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதைவிட, அவர் அணிந்துள்ள நகையும், பொருளுந்தான் இவர்களுக்குப் பெரிதாகப் போய் விட்டது.

'கண்மணிக்கு ஒன்று நடந்தால் சுலபத்தில் தாங்கிவிட முடியாது' என்ற இவர்களா இப்படி நடந்துக்கொள்கிறார்கள்?'

'நாளைக்கு இவர்களுக்கு ஒரு அமங்கள கரமான நிகழ்வு நடந்தால் இந்தப் பணம், நகை எல்லாவற்றையும் எங்கே காவிச் செல்லப்போகிறார்கள்?'

பலவித வினாக்கள் பரமநாதனின் நெஞ்சிலே வந்து தங்கின.

மனைவி இறந்த துக்கத்தைவிட இந்த வேதனை நெஞ்சைப் பிசைந்தது.

எல்லாவித உணர்வுகளின் அழுத்தத்தோடும் மனைவியின் இறுதிக் கிரியைகளை கவனிக்க ஆரம்பித்தார் பரமநாதன். ■




படிப்பகம்

www.padippakam.com

# நீயா?

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்



"வெள்ளைப் புறாதான்-ஆனால்
வெளிநாட்டுப் புறா"
என்றான் ஒற்றன்.

"கொள்ளை அழகியா
கொல்லும் விஷமா?"
தளபதி வீசினான் வினாவை!

"முள்ளிருக்கும் ரோஜாவில்தானே
கள்ளிருக்கும்"
பவ்வியமாய் பகன்றான் ஒற்றன்

"முள்ளும் குத்தாமல்
ரோஜாவுக்கும் வலிக்காமல்
பறிப்பதில்தானே சுகமிருக்கும்!"
விஷமப் புன்னகை தளபதி உதட்டில்.

"வலித்தால்கூட
எண்ணம் பலித்தால்
அதுவும் ஒரு சுகம்தான்"
ஒற்றன் வித்தை சொன்னான்.

"நீ என்ன உளவாளியா
உளவியல் அறிவாளியா?"

"உளவறிதலுக்கும்
புறத்தையும், அகத்தையும்
அளந்து பார்க்க தெரிந்திருக்கவேண்டும்!"

"வெள்ளைப் புறா
விழுமோ நம் வலையில்?
இந்தப் பருந்துக்கு இரையாக
விருந்துக்கு வருமோ?"

"வலை வீசிப் பயனில்லை
அறுக்கும் கலைதெரியும் அவளுக்கு!"

"வாள் வீச வேண்டுமா
தோள் வலி காட்ட வேண்டுமா?"

"அவசியப்படலாம்
அவளை வசியப்படுத்த!"

ஒற்றன் உரைத்ததும்
தளபதி நகைத்தான்.

"சீறும் சிங்கம் முன்னால்
சின்னப் புறா என்ன செய்யும்?

அதுவும் அவள் பெண்
பெண் என்றால் பேதை!
வேண்டுமானால் போதையாக இருக்கலாம்.
போருக்கு தோதாக
எப்படி இருக்கலாம்?
முட்டாள்! நீ முட்டாள்!"

"பெண்களை அத்தனை
எளிதாக நினைத்துவிடாதீர்கள்!"

"பூ புயலாகும்
பொய்கை பொங்கும் கடலாகுமா?
போடா முட்டாள்
அதெல்லாம் கதைகளில்தான் நடக்கும்!

தளபதியின் அலட்சியம்
ஒற்றனுக்கு கவலையளித்தது!

"புறப்படு ஒற்றா
வசப்படுகிறாளா பார்க்கலாம்!"

"சற்றுத் தாமதித்தால்
உற்று அவள் நோக்கம் அறியலாம்.
தானாகக் கனிந்துவிட்டால்
தடிகொண்டு அடிக்க தேவையில்லையே!"

"சுவை கண்ட அணில்
சும்மா இருக்காது
சுகம் கண்ட உடலும்
அப்படித்தான்!
உடல் கேட்கிறது தீனி
உடன் புறப்பட்டு வா நீ!"

ஒற்றன் தயங்கினான்
"புற்று அறியாமல்
கைவிட்டால் நாசம்தான்"
நினைத்தபடி உடன் சென்றான்.

தேடிச் சென்றவள்
நேர் எதிர்ப்பட்டாள்!
ஒற்றன் ஒதுங்கிக்கொண்டான்.
முற்றிய காமத்தோடு
ஓடிப்போனான் தளபதி!

"விழிகள் என்பது இரு வாள்
கையிலே ஒரு வாள்
மொத்தம் மூன்று வாள்!"

வாளுடன் தோன்றியவள் முன்
வாயினால் புகழ் தொடுத்தான்!

முகத்தினை கரும் துணியால்
மூடித்தான் அவளும் நின்றாள்.

"முழுமதியினை மூடிவைத்த
இரகசியம் என்ன பெண்ணே?
முகிலினை விலக்கு பெண்ணே
முகம் இரசிக்கத்தான் ஆசை கண்ணே!"
தளபதி அவள் முகம் அறிய
விருப்ப விண்ணப்பம் போட்டான்.

"காதலா?" என்றாள்.
"ஆமாம் பெண்ணே,
கடலின் ஆழம்போலே!"

"ஆசையா?" என்றாள்
"ஆமாம் கண்ணே
மாமலையின் உயரம் போலே!"

"முகம் அறிய மோகமா?"
"ஆமாம் கள்ளி
முத்தெடுக்கும் முயற்சிபோலே!"

"கையணைத்து, கால் அணைத்து
கள்ளிருக்கும் இதழ் நனைந்து
மெய்மறக்க வேண்டுமா?"

"கரும்புதின்னக் கசக்குமா?
அதுவும் நீ அடிக்கரும்பு
விரும்ப மனம் மறுக்குமா?"

"கரும்பு தின்ன கூலிவேண்டாம்
என்று நீர் விரும்பலாம்.
கரும்புக்கு கூலி வேண்டாமா?"

"பேசும் கரும்பே!
சுவை புகட்டக் கூலியா?
வீசும் காற்றைத் தவிர
வேறென்ன வேண்டுமானாலும் கேள்
பிடித்துத் தருகிறேன்!"

நெருங்கி வந்தாள்.
உடல் குலுங்கி நின்றாள்.

தளபதியின் மனதில் விழுந்த
சந்தேக விதையை
வெகுண்டெழுந்த மோகம்
இழுத்து விழுங்கியது!

காதலுக்கு கண் உண்டு
காமத்துக்கே கண் இல்லை.
காதலுக்கு புத்தி உண்டு
காமத்துக்குக்கே புத்தி இல்லை!

"கேள் கண்ணே கேள்
தோள் மேலே சாய்!"

சாயவில்லை நேர் நின்று
கேள்வி தொடுத்தாள்.

"சாயலாம், சாய்ந்தாடலாம்
தோயலாம் உடல் தேயலாம்
தேவையொன்று
உம்மால் தீர வேண்டும்!"

"என்ன தேவை கூறு
எனக்குத் தேவை உன் சேவை!"

"என் தேக சேவைக்கு விலை
உம் தேச சேவை!"

"என்ன சொல்கிறாய்?
என்ன கேட்கிறாய்?"

"கோட்டைச் சாவி
என் கைக்கு வந்தால்தான்
வேட்டைக்கு
இந்த மான் சம்மதிக்கும்!"

தளபதி யோசித்தான்.
கடமை உணர்ச்சியை
காமத்திற்கு தீனி கொடுத்தான்.

"இதோ எடுத்துக்கொள்
என்னையும், சாவியையும்!"

முகத்தை மூடிய துணியை
விலக்கினாள்.

முகம் பார்த்த
தளபதி திகைத்தான்
தேள் கொட்டியதுபோல பதைத்தான்.

"நீயா?
மோசக்காரி
வேஷமா போட்டு வந்தாய்!"

"ஆம்" என்றாள்
தளபதியின் மனைவி.

"நாட்டையே விலைபேசும்
உன் கேட்டை அறியவும்
உன் காம வேட்டையை
என் கண்ணால் காணவும்
நான் போட்ட வேஷமடா!

"வெறிபிடித்த மிருகமே
வீழ்ந்து போ!"
கண்ணிமைக்கும் நேரத்தில்
சுழன்ற வாள்
தளபதியின் உயிர் அறுத்தது!

"என் வாழ்க்கையை
வீணாக்கிவிட்டாயேடி"
உயிர் போகும் நேரத்தில் புலம்பினான்.

"விரயமானது, வீணாய் கழிந்தது
உன் வாழ்க்கையல்ல உளுத்தனே!
கானலை நீரென்று நம்பிய மானாகினேன்
இலவமரக் காய் பழுக்கும் என
ஏமாந்த கிளியாகினேன்.
உன்னை என் அரசன் என்று
எண்ணியே கவிழ்ந்து போனேன்"
என்றாள் நகர்ந்து போனாள்.

கானலை நீரென்று எண்ணி கடுவெளி திரியும்
மான் போல்
மாறுறும் இலவு காத்த மதியில்லாக் கிள்ளை போல்
தேனினை உண்டு தும்பி தியங்கிய
தகைமையே போல்
நானுன்னை அரசன் என்றெண்ணி
நாளையும் போக்கினேனே.
பாடல் இடம்பெற்ற நூல்:
விவேகசிந்தாமணி.

# சிந்தியா பதில்கள்

*** சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வி. தவயோகன், பட்டிருப்பு.

குழுக்களும், புழுக்களும் பல்கிப் பெருகி-கெட்ட நாற்றம் வீச போதிய கால அவகாசம் கொடுத்தது யார் குற்றம், என்று நினைத்துப் பார்த்தேன். அந்தக் குழும்து கோபமே வரவில்லை!

❖

*** 'சஹாரா' போட்டியில் இந்திய அணியின் ஆட்டம் எப்படி?**

ஜெ. ஆனந்த், கொழும்பு-09.

என்ன கிண்டலா? பாகிஸ்தான்தான் அநேகமாக கிண்ணத்தை தூக்கும் என்று கூறியிருந்தேன். தப்புத்தான். தோப்புக்கரணம் போட்டாச்...! இந்திய அணியினர் தொடர்ந்து நான்கு போட்டிகளில் புகுந்து தூள் கிளப்பி விட்டார்கள். ஆனாலும் ஐந்தாவது போட்டியில் போதிய விக்கெட்டுக்கள் கையிருப்பில் இருந்தும் இந்திய அணி குவித்த ஓட்டங்கள் போதுமானதல்ல. அதிலும் 15 ஓவருக்குள் நான்கு ஓவர்களில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் விரயமாக்கியது பெரிய அநியாயம். ஐந்தாவது போட்டியில் பாகிஸ்தானின் அதிரடி அமோகம்.

❖

*** டயானாவை துரத்திய புகைப்படக்காரர்களை நீர் கண்டிக்கமாட்டீரா?**

சி. பார்த்திபன், மட்டக்களப்பு.

அப்படி துரத்தித் துரத்தி எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிடாத ஜனரஞ்சகப் பத்திரிகை ஒன்றையாவது உங்களால் காட்ட முடியுமா பார்த்திபன்? முரசும் அதற்கு விலக்கல்ல. இப்போது விபரீதம் ஆகிவிட்டது என்றதும் "நாம் இல்லை. அவர்கள்தான் பழிகாரர்கள்!" என்று தருணம் பார்த்து ஜரணம் அடிப்பது சுத்தமான ஏமாற்றுத்தானே! உங்கள் காதில் பூச்சுற்றும் ஆசையெல்லாம் கிடையாது! நிற்க: டயானா விபத்தானதற்கு புகைப்படப்பிடிப்பாளர்கள் மட்டுமே காரணம் அல்ல: ஆனாலும் டயானா விபத்தில் சிக்கிக் கிடக்கும்போது ஓடி ஓடி புகைப்படம் எடுத்தார்கள் பாருங்கள்! அது தான் பயங்கரமான அநாகரிகம்! ஈரமில்லாத செயல்!

❖

*** 'நேருக்கு நேர்' படத்தில் சூர்யா, விஜய் இருவரில் யார் நடிப்பு பிரமாதம்?**

கி. சுரேந்திரன், கொழும்பு-11.

விஜய்யிடம் தெரிவது அனுபவம்! சூர்யாவிடம் தெரிவது ஆர்வம்! முதல் படத்திலேயே தேறியுள்ள சூர்யாவுடன் கைகுலுக்கலாம். தொடர்ந்து பாஸாகிவரும் விஜய்யை முதுகில் தட்டலாம்.

❖

*** அரசியல் தீர்வு யோசனையில் நீர் காணும் குறை என்னவோ?**

அ. மகேந்திரன், கொழும்பு-07.

நீங்கள் காணும் நிறை என்னவென்று தெரிவிக்குமாறு தாழ்மையுடன் இத்தால் கேட்டுக்கொள்கிறேன்!

❖

*** எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியே எலியாக அடங்கி இருந்தாலும், பாராளுமன்றத்துக்குள் சென்றால் புலியாகி விடுகிறார்களே? அது எப்படி சிந்தியா?**

சி.என். நிரோசா, மட்டக்களப்பு.

எதை வேண்டுமானாலும் பேசலாம், எதிர்க்கவோ, ஏடாகூடமாகிவிடவோ வழியில்லை என்ற நம்பிக்கைதான்! ஒரு நல்ல உதாரணக்கதை பாருங்கள்.

ஜெனரல் ஸ்மட்ஸ்ன்னு ஒருத்தர் தென்னாபிரிக்க பிரதமராக இருந்தார்.

நாடாளுமன்றத்தில் பேச அவருக்கு புள்ளிவிபரம் தேவைப்பட்டது. மறுநாளே பேசியாகவேண்டும்.

செயலாளரைக் கூப்பிட்டார். "நாளைக்கு இந்தப் புள்ளிவிபரங்கள் எனக்குத்தேவை. உடனே நீங்கள் சேகரித்துக் கொடுத்தாக வேண்டும். எதிர்க்கட்சிகளை திணற அடிக்க வேண்டும்!" என்றார்.

செயலாளர் திகைத்துப்போனார். "சேர் இந்தப் புள்ளி விபரங்களை சேகரிக்க குறைஞ்சது ஐந்துவருடம் ஆகும்!" என்றார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நாளைக்கு எனக்குக் கிடைத்தாக வேண்டும்!" என்றார் ஸ்மட்ஸ். ஆனால் செயலாளரால் சேகரிக்க முடியவில்லை.

மறுநாள் நாடாளுமன்றம் கூடியது. புள்ளி விபரங்களை அள்ளிவீசி ஆச்சரியப்பட வைத்தார் ஜெனரல் ஸ்மட்ஸ்.

"எப்படி சேர் இது? இவ்வளவு புள்ளி விபரங்களை ஒரே இராத்திரியில் எப்படிச் சேகரித்தீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் செயலாளர்.

ஜெனரல் ஸ்மட்ஸ் என்ன சொன்னார் தெரியுமா?

"இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரிக்க அரசாங்கத்துக்கே ஐந்து வருடம் ஆகுமென்று சொன்னீர்கள். அப்படியானால் இதெல்லாம் உண்மையா என்று கண்டுபிடிக்க எதிர்க்கட்சிக்கு 15 வருசம் ஆகும். அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்கும்வரை நான் இந்தப் பதவியில் இருக்கப்போவதில்லை. அதுதான் சும்மா அள்ளிவிட்டிருந்தேன்!" என்றாராம்.

❖

*** கமலஹாசனின் 'மருதநாயகம்' எப்போது திரைக்கு வரும்?**

வி. ஜெய்சங்கர், கண்டி.

ஜெய்சங்கர்! உங்களுக்கு ஒரு நற்செய்தி! 'மருதநாயகம்' வரும் பின்னே, 'காதலா காதலா' வரும் முன்னே! கமலும், பிரபுதேவாவும் இணைந்து நடிக்க கமலின் படநிறுவனமே சொந்தமாக தயாரிக்கும் படத்தின் பெயர்தான் 'காதலா காதலா'. பூஜை போட்டாச்...!



கமல் – பிரபுதேவா – செளந்தர்யா – ரம்பா

❖

*** மனித உறுப்புக்களில் அழகானது எது?**

எம். நிலாம்தீன், அளுத்கம.

அழகானது எது என்பதைவிட எதெல்லாம் என்னென்ன உபயோகம் என்று இந்திய அழகிகளில் ஒருத்தர் சொன்னதை சஞ்சிகை ஒன்றில் படித்தேன். நீங்களும் பாருங்கள்:

<u>கண்கள்:</u> தனக்குப் பிடித்தமான நடிகரைப் பார்ப்பதற்கு.

<u>காதுகள்:</u> சில்லி ஜோக்ஸ், கிசுகிசு கேட்பதற்கு.

<u>மூக்கு:</u> தேவை இல்லாத விஷயங்களில் நுழைப்பதற்கு.

<u>வாய்:</u> யாரையாவது வம்புக்கு இழுப்பதற்கு. 24 மணிநேரமும் எதையாவது சாப்பிடுவதற்கு.

<u>கைகள்:</u> பாய் ஃப்ரெண்ட்ஸை அடிப்பதற்கு.

<u>கால்கள்:</u> அடுத்தவங்க காலை வாருவதற்கு.

<u>இதயம்:</u> உலகில் எந்தக் கொம்பனாலயும் கண்டுபிடிக்க முடியாத ஒரே விஷயம்.

❖

*** சபலிஸ்டுக்கள் எப்படி இருப்பார்கள்?**

ஆர். நிர்மலா, பதுளை.

துறவியும் சிஷ்யனும் காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியிலே ஒரு இடம் சேறும் சகதியுமாக இருந்தது. அந்த இடத்தைத் தாண்டித்தான் போகவேண்டும்.

அங்கே ஓர் அழகான இளம்பெண் ஓரமாக நின்றுகொண்டிருந்தாள். "ஏன் நிற்கிறாய்?" என்று கேட்டார் துறவி.

"அந்தப் பக்கம் போகவேண்டும், எப்படிப் போவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்றாள் அந்தப் பெண்.

"கவலைப்படாதே, நான் உதவி செய்கிறேன்." என்றார் துறவி. அந்தப் பெண்ணை தன் தோளில் சுமந்துகொண்டுபோய் அடுத்த பக்கத்தில் இறக்கிவிட்டார்.

சிஷ்யனுக்கு அதிர்ச்சி. ஒரு துறவி இளம்பெண்ணைத் தொட்டுத் தூக்கிவிட்டாரே. இது சரியா? சரியென்றால் நானே தூக்கிப் போயிருக்கலாமே? அவன் குழம்பிப் போனான்.

துறவியும் சிஷ்யனும் ரொம்பத்தூரம் நடந்துபோய் ஓர் இடத்தில் அமர்ந்தார்கள். சிஷ்யன் இப்போதும் குழப்பத்தில் இருந்தான்.

"என்ன யோசிக்கிறாய்?" என்று கேட்டார் துறவி.

கேட்கக்கூடாது என்று நினைத்ததை எப்படியோ கேட்டுவிட்டான் சிஷ்யன்:"சுவாமி! ஓர் இளம்பெண்ணைத் தொட்டுத் தோளில் சுமந்து நடந்தீர்களே! அது சரிதானா?"

துறவி அமைதியாக அவனிடம் என்ன கேட்டார் தெரியுமா?

"நான் அந்தப் பெண்ணை அப்பவே தோளிலேயிருந்து இறக்கிவிட்டுட்டேனே! நீ இன்னுமா சுமந்து கிட்டிருக்கே?"

❖

*** மிக சமீபத்தில் படங்களில் விறுவிறு படம் ஒன்று சொல்லுங்கள்?**

திருமதி பி. சாவித்திரி, வத்தளை.

'அபிமன்யு.'

❖

*** சமாதான இயக்கம் சார்பாக நடத்தப்படும் வீதி நாடகத்தைப் பார்த்திருக்கிறீரா?**

உ. சலீம், புத்தளம்.

இல்லை, அந்த வீதி நாடகம் பார்க்கச் சென்ற தமிழர்கள் சிலர் புலிகள் என்ற சந்தேகத்தில் தாக்கப்பட்டனர் என்ற செய்தியைப் பார்த்தேன். எனக்கென்ன வாங்கிக்கட்ட ஆசையா சொல்லுங்கள்!

❖

## ஸ்போர்ட்ஸ்

# பாகிஸ்தான் 34 - இந்தியா-20

இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே இதுவரை 58 சர்வதேச ஒரு நாள் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

01.10.1978 அன்று தான் இரு அணிகளும் சர்வதேச ஒருநாள் போட்டியொன்றில் முதன் முதலாக மோதின. அந்தப் போட்டியில் இந்தியா 4 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.

1978ம் ஆண்டு முதல் அண்மையில் நடைபெற்று முடிவடைந்த சஹாரா கோப்பைக்கான போட்டிகள்வரை இரு அணிகளுக்கிடையே நடைபெற்ற 58 போட்டிகளில் 34 போட்டிகளில் பாகிஸ்தானும்,20 போட்டிகளில் இந்தியாவும் வெற்றி பெற்றுள்ளன.4 போட்டிகள் கைவிடப்பட்டன. இவ்விரு அணிகளுக்கிடையேயான போட்டிகள் ஷார்ஜாவில் தான் அதிகம் நடைபெற்றன. இங்கு இவ்விரு அணிகளும் 18 போட்டிகளில் மோதியுள்ளன.

இவை தவிர இந்தியாவில் 11 போட்டிகளிலும், பாகிஸ்தானில் 12 போட்டிகளிலும் கனடா-ரொரண்டோவில் 11 போட்டிகளிலும், அவுஸ்திரேலியாவில் 3 போட்டிகளிலும், பங்களாதேஷ், சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தலா ஒவ்வொரு போட்டிகளிலும் இவ்விரு அணிகளும் மோதின.

# இணைப்பாட்ட சாதனைப் பட்டியல்

சர்வதேச ஒரு நாள் போட்டியில் இணைப்பாட்டச் சாதனைகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

| வீரர்கள் | ஓட்டங்கள் | விக்கெட் | அணி | எதிர் அணி |
|---|---|---|---|---|
| 1. ஜெஃப் மார்ஷ் - டேவிட் பூன் | 212 | 1வது | அவுஸ்திரேலியா | இந்தியா |
| 2. அமீர் சொஹைல் - இன்ஸமாம் உல் ஹக் | 263 | 2வது | பாகிஸ்தான் | நியூஸிலாந்து |
| 3. டீன் ஜோன்ஸ் - அலன் போர்டர் | 224* | 3வது | அவுஸ்திரேலியா | இலங்கை |
| 4. டரில் கலினன் - ஜோண்டி ரோட்ஸ் | 232 | 4வது | தென்னாபிரிக்கா | பாகிஸ்தான் |
| 5. முகமட் அசாருதீன் - அஜய் ஜடேஜா | 223 | 5வது | இந்தியா | இலங்கை |
| 6. ரிச்சி ரிச்சர்ட்சன் - ஜெஃப் டுஜோன் | 154 | 6வது | மே.இ.தீவுகள் | பாகிஸ்தான் |
| 7. ஜெஃப் டுஜோன் - மல்கம் மார்ஷல் | 115 | 7வது | மே.இ.தீவுகள் | பாகிஸ்தான் |
| 8. அடம் பரோரே - லீஜெமோன் | 115 | 7வது | நியூஸிலாந்து | பாகிஸ்தான் |
| 9. போல் ரீபிள் - ஷேன் வோர்ன் | 119 | 8வது | அவுஸ்திரேலியா | தென்னாபிரிக்கா |
| 10. கபில் தேவ் - சையட் கிர்மானி | 126* | 9வது | இந்தியா | ஸிம்பாப்வே |
| 11. விவியன் ரிச்சர்ட்ஸ் - மைக்கல் ஹோல்டிங் | 106* | 10வது | மே.இ.தீவுகள் | இங்கிலாந்து |

# இந்திய அணியில் ரோகன் கவாஸ்கர்

சஹாரா கோப்பைப் போட்டிக்காக கனடா செல்லவிருந்த இந்திய அணி வீரர்கள் தேர்வு மும்பாயில் நடைபெற்றது. இந்தத் தேர்வின் போது முன்னாள் இந்திய கப்டன் சுனில் கவாஸ்கரின் மகன் ரோகன் கவாஸ்கரின் பெயரும் பரிசீலனை செய்யப்பட்டது. இருப்பினும் சஹாரா கோப்பைப் போட்டிக்கான கிரிக்கெட் குழுவில் ரோகனுக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனாலும் ரோகனுக்கு இந்திய அணியில் இணைவதற்கு காலம் அதிகம் இல்லை.



ரோகன் கவாஸ்கரைப் பற்றி சுனில் கவாஸ்கர் கூறியதாவது:

"ரோகனை ஒரு கிரிக்கெட் வீரனாக உருவாக்கியதில் என் பங்கு மிகமிகக் குறைவு. அவன் குழந்தையாக இருந்தபோது, என் பெற்றோரே அவனுடைய கிரிக்கெட் ஆர்வத்தை வளர்த்தார்கள்.

ரோகன் பிறந்தபோதுகூட நான் மேற்கிந்தியத் தீவு அணியுடன் அங்கு விளையாடிக் கொண்டிருந்தேன்.

ரோகன் படித்த பாடசாலையில் அவனது வகுப்புத் தோழி ஒருத்தி ரோகனைப் பார்த்து உன் அப்பா பெயர் என்ன? என்று கேட்டிருக்கிறாள்.

"சுனில் கவாஸ்கர்." என்று இவன் பதில் சொல்ல, அந்தப் பெண்ணால் நம்பமுடியவில்லை. அவளுக்கு ரோகன், சும்மா பொய் சொல்கிறான் என்று எண்ணி, 'என் அப்பா பெயர் கபில்தேவ்' என்று பதில் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

"தற்போது மேற்கு வங்காள அணிக்காக விளையாடி வரும் ரோகன், டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாட வேண்டுமானால், முதல்தர பந்தயங்களில் நிறைய ஓட்டங்களைப் பெற வேண்டும்," என்று தெரிவித்துள்ளார், சுனில் கவாஸ்கர்.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 101

இராமபிரான் விபீடணரிடம், கும்பகர்ணனைப் பற்றிய விபரங்களையெல்லாம் கேட்டறிந்து கொண்டு, விபீடணரை கும்பகர்ணனிடம் அனுப்பிவைத்த சம்பவங்களை கடந்த வாரம் அறிந்துகொண்டோம். விபீடணரைப் போலவே அவர் அண்ணன் கும்பகர்ணனும் நீதி- நியாயங்களுக்கு முக்கியத்துவம் தருபவன் என்பதனையும் இராமபிரான் அறிந்து கொண்டார். இராவணனைப் போன்று அதர்மங்களை முன் நின்று செய்பவனல்ல கும்பகர்ணன் என்று அறிந்து கொண்டமையினால் அவனையும் அழிவிலிருந்து காப்பாற்றிவிட வேண்டும் என்று இராமபிரான் கருதினார். இதற்காகவே, போர்க் கோலம் பூண்டுவந்த கும்பகர்ணனிடம் விபீடணரைத் தூதனுப்பினார்.

நீண்ட நாட்களின் பின்னர் தனது அன்புத் தம்பியைக் கண்டதும் கும்பகர்ணன் உணர்ச்சி வசப்பட்டுவிட்டான். தன்னை நாடி தன் தம்பி வந்த காரணத்தைக் கும்பகர்ணன் ஆரம்பத்தில் தவறாகப் புரிந்துகொண்டான். இராவணனின் பாதை நேர்மையானதல்ல என்று கருதியே அவ்வணியை விட்டுச்சென்றவன், அதே அணிக்கே மீண்டும் திரும்பி வந்துவிட்டானோ என்று கவலைப்பட்டான். இராவணன் எத்தகைய வீரனாக இருந்தபோதிலும்- அழியாவரங்களைப் பெற்றபோதிலும் அதர்ம வழி சென்றமையினால் அழிவது நிச்சயம் என்பதனை நன்குணர்ந்தவன் கும்பகர்ணன். அவ்வாறு அழியவேண்டிய நியதி தனக்கும் உண்டு என்பதனையும் தெரிந்து வைத்திருந்தான். ஆகவேதான் தன்னை நாடிவந்த தன் தம்பியிடம், "எமது அண்ணனின் அடாத செயலால் நமது அரக்கர் இனமே அழியப் போகிறது. அத்துடன் நானும் அழிந்தே ஆகவேண்டும். திருமாலின் அவதாரமான இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்த நீயாவது உயிருடன் வாழவேண்டும். எம்மினத்திலுள்ள இழிந்தோரெல்லாம் அழிந்த பின்னர் இராமபிரானுடன் இலங்கை நகர்வர வேண்டும். புலத்திய மாமுனிவரின் வழி வழி வந்த எமது சந்ததியினரில் எஞ்சியுள்ள நல்லவர்களை வழி நடத்தும் தலைவனாக நீ வரவேண்டும். ஆகவே நீ மீண்டும் அந்த இராமபிரானிடமே திரும்பிச் சென்றுவிடு!" என்றான்.

## இலங்கைக்கு அதிபதி

இதனைக் கேட்ட விபீடணன் ,"அண்ணா! இராமபிரானின் அடைக்கலம் பெற்ற நான் இனிமேல் எக்காரணம் கொண்டும் அண்ணன் இராவணனின் அதிகார வரம்புக்குட் படமாட்டேன். எனக்குக் கிடைத்த அரும்பேறு தங்களுக்கும் கிடைக்க வேண்டும்; இராமபிரானின் அணியில் தாங்களும் என்னைப் போல் இணைந்துவிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கத்தான் நான் தங்களிடம் ஓடோடி வந்தேன். தாங்கள் வந்து சேர்ந்தால், இராமபிரான் எனக்களித்த இலங்கைக்கு அதிபதி என்ற பதவியைத் தாங்களே ஏற்கலாம். தங்கள் கட்டளைகளைச் சிரமேற் தாங்கி பணிபுரிய நான் ஆயத்தமாக இருக்கிறேன். அண்ணா! இராமபிரானும் இதற்குத் தன் சம்மதத்தை நிச்சயம் அளிப்பார்!" என்று கும்பகர்ணனின் தாள் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொண்டார்.

தனது தம்பியின் பெருந்தன்மையை மெச்சிய கும்பகர்ணனின் கண்களில் கடல் போல் கண்ணீர் பெருக்கெடுத்து விபீடணரின் உடலை நனைத்தது. தம்பியைத் தூக்கி மீண்டும் அணைத்தபடி, கூறிய கருத்தை கவியரசர் இவ்வாறு தருகிறார்:

நீர்க் கோல வாழ்வை நச்சி
நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர் கொடாது அங்கு போகேன்!
தார்க் கோல மேனி மைந்த
என் துயர் தவிர்த்து ஆயின்
கார்க் கோல மேனியானைக்
கூடுது கடிதின் ஏகி...!

(யுத்த காண்டம்-1367)

பொருள்:

*"மாலை சூடியமையினால் அழகுபெற்ற மேனியை உடைய மைந்தனே! சிறு பராயத்திலிருந்தே எனை வளர்த்து ஆளாக்கி இன்று போர்க்போலம் பூண வைத்துப் போர்க்களம் அனுப்பி வைத்த அண்ணன் இராவணனுக்காக உயிர் விடாமல், நீரின்மேல் கோலம் போடுவது போன்ற- நிலையில்லாத வாழ்க்கைக்காக இராமபிரானிடம் நான் வந்து சேரப்போவதில்லை. எனது துயரத்தைத் தீர்க்க விரும்புவாயானால் கருமையான மேகத்தைப் போன்ற வர்ணமுடைய அந்த இராமபிரானை வேகமாகப் போய்ச் சேர்வாயாக!"*

***


இராமபிரான் கும்பகர்ணனுடன் போர் புரிய வருமுன்னர் வானரவீரன் நீலன் கும்பகர்ணனுடன் போரிட்டான். வாலிமகன் அங்கதனும் கும்பகர்ணனிடம் தோற்றபின் மாவீரன் அனுமனும் மோதினார். அனுமன் மாபெரும் மலை ஒன்றைப் பிடுங்கி கும்பகர்ணன் மீது வீசினார். அதனைத் தகர்த்தெறிந்தான் கும்பகர்ணன். தொடர்ந்து அதைவிடப் பன் மடங்கு பெருத்த மலையினை கும்பகர்ணனை நோக்கி எறியும் போது, "இதனையும் நீ தாங்கக்கூடிய சக்தி பெற்றிருப்பாயானால் மீண்டும் நான் உன்னுடன் பொருதமாட்டேன்," என்று கூறிவிட்டு அவனைக் குறி பார்த்து வீசினார். ஆனால் அதனையும் கும்பகர்ணன் கரங்களால் பிடித்து உடைத் தெறிந்து விட்டான். இதனால் ஆஞ்சநேயர் போர்க்களத்தை விட்டு வெளியேறினார்.

ஆஞ்சநேயரைத் தொடர்ந்து இலக்குவன் கும்பகர்ணனை எதிர்த்து மிகக் கடுமையாகச் சண்டையிட்டார். இலக்குவனைக் கண்ட கும்பகர்ணன், "இராமபிரானின் தம்பி நீ! அதே போல் இராவணன் தம்பி நான்! ஆகவே இருவரும் ஒருவருடன் ஒருவர் பொருதப் பொருத்தமானவர்களே!" என்று கூறிக்கொண்டு போரிடத் தொடங்கினான். இருவரும் பல நாழிகைகள் போரிட்டனர். வானர வீரர்களும் அசுரப்படைகளை நிர்மூலமாக்கின. ஆனால் இலக்குவனுடன் போரிட்ட வண்ணம் வானரப்படைகளையும் கும்பகர்ணன் பெருவாரியாக அழித்தான்.

## இராமர் போட்ட தடைவேலி

இதற்கிடையில் சுக்கிரீவன் கும்பகர்ணன்

## கும்பகர்ணன் வதை



மீது மிகப்பெரிய மலையைப் பெயர்த்து எறிந்தான். அதனை ஒரு சிறுகல்லைப்போல் பிடித்து பொடியாக்கினான். சுக்கிரீவன் எப்படியோ கும்பகர்ணனின் மூக்கையும் காதையும் அரிந்தான். வெகுண்டெழுந்த கும்பகர்ணன், தனது ஆயுதம் ஒன்றை சுக்கிரீவன் பால் வீசினான். இதனால் சுக்கிரீவன் மயக்கமடைந்தான். அவனைத் தூக்கிக்கொண்டு இலங்கை நகரத்துக்குள் செல்ல கும்பகர்ணன் முயற்சித்தபோது, இராமபிரான் தனது அம்புகளை வீசி பாதையை மறித்துவிட்டார். இதனைத் தொடர்ந்து இராமபிரானுக்கும் கும்பகர்ணனுக்கும் கடும் சமர் ஏற்பட்டது.

ஏற்கனவே பலதடவைகள் அழிந்துபோன அரக்கர் படைகளுக்குப் பதிலாகப் புதிய படைகள் வந்து சேர்ந்தன. அவற்றையும் இராமபிரான் முழுமையாக அழித்தொழித்தார். தனிமையாக நின்ற கும்பகர்ணனிடம் இராமபிரான், "நீ எல்லாம் இழந்து விட்ட நிலையிலுள்ளாய். உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. உன் தம்பி விபீடணன், உன்னைப் பற்றிய விளக்கம் தந்தபோதே உன்னையும் என்னுடன் வந்து சேரும்படி கேட்டேன். ஆனால் உன் பாபம் தொலையாதமையினால் நீ உடன்படவில்லை. உன் கொள்கையை மெச்சுகிறேன். எல்லாம் விதிப்படிதான் நடக்கும். உன்னுடைய விருப்பம் என்ன? உன் நாடு திரும்புகிறாயா?" என்று கேட்டார்.

## அங்கங்கள் அறுந்தன

"ஓர் ஒப்பற்ற வீரன் மற்றொரு வீரனைப் பார்த்துக் கேட்கும் கேள்வியல்ல இது!" என்று கூறிய கும்பகர்ணன் தனது வலக்கையிலிருந்த சூலாயுத்தை இடக்கையில் ஏந்தினான். வலது கையால் ஒரு பெருமலையினைப் பெயர்த்துக் கொண்டு இராமபிரான் அருகில் ஓடிவந்து அவர்மீது இரண்டையும் வீசினான். ஆனால் இராமபிரான் அவற்றைத் தன் கணைகளால் அழித்தார். ஒன்றன்பின் ஒன்றாக இரு கைகளையும் பின்னர் இரு கால்களையும் வெட்டி வீழ்த்தினார். கும்பகர்ணன் நிலத்தில் சாய்ந்தான். அந்நிலையிலும்கூட தனது நாக்கை வெளியே நீட்டி மேகம் முட்ட நின்ற ஒரு மலையை மூச்சின் உதவியால் வளைத்தெடுத்து அதே மூச்சினை வேகமாக வெளியேற்றி, அம்மலையானது பலதுண்டுகளாகி வானரப்படைகளில் மோத வைத்தான். இதனால் பல வானர வீரர்கள் உயிரிழந்தனர். இவ்வீரச் செயலைக் கண்ணுற்ற இராமபிரான் கும்பகர்ணனை வாழ்த்தினார்.

அப்போது கும்பகர்ணன், "மன்னனாக மண்ணில் வடிவெடுத்து வந்த தேவாதி தேவனே! என் அண்ணன் சீதாப் பிராட்டியாரை எப்போது கவர்ந்தானோ அப்போதே எம் குலத்தின் அழிவு நிச்சயமாகிவிட்டது. எம் அண்ணன் மீது கொண்ட கோபத்தால் எக்காலத்திலும் எம் தம்பி விபீடணனை விலக்கி வைத்துவிடாதீர்கள்! தங்கள் தம்பிமாரில் ஒருவனான அவனையும் சேர்த்து ஆதரிக்க வேண்டுகிறேன்! மற்றுமோர் வேண்டுகோள்: மூக்குக், காது மற்றும் கை கால்களையும் இழந்த இந்தக் கோர உருவத்தின் முகத்தை எவரும் காண வேண்டாம். தங்கள் காண்டீபத்தில் கணை தொடுத்து என் தலையை அறுத்து பெருங்கடலுள் அமிழ்த்திவிடுங்கள்!" என்று கூறி பக்தி நிறைந்த கண்களோடு இராமபிரானைப் பார்த்தான்.

இராமபிரான் தனது வலது கரத்தை உயர்த்தி கும்பகர்ணனை ஆசிர்வதித்தார். பின்னர் அவனுடைய வேண்டுகோள்படி தன் கணையால் அவன் தலையைக் கொய்து கடலின் நடுவே அடித்தளத்தில் அமிழ்த்தினார்.

***

## இராஜகுமாரன்

கும்பகர்ணன் மாண்ட சேதியை அறிந்த இராவணன் வாய்விட்டழுதேவிட்டான். பெரும் மனப்போராட்டத்தில் சிக்கித்தவித்தான். சீதாப் பிராட்டியார்மீதான பொருந்தாத பேராசையால் தான் இத்தனையும் விளைந்துள்ளன என்று ஒருபுறம் எண்ணுவான். மறுபுறம், எப்படியாவது அவளை அடைந்துவிடவேண்டும் என்ற பேராசையால் உந்தப்படுவான். சீதைமீதான ஆசை மேலெழுந்தமையினால் தனது அன்புத் தம்பி கும்பகர்ணன் பலியான காரணத்தால் ஏற்பட்ட துயரம் ஓடி மறைந்தது.

இராம-இலக்குமணருடன் போர் புரிய ஒருவர்பின் ஒருவராக பல அரக்க வீரர்களை இராவணன் போர் முனைக்கு அனுப்பிவைத்தான். அதிகாயன் என்பவன், இராவணனுக்கும் தானியமாலினி என்பவளுக்கும் பிறந்த மகன்; முதலாவதாகப் போர்முனை சென்றான். மாபெரும் வீரனான அதிகாயனுடன் அங்கதனின் தோள்மீது ஏறிவந்த இலக்குவன் பிரம்மாஸ்திரத்தை ஏவி வீழ்த்தினான். தொடர்ந்து தாருகன், தேவாந்தகன், திரிசிரன் (மூன்று தலைகளை உடையவன்), நாரந்தகன், போர்மத்தன், வயமத்தன், கும்பன், நிகும்பன் ஆகியோர் போர்க்களம் சென்ற அனைவரும் மாண்டனர்.

இலங்கை நகரெங்கும் அழுகுரலெழுந்து வான்முட்டியது. இதனால் இராவணன் மகனான மேகநாதனெனும் இந்திரசித்து வெகுண்டெழுந்து தன் தந்தையிடம் சென்றான். இத்தனை அனர்த்தங்கள் நேர்ந்தும் தனக்கு அறிவிக்காமல் போனதன் காரணம் என்ன என்று வினவினான். அப்போது அவனுடைய சிற்றன்னையான தானியமாலினி, இராவணன் காலடியில் கிடந்து அழுது புரண்டு கொண்டிருந்தாள். இராவணன் தன் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு "மகனே இந்திரசித்து! உன் தம்பிமாரும் உன் சித்தப்பா கும்பகர்ணனும் வேறுபல மாவீரர்களும் போரில் மாண்டு போய்விட்டனர். நீ உடனே போர்க்களம் புறப்படு! அந்த இராமனின் தம்பியாம் இலக்குமணனை நாகஸ்திரத்தால் வீழ்த்துவாயானால் அந்த இராமனால் எதுவும் செய்ய முடியாமற் போய்விடும்!" என்ற கூறியதும் புயல்வேகத்தில் இந்திரசித்து புறப்பட்டான்.

இந்திரசித்துவுடன் இராமபிரானின் அணியிலுள்ள பலரும் போரிட்டனர். இலக்குவனுக்கும் இந்திரசித்துவுக்குமிடையில் பெரும் போர் மூண்டது. மாயாஜால வித்தைகள் தெரிந்தவனான இந்திரசித்து, தன் உடலை மேக மண்டலத்துள் மறைத்து நின்று நாகஸ்திரத்தை இலக்குமணன்மீது ஏவினான். அப்பாணம் பட்டதும் இலக்குவன் உடல் மண்ணில் சாய்ந்தது. அரக்க வீரர்கள் ஆர்ப்பரிக்க, வானரவீரர்களும் இராமபிரான் முதலானோரும் கவலைக் கடலுள் மூழ்கினர். இதேவேளை வானில் இருள் மேகம் மூடுவது போன்ற தோற்றம் தெரிந்தது. சற்று நேரத்தில் இலக்குவன் கிடத்தப்பட்டிருந்த இடத்தின் அருகே ஒரு பெரும் கருடப் பட்சி வந்து நின்றது. (தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 99

**சரியானவிடை:-** அண்ணன்–தம்பி அல்லது சகோதரர்கள்.

1. எஸ்.திலகவதி, தன்மதுரை-கீ.க., நோர்வூட்.
2. எஸ்.டி.றன்சா, 4/2 ஹதிறவலான, வெல்லவ.
3. பா.ஹேமலதா, 3/14,1/1 பின்வத்த றோட், தெகிவளை.
4. பாதிமா றிம்லா, 20/4 குறே வீதி, களுத்துறை (தெற்கு).
5. ஆர்.சேகரன், ஐயங்கேணி, செங்கலடி.

**போட்டி இல. 101** கேள்வி:- இராவணன் முதலானோரின் முன்னோரான முனிவரின் பெயரைத் தருக?

ஒக்டோபர் 4 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி–இல.101, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.

# அனில் அண்ணாவும் மகாராணியும்

### காதிலை பூ கந்தசாமி

**அனில் அண்ணா:** வாரும் செயலாளரே, கையில் என்ன கண்டன அறிக்கையோ?

கட்சிச் செயலாளர்: அழைப்பாணை!

**அ.அ:** நாம் என்ன ஆட்சியிலா இருக்கிறோம் அழைப்பாணை விடுவதற்கு? உமக்கு அந்த நாள் ஞாபகம் போகவில்லைப் போலும்!

க.செ: மன்னிக்கவேண்டும், இது தங்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணை!

**அ.அ:** யாரிடமிருந்து,

க.செ: மகாராணியிடமிருந்து!

**அ.அ:** காரணம்?

க.செ: கணக்கற்றவையாம்!

**அ.அ:** பிணக்கையெல்லாம் கணக்காக்கி விட்டார்கள் போலும்.

க.செ: தாங்கள் சென்றுதான் ஆகவேண்டும்!

**அ.அ:** செல்லாவிட்டால்?

க.செ: தங்கள் குடியுரிமையே செல்லாமல் போய்விடும்!

**அ.அ:** பறித்துக்காட்டியவர்கள் நாங்கள். எங்களுக்கே நாள் குறித்துக் காட்டுகிறார்கள். ம்.. புறப்படலாம். பரிவாரங்களை தயார்படுத்தும். பத்திரிகையாளர்களை வரவழைத்து புகைப்படம் பிடிக்கச்சொல்லும்.

(மகாராணியிடம் பரிவாரங்கள் சகிதம் செல்கிறார்கள்).

**மகராணி:** வரவேண்டும், வரவேண்டும், தாங்கள்தான் அனில் அண்ணர் என்பவரோ?

**அ.அ:** தாங்கள்தான் இங்கு மகாராணி என்பவரோ?

ம.ரா: நாற்காலி போன பின்பும் நாவடக்கம் கற்கவில்லை!

**அ.அ:** நாவீச்சு; அதுதானே அரசியலின் உயிர்மூச்சு. அதிகாரம் போனாலும் அது போகாது நம்மைவிட்டு!

ம.ரா: அழைத்தது ஏன் என்று தெரியுமா?

**அ.அ:** அழைத்தது அல்ல, அலையவைப்பது, அலையவைத்து களைக்க வைப்பது என்று கூறுங்கள்.

ம.ரா: நிறுத்தும்! மறுபடி ஆட்சியைப் பிடிக்க சூழ்ச்சிகள் செய்கிறீர்கள். கடைகளில் உள்ள பாண்களை எல்லாம் வாங்கிக்கொண்டு ஊர்வலம் நடத்தி, உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி வருகிறீர்கள்.

**அ.அ:** அதற்காகத்தான் உண்ணாவிரதம் நடத்தி உணவுச் சேமிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோமே.

ம.ரா: பட்டினி போட்டு மக்களை மெலிய வைத்து படைக்கு ஆள்திரட்டுவதை தடுக்கிறீர்கள். இது மன்னிக்கமுடியாத குற்றம்.

**அ.அ:** இட்டுக்கட்டப்பட்ட குற்றச்சாட்டு.

ம.ரா: இல்லை, உங்கள் குட்டு உடைக்கப் பட்ட குற்றச்சாட்டு.

**அ.அ:** போரிலே தோல்வி, அதனால் போடுகிறீர்கள் எங்கள்மீது பழி!

ம.ரா: தோல்வி என்று யார் சொன்னது? வீழ்ச்சிதான் எழுச்சியின் முதற்படி!

**அ.அ:** ப்பூ.. இதைத்தான் முன்னர் நாங்களும் சொல்லிக்கொண்டிருந்தோம். நீங்கள் அப்போது நகைத்துக் கொண்டிருந்தீர்கள்!

ம.ரா: எங்களோடு பகைத்துக்கொண்டே தான் இருக்கப்போகிறீர்களா?

**அ.அ:** நீங்களும் எங்களை உதைத்துக் கொண்டுதான் இருக்கப்போகிறீர்களா?

ம.ரா: எங்களை ஒழித்துக்கட்டவே நினைத்தவர்கள் நீங்கள்?

**அ.அ:** வீண்வாதம் எதற்கு?

ம.ரா: அதைத்தான் நானும் கேட்கிறேன். வீண்வாதம் வேண்டாம். விவாதம் செய்யலாம். தயாரா நீங்கள்?

**அ.அ:** எங்கே, பகிரங்க அரங்கில்தானே?

ம.ரா: இல்லை, பாராளும்மன்ற ஆய்வுக் குழுவிலே!

**அ.அ:** அதனால் நமக்கென்ன இலாபம்!

ம.ரா: நாடென்ன செய்தது நமக்கு? என்று கேளாதீர்கள். நாம் என்ன செய்தோம் அதற்கு? என்று கேளுங்கள்.

**அ.அ:** நல்லது, நம்மிடம் ஆட்சி வந்தபின்னர் நீங்கள் இந்த கேள்வியை கேட்டுக்கொள்ளுங்கள். நீங்கள் மறந்தாலும் நாம் அப்போது நினைவூட்டுகிறோம்.

ம.ரா: நாற்காலியைப் பிடிக்க ஒற்றைக் காலில் நிற்கிறீர்? நாம் நினைத்தால் உம்மை உருட்டிவிட்டு விடுவோம்.

**அ.அ:** அப்போதும் ஊர்ந்து வந்தாவது ஆட்சியைப் பிடிப்போம்.

ம.ரா: நீர் ஊர்ந்து வந்தால் உங்கள் கடந்தகால நடவடிக்கைகளை நாம் கூர்ந்து பரிசீலிப்போம். ஊர்ந்துவரும் உங்களைத் தூக்கி கூண்டுக்குள் போட்டு விடுவோம் ஜாக்கிரதை!

**அ.அ:** ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்க வேண்டாம்.

ம.ரா: நீங்கள் அதைக் கோழிக் குஞ்சாக்கி உங்கள் கொல்லைப்புறத்தில் வைத்திருந்தீர்கள்!

**அ.அ:** அந்தக் கோழிக்குஞ்சையும் நீங்கள் கொத்துக் கறியாக்கிவிட்டீர்கள்.

ம.ரா: நிறுத்தும், கொலையுகம் உங்கள் காலத்தில்தான் இருந்தது.

**அ.அ:** இப்போது நடப்பதென்ன கலை யுகமா?

ம.ரா: அல்ல, களயுகம்! பல இடம் பிடித்தோம். கொடி பல பொறித்தோம். இன்னும் பொறிப்போம். வெற்றியைக் குவிப்போம்.

**அ.அ:** கற்பனை இராச்சியம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். வெற்றி தோல்வி விபரங்கள் என் விரல் நுனியில் இருக்கின்றன!

ம.ரா: நீர் வைத்திருப்பது கட்சியா? அல்லது இராணுவ இரகசியம் அறியும் பட்சியா?

**அ.அ:** அன்று நீங்கள் செய்த பணியை இன்று நாங்கள் தொடர்கிறோம்.

ம.ரா: எங்கள் காலடிகளை எண்ணுகிறீர்களோ?

**அ.அ:** ஆம்!

ம.ரா: நாங்களே எண்ணி எண்ணித்தான் எங்கள் காலடிகளை எடுத்துவைத்துக் கொண்டிருக்கிறோம்.

**அ.அ:** எங்கே, பூங் குளத்தில்தானே!

ம.ரா: இந்தக் கேலிதானே வேண்டாம் என்கிறேன்.

**அ.அ:** கேலி எப்போது செய்தோம்? கேள்வி தான் கேட்கிறோம்?

ம.ரா: என்னவென்று?

**அ.அ:** உங்களால் முடியுமா, முடியாதா என்று?

ம.ரா: முடியாது என்று சொன்னால் நீர் கூறும் யோசனை என்னவோ?

**அ.அ:** ஹி.ஹி.ஹி... ஆட்சியை எங்களிடம் தந்துவிடுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

ம.ரா: எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல, இனி நீங்கள் எந்த நூலகத்தை கொளுத்துவீர்கள்?

**அ.அ:** நாங்கள் கொளுத்தியதால்தான் இன்று நீங்கள் அதைக் கட்டிக்கொடுக்கப்போவதாக சொல்லி பெயர் எடுக்க முடிகிறது. நன்றியில்லாமல் நம்மை இகழ வேண்டாம்.

ம.ரா: போரே வேண்டாம் என்கிறீரா?

**அ.அ:** அப்படி எப்போது சொல்லியிருக்கிறோம்? போர் நடத்த உங்களுக்கு தெரியவில்லை என்கிறோம்.



ம.ரா: போரும் நடத்த வேண்டும், எங்களுக்கு பேரும் கிடைக்கக்கூடாது, அது தானே உங்கள் கொள்கை.

**அ.அ:** போரும் நடத்துங்கள், பேச்சும் நடத்துங்கள். குண்டும் போடுங்கள், அவர்களைக் கண்டும் பேசுங்கள் என்கிறோம்.

ம.ரா: சட்டைக் கொலரைப் பிடித்துக் கொண்டு சௌக்கியமா என்று கேட்கச் சொல்கிறீர்கள். கழுத்தில் கத்தியால் உரசிக்கொண்டே கை குலுக்கச் சொல்கிறீர்கள்? நடக்கக்கூடியதுமல்ல, நாகரிகமும் அல்ல!

**அ.அ:** நடப்பது யுத்தம், இதில் என்ன நாகரிகம் வேண்டிக்கிடக்கிறது? முயன்றுதான் பாருங்களேன்.ஹிஹிஹி.

ம.ரா: நீங்கள் தோள் கொடுப்பீர்களா?

**அ.அ:** பல்லக்கிலோ போகப்போகிறீர்கள் நாங்கள் தோள் கொடுப்பதற்கு? ஹெலிகொப்டரில்தானே போகப்போகிறீர்கள்.

ம.ரா: நாம் கேட்டது உங்கள் ஒத்துழைப்பை?

**அ.அ:** ஒத்துழைப்பு, உடன்பாடு, புரிந்துணர்வு, நாங்கள் என்ன ஒரே கட்சியா? நடப்பதென்ன எங்கள் ஆட்சியா? போர் நடத்தி பேர் எடுக்கும் உங்கள் ஆட்சி எங்களையும் பீஸ் பீஸாக்கி போட்டுவிடாது என்பதற்கு யார் சாட்சி? போர் நடக்கிறது. பொருள் விலை உயர்கிறது! நாம் ஏன் தரவேண்டும் ஒத்துழைப்பு? நீங்கள் என்ன நாங்கள் ஆட்சிக்கு வர உபசாரம் செய்வீர்களா? அடுத்த தேர்தலில் எங்களுக்கு உபகாரம்தான் செய்வீர்களா? தெருத் தெருவாய் ஊர்வலம் நடத்தும் எமது கட்சி உங்கள் ஆட்சியை மாற்றாமல் ஓயாது ஜாக்கிரதை.

ம.ரா: (கைகளைதட்டி) யாரங்கே? கடந்த கால ஏடுகளைப் புரட்டி இவர்கள் வண்டவாளங்களை தண்டவாளங்களில் ஏற்றி உருட்டிவிடுங்கள்! ஹாஹாஹா.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு 11
436331

வயிற்றுக்கு தினமும் திருவிழாதான். தினுசு, தினுசாக உள்ளே தள்ளிக்கொண்டே இருப்பார்கள். சண்டைக்கு பிந்து, சபைக்கு முந்து என்ற பழமொழி மட்டும் இவர்களுக்கு பொருந்தவே பொருந்தாது. சண்டைக்கும் முந்தி நிற்பர், சபைக்கும் முந்தி நிற்பர். இவர்களுடன் சண்டை போடுபவர்களும்பந்தி போடுபவர்களும்தான் களைத்துப்போய் பிந்தி நிற்பர்.

ஆமாங்க, இவர்கள் சுமோ மல்யுத்த வீரர்கள். மலைகள் மோதிக்கொள்ளும் சுமோ மல்யுத்தத்தில் உடல் எடைதான் பிரதானம்.மாமிச மலைகளுக்குத்தான் மரியாதை. உணவுக் கட்டுப்பாட்டைப் பற்றி இவர்களிடம் போதிக்கச் சென்றால் உருப்படியாக திரும்பிவரமாட்டீர்கள்.

உடல் எடைக்கு ஏற்ப தரம் பிரிக்கப்பட்டு மோதல்கள் நடக்கும்.

மேடை அதிர மலைகள் மோதி உருளும் காட்சியைக் காண இரண்டு கண்கள் போதாது.

படத்தில் இருப்பவர்கள் ஜப்பான் நாட்டு சுமோ வீரர்கள். சுமோ பயிற்சிக்கூடத்தில் தங்கள் எளிமையான (?!) காலை உணவை ஒருகை பார்க்கிறார்கள். அதிகாலை ஐந்து மணிக்கு இந்த மலைகள் துயில் எழும். பகல் 11 மணிவரை கடும் பயிற்சி. பின்னர் காலை உணவு. அதுவே இரவுவரை தாக்குப் பிடிக்குமாம். இடைக்கிடையே நொறுக்குத்தீனிகள் மற்றும் பானங்கள். இரவுதான் பெரும்தீனி உள்ளே இறங்கும். அது காலை உணவைவிட பலமடங்கு. ஏப்பம்விட்டு விட்டு விட்டு அப்படியே மல்லாந்து சாய்ந்து குண்டோதரத் தூக்கம். நன்றாகத் தூங்கினால்தான் குண்டர்கள் ஆகலாம் என்பதால் செம தூக்கம் போடுவார்கள்.

சுமோ மல்யுத்தம் கி.பி. 858ல் அறிமுகமானது. இதனை அறிமுகப்படுத்தியவர் ஜப்பான் சக்கரவர்த்தி கிய்வா. கி.பி. 1600களில் தான் மவுசு பெற்று நவீன வடிவம் பெற்றது.

மோதலில் உருண்டுபுரளும்போது காயம் ஏற்படாமல் தடுப்பது கொளு கொளு தசைகள்தான். தலைமயிரையும் நீளமாக வளர்த்து கொண்டை போட்டிருப்பர். சண்டையில் மல்லாந்து விழும்போது தலையில் தாக்கம் ஏற்படாமல் கொண்டை காத்துக்கொள்ளும். ஒரு சுவாரசியமான சங்கதி. இவர்களுக்கு காதலிகள் கிடைப்பதுதான் பயங்கர கஷ்டம். இவர்கள் காதல் பார்வை வீசினாலே போதும் பெண்கள் காணாமல் போய்விடுகிறார்களாம். அப்படியும் எதையும் தாங்கும் துணிச்சலுடன் முன்வருவோரும் இல்லாமல் இல்லை.

## கலையணி





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

அமெரிக்காவின் தேசியச் சுவடிகள் நிலைக்களத்தினால் வோஷிங்டனில் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. அக் கண்காட்சிக்கு வந்தோர் இந்தச் சப்பாத்துக்களை பார்த்து வியந்து போயினர். இது காலணியா? அல்லது கலையணியா? என்று பிரமித்தனர்.

அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையின் உருவப்படமும் சப்பாத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல கலை வேலைப்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த கலைநயமான சப்பாத்துக்களை வடிவமைத்தவர்கள் ஷெப்பெரினோ மற்றும் எவிறிபோல் என்னும் இரட்டையர்கள். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டுவிற் ஐசன் ஹோவருக்கு அன்புப் பரிசாக இதனை வழங்கியிருந்தனர்.

அதனை இத்தனை காலமாக பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறது அமெரிக்க தேசிய சுவடிகள் நிலைக்களம். அமெரிக்க ஜனாதிபதிகளாக இருப்போருக்கு உயர் புள்ளிகள் மட்டுமல்ல பாமர மக்களும் பரிசுகள் வழங்குவது வழக்கம். இந்தப் பரிசு அபூர்வமானது என்பதால் ஜனாதிபதி டுவிற் இதனை காலம் காலமாக பத்திரமாக வைத்திருக்கக்கூடிய இடத்தில் ஒப்படைத்து விட்டார்.

## சவாரி



## குண்டோதரர்கள்




மொனாகோ நாட்டின் முடிக்குரிய இளவரசர் அல்பேட் ஒரு விளையாட்டுப் பிள்ளை. ஆறு வயதாக இருக்கும்போது தான் ஒரு போர் வீரனாக அல்லது பெரும் பண்ணைகளில் மந்தை களை மேய்க்கும் குதிரை வீரனாக சென்று போய் வரவேண்டும் என்று ஆசைப்பட்டாராம். ஆனால் அதெல்லாம் வெறும் கனவாகி, உத்தியோக தோரணைக் கூட்டங்களிலும் அரச கடமைகளிலும் பங்கு பற்ற வேண்டியிருக்கிற தாம். (ரொம்பத்தான் கவலைப்படுகிறார்).

மொனாகோ நாட்டு இளைஞர்களைப் போல இள… வரசர் அல்பேட் இரவு… நேர உல்லாச விடுதி… களில் காதல் களியாட்… டங்களில் ஈடுபடுவார். அத்துடன் மேடைகளில் பாடல்களையும் பாடு… வார். இவருடைய தாயார் பிரபலமான ஹொலிவுட் தாரகை கிறேஸ் கேலி ஆவார். இவர் 1982ல் காலமான… தும் அல்பேட்டின் சகோதரி கரோலின் தனது தாயாரின் இடத்தை நிரப்ப முயன்று வருகிறார். தயாரின் இசை ஆர்வம்தான் அல்பேட்டையும் ஒரு பாடகராக மாற்றியிருக்கிறதாம்.

ஒலிம்பிக் போட்டியில், மொனாகோவின் பனிச்சறுக்கு வண்டி ஓட்டக்காரர்களின் கப்டனாக இருந்த இளவரசர் அல்பேட், பனியில்லாத கோடை காலங்களில் செயற்கையாக அமைக்கப்பட்ட சறுக்குப் பாதையில் பயிற்சி எடுத்து வருகிறார்.

அதற்காகவே பல கோடி ரூபாய்களை தண்ணீராக கொட்டி சறுக்குப் பாதையும், சூப்பர் வண்டியும் தயாராகி உள்ளன. வண்டியில் முன்னால் இருந்து செலுத்துபவர் தான் மொனாகோ இளவரசர். மக்கள் பணத்தில் விளையாடுகிறார்கள். இவரது சகோதரியும் மொனாகோ இளவரசியுமான கரோலின் டயானாவின் உயிர்த்தோழிகளில் ஒருவர்.

## எந்தமரத்திலோ



எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? என்று மட்டும் பயந்தால் போதாது. எந்த மரத்தில் எந்தப் பாம்பு இருக்குமோ என்றும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

மரத்தோடு மரமாக, மரத்தில் முளைத்த கொம்பு மாதிரி காணப்படுகிறது பாருங்கள் பாம்பு. இது பச்சை மலைப்பாம்பு என்று அழைக்கப்படுகிறது. மலைப்பாம்பு குடும்பத்தைச் சேர்ந்த பாம்பாக இருந்தால்கூட, ஏனைய மலைப்பாம்புகள் போல இவை பருமனாக இருப்பதில்லை. ஆனால் உருவத்தைப் பார்த்து குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள்.

முயல்குட்டிகள், பன்றிக்குட்டிகள், மான்குட்டிகளைக் கண்டால் அப்படியே பாய்ந்து கழுத்தில் மாலையாகச் சுற்றி இறுக்கிக் கொள்ளும். அவற்றின் எலும்புகள் எல்லாம் உடைந்து நசிந்துபோனதும், அப்படியே விழுங்கி ஏப்பமிட்டுவிடும். தன்னிடம் மாட்டிக்கொள்ளும் பிராணிகளை எப்படி வளைத்து இறுக்கும் என்பதை, மரத்தை தன் உடலால் வளைத்து இறுக்கிப் பிடித்திருக்கும் தன்மையை கொண்டே அறிந்து கொள்ளலாம்.

அணைப்பிலே பல ரகம் உண்டு. இது மரண அணைப்பு. இந்த வகைப் பாம்புகள் அவுஸ்திரேலியாக் கண்டத்தின் வடகிழக்கே அமைந்துள்ள குயின்ஸ்லாந்து மாகாணத்தில் உள்ள பிரதேசத்தில்தான் அதிகம் காணப்படுகின்றன. பாம்புகள் மட்டுமல்ல உலகில் வேறெங்கும் காணவே முடியாத வித்தியாசமான பிராணிகளும் அங்கு காணப்படுகின்றனவாம்.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



**கிஷாந்தி–நிஷாந்தி (இரட்டையர்) -24.09.97**

ராசயோகம்-மலர்விழி தம்பதியினரின் கண்மணிகள் கிஷாந்தி–நிஷாந்தி இருவரும் தமது இரண்டாவது பிறந்த நாளை 24.09.97 அன்று கொழும்பில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள்.
உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் இரு கண்மணிகளும் தமிழும் சுவையும் போல வாழ்வாங்கு வாழ வசந்த வாழ்த்துக்களை வழங்கினார்கள்.

## தனிநாடு



செவ்வாய் கிரகத்திலும் விண்கலம் குடு குடு என்று ஓடித்திரியும் காலம் இது. விஞ்ஞான முன்னேற்றங்களும் தொலைத் தொடர்பு, செய்தித் தொடர்பு ஊடகங்களும் வீடுகளுக்குள் புகுந்துவிட்டன. உலக நடப்புக்கள் விரல் நுனிகளுக்கு வந்திருக்கின்றன.

படத்தில் இருப்பவர்களும் தற்கால மனிதர்கள்தான். ஆனால் வாழ்வது என்னவோ கற்கால யுகத்தில் போல் இருக்கிறது. செய்திகளை அறிய வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. ஆனால் மின்சாரம் கிடையாது. பற்றரிகள் எடுத்துச்செல்ல கடும்தடை. இவர்கள் வாழ்வது வன்னியில்! இலங்கையில் இருந்து தனியாகிவிட்ட நாடு போல மாறிவிட்ட பகுதிகளில் வன்னியும் ஒன்று. வானொலி கேட்க சைக்கிள் டைனமோவில் இருந்து மின்சாரம் பெறப்படுகிறது. சைக்கிளை தலைகீழாக வைத்து ஒருவர் சுழற்ற ஏனையோர் அவர் அருகே கூடியிருந்து வானொலி கேட்கிறார்கள். முன்னர் இப்படித்தான் யாழ் குடாநாட்டு மக்களும் வானொலி கேட்டனர். பொருளாதார தடைகளுக்கு மத்தியிலும் நம்பிக்கையோடு வாழப் பழகிக்கொண்டிருக்கின்றனர். இருப்பதை வைத்து சமயோசிதமாக வாழ்வதற்கு கற்றுக்கொள்கிறார்கள். இலங்கை ஒரே நாடு என்று சொன்னால் இவர்கள் நம்புவார்களா சொல்லுங்கள்?!



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை லாவிநிய பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லவா, நாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் செப்டம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்